
# திருக்கோயில்

செப்டம்பர் & அக்டோபர் 1995
விலை ரூ. 6-00





வல்லக்கோட்டை அருள்மிகு கோடையாண்டவருக்குக் கோடையாண்டவர் வார வழிபாட்டுக் குழுவினரால் வெள்ளி வேல் மற்றும் வெள்ளிக் கவசம் வழங்கும் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு ஆர். சந்தானம் இ.ஆ.ப., அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப., தவத்திரு துர்க்கை சித்தர் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முகப்பு :

அருள்மிகு சுவாமி ஐயப்பன்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை—600 043,

தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர் :
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை : 37 | திருவள்ளுவர் ஆண்டு 2026 யுவ ஆண்டு புரட்டாசி-ஐப்பசி 1995 செப்டம்பர்-அக்டோபர் விலை ரூ. 6—00 | மணி : 9 & 10 |
|---|---|---|

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்,

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்.

உயர்திரு **ஆணையர்** அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600 034.

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | .. | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | .. | ரூ. | 36-00 |
| ஆயுள் | .. | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்,
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

## பொருளடக்கம்

எல்லாம் நாராயணனே
—திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப.

மதுரை திருவிழாக்கள்
—எஸ். சந்திரசேகர பட்டர்

ஒடுக்கத்துத் தம்புரான்
—முருகதாஸ் தீர்த்தபதி

கங்கா ஸ்நானம் அல்லது தீபாவளி
—டாக்டர் சிவப்பிரியா

சென்னை ஸ்ரீகாளிகாம்பாள் திருக்கோயில்
—பி.வி. கிரி

அறுகம்புல் மகிமை
—டாக்டர் டி. செல்வராஜன்

சகலகலா வல்லவன்
—அருள்முருக சௌந்தரராச அடிகள்

அன்பே தெய்வம்
—திருமிகு வை. பழநிசாமி இ.ஆ.ப.

பதினாறு
—சேது. சிவா

திருக்கோயில் வழிபாடும் உட்பொருள் விளக்கமும்
—தி. இராசமாணிக்கம்

கயிலாயச் சிறப்பு
—ப. சிவநேசன்

கபீர்தாஸ்
—ஆ. சுப்பிரமணியன்

தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள்
—(தமிழில்) கவிஞர் முருகுவண்ணன்

நின்றவூர்ப்பூசல் அன்பன்
—திருமதி உமாராஜன்

இறைவன் திருவடிப் பற்று
—மயிலை சிவஞானஜோதி சிவசக்தி அம்மையார்.

## எல்லாம்

# நாராயணனே!



**திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.,**
**ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை-34.**

நவதிருப்பதியில் இருப்பது நாராயணனாக நீயே
நல்லமலையில் ஆனாய் நரசிம்மராக நீயே
சிவபுரத்தரசருக்கு இருப்பது மைத்துனராக நீயே
சிவனார்க்கே ஆனாய் மனைவியாக நீயே.

சீதையை மணந்தாய் இராமனாக நீயே
கீதையைச் சொன்னாய் கண்ணனாக நீயே
கோதையை மணந்தாய் அரங்கனாக நீயே
ராதையைக் கைப்பிடித்தாய் கிருஷ்ணனாக நீயே. 2.

சங்கடம்தீர்க்க சங்குடனும் சக்கரத்துடனும் வருவாய்
வேங்கடம் சென்றால் வேண்டியதெல்லாம் தருவாய்
சரணாகதி அடைந்தால் கதிமோட்சம் கொடுப்பாய்
அரணாக நின்று ஆழிசூழ் உலகம் காப்பாய். 3.

குறைதீர்க்கும் உனக்கும் குறையுண்டு நாராயணனாக
நிறைவுற்றாய் நீலனுக்கு எட்டெழுத்து மந்திரம்சொல்லி
திருமொழிகள் பாடவைத்தாய் திருப்பதிகள் பல சென்று
திருநெடுந்தாண்டகத்தைக் கேட்டுரசித்தாய் திருவரங்கப் பெருமாளாக. 4.

யோகத்தைவிட்டு பார்கவரை போகத்தில் ஈட்டினாய்
சோகத்தைக் கொடுத்து யோகத்தில் மீட்டினாய்
பார்க்கவமைந்தரை பாங்குடனே பங்கயச்செல்வியிடம் சேர்ப்பித்தாய்
பார்வதிமணாளரிடம் பக்திசாரரெனப் பட்டம்பெற வைத்தாய். 5.

தன்வயத்தன் ஆகையால் தசாவதாரம் மட்டுமாஎடுத்தாய்
உன்வயத்தனுக்கே உண்மையை உணரச் செய்வாய்
இன்றுஏன் அவதாரம் எடுக்கவில்லை என்பதற்கு
என்றும்நான் எடுப்பதில்லை என்று கூறுவாய். 6.



தொண்டனுக்கே தேவதேவியின் வீடுசெல்லத் தலைப்பட்டாய்
தண்டனையும் தவறாமல் வாங்கித் தந்துவிட்டாய்
வினைகள் தீர்க்கவே திருவிளையாடல் செய்துகாட்டினாய்
விப்ரநாராயணரைத் தொண்டரடிப்பொடியாக மாற்றிக்
காட்டினாய். 7.

திவ்யப் பிரபந்தங்களை வெளிக்கொணரத் திருவுள்ளம்
கொண்டாய்
திருக்கோவலூரில் முதலாழ்வார்களைச் சந்திக்கச் செய்தாய்
பரம்பொருள் நாராயணனே என்பதைப் பகரவைத்தாய்
பரகதி அடையப் பாடல்கள்பல பாடவைத்தாய். 8.

திருமணத்தில் வரதட்சிணைத் தத்துவத்திற்கு வழிகாட்டினாய்
திருப்பாவை போதவில்லை நாச்சியார்திருமொழியும்கேட்டாய்
திருவரங்கத்திற்கே சுடர்க்கொடியைக் கூட்டிவரச் செய்தாய்
திருவுள்ளம் குளிர பெரியாழ்வாரை மாமனாக்கிக் கொண்டாய்.

மதுரகவியை மாறனுக்கு முதல்மாணாக்கனாக ஆக்கினாய்
மதுரத்தமிழில் மாறனை நால்வேதம் செய்யவைத்தாய்
குலசேகர அரசனை ஆழ்வாராக ஆக்கினாய்
குலம்பாராது திருப்பாணருக்குத் திருமேனி காட்டினாய். 10.

## மதுரை

# திருவிழாக்கள்

எஸ். சந்திரசேகர பட்டர்

திருவிழா என்று தென்மொழியிலும், உற்சவம் என்று வடமொழியிலும் வழங்கப் பெறும் தெய்வத் திரு உலாவானது, பாசச் சேர்க்கையால் மயக்கமுறும் மக்களைப் பாசமயக்கத்தில் இருந்து விடுபடச் செய்யும் சாம்பவீ தீட்சையாக ஆகமங்கள் கூறுகின்றன. முன்செய்வினை காரணமாக, அங்கம் நலிவுற்று, நோயுற்றுக் கோவில் சென்று வழிபட இயலாதோர்க்கும், மற்ற எல்லா வகையினருக்கும் ஆண்டவனின் அருள் நோக்கையும், ஆண்டவன் மூலமான ஆசார்யனின் அருள் நோக்கையும் அடையச் செய்வதே சாம்பவீ தீட்சையான உற்சவங்களாகும்.

பாண்டி நாட்டுப் பதினான்கு திருத்தலங்களில், சிறப்புற்ற மதுரைத் தலத்தில் ஒரு வருடத்தில் 13 விழாக்கள் ஏற்படுத்தப்பட்டுப் பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகின்றன. அவைகளாவன:

### சித்திரை விழா

சித்திரை மாதத்தில் நடைபெறும் திருக்கல்யாண விழாவாகும் இது. இந்த விழாவில் தான், ஸ்ரீ மீனாட்சியம்மன் பட்டாபிஷேகம், திக்விஜயம், திருக்கல்யாணம், திருத்தேர் உலா ஆகியன கண்கொள்ளாக் காட்சியாக நிகழ்கின்றன. நாயக்கர் காலத்திற்கு முன்னதாகத் திருத்தேர் உலாவும், திருக்கல்யாண விழாவும், தைமாத மக நட்த்திரத்தில் துவங்கி நடந்து வரும் மாசிமண்டல உற்சவத்தில்தான் நடந்து வந்தனவாம். சித்ரா பௌர்ணமி தினத்தில் மதுரை மாநகரில் ஓடும் வைகை நதிக்கு எழுந்தருளிக் காட்சி தரும் ஸ்ரீகள்ளழகர் பெருமான், மதுரைக்கு மேற்கில் இருக்கும் 'தேனூர்' என்னும் சிறு கிராமத்தின் வழியாக ஓடிவரும் இதே வைகை நதியில் எழுந்தருளிக் காட்சித் தந்து வந்தாராம்.

மாசி மாதத்தில் அறுவடைகள் பூர்த்தி பெறாத நிலையில், அம்மை மீனாட்சிக்கும், ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கும் நடக்கும் திருக்கல்யாண விழாவையும், திருத்தேர்விழாவையும் தொடர்ந்து காணவர இயலவில்லையே என்ற வேளாண்மைப் பெருமககளின் குறையை நீக்க வேண்டும் என்றும், ஸ்ரீகள்ளழகர் சித்ரா பௌர்ணமிக்கு எழுந்தருளும் தேனூர்க் கிராமத்தில் கூடும் மக்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் செய்து கொடுக்க இயலவில்லையே என்றும் எண்ணினார் மன்னர் திருமலை நாயக்கர்.

அவர் எண்ணத்தின் பூர்த்திதான் நாம் இன்று ஸ்ரீமீனாட்சியம்மை திருக்கல்யாண விழாவும், திருத்தேர் உலாவும், ஸ்ரீகள்ளழகர் வைகைக் காட்சியும் ஆகிய எல்லா விழாக்களையும் ஒருங்கே பார்க்கும் பாக்கியமாகும். இந்தச் சித்திரை விழா நடைபெறும் பன்னிரு நாள்களிலும் மாசி வீதியிலேயே ஸ்ரீமீனாட்சி சொக்கேசப் பெருமான் எழுந்தருள்வார்கள்.

### வைகாசி விசாக விழா

திருக்கல்யாண விழாக் கொண்டாடிய ஸ்ரீமீனாட்சி சொக்கேசருக்கு வைகாசி வசந்த விழா எடுக்க எண்ணினார் மன்னர். அந்த விழா முழுவதும் தம் செலவிலேயே, முழுவதும் தம்மதான ஒரு மண்டபத்திலேயே நடத்தவும் அவர் எண்ணினார்.

எனவே சுவாமி சன்னதித் தெருவில் கோவிலுக்கு மிகவும் அருகில் உள்ள வீடுகளில் வசித்திருந்து பூஜாகைங்கர்யங்களைச் செய்து வந்தார்கள் ஆதிசைவ மரபிலுதித்த அர்ச்சகர்கள். அவர்களைச் சந்தித்தார் திருமலை மன்னர். பின் அம்மன்னர் ஸ்ரீசொக்கநாதர் கோவிலில் வடக்கு வாயிலில் அர்ச்சகர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்துச் சுவாமி சன்னதித் தெருவில் தற்போது, 'புது மண்டபம்' என்று வழங்கப் பெறும் வசந்த மண்டபமும், அதன் இருபுறத்தே நீராழிமண்டபமும், கிழக்கே வசந்த விழாநீர்த் தொட்டியும் அமைத்தார். வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தோடு முடிவுபெறும் 10 நாள் விழா சிறப்புற அங்கு நடைபெற்று வருகின்றது அன்று முதல்.

### ஆனி விழா

அடுத்து ஆனி மாதம் நடைபெறும் ஊஞ்சல் விழா மூலநட்சத்திரத்தோடு முடிவடையும் 10 நாள் விழா.

## ஆடி விழா

ஆடிக் கேட்டை நட்சத்திரத்தோடு முடிவடையும் 10 நாள் விழாவான முளைக் கொட்டு விழா முழுவதும் ஸ்ரீ மீனாட்சிக்கே தான். இந்த விழாவை முடித்த பின்தான் விவசாயப் பெருமக்கள் விவசாய வேலைகளைத் துவங்குவார்களாம் பண்டை நாள்களில். இந்த விழா கோவில் ஆடி வீதிப் பிரகாரத்திலேயே கொண்டாடப்படுகிறது. இந்த விழாவில் நடைபெறும் குதிரை வாகனக் காட்சியும், புஷ்பவிமானக் காட்சியும், சைத்யோபசாரக் காட்சியும் மிகச் சிறப்பு நிகழ்ச்சியாகும்.

## ஆவணி விழா

அடுத்து வரும் ஆவணி விழா அவிட்ட நட்சத்திரத்தோடு பூர்த்தியாகும் 18 நாள் விழாவாகும். இந்த விழா ஐந்து கொடிகள் ஏற்றிச் சிறப்பாகத் துவங்கப்படும். துவக்கத்தின் 6 நாட்கள் சந்திரசேகரர் உத்ஸவமாகும். தொடர்ந்து மீனாட்சி சொக்கேசர் ஆவணி மூலவிதியில் எழுந்தருளுவார். பிட்டு உத்ஸவம் என்றும் இதைச் சொல்லுவார்கள். பிட்டுக்காகச் சிவன் கூலியாளான நிகழ்ச்சிகளும் இந்த உத்ஸவத்தில் சிறப்புற நடித்துக் காட்டப்படுகின்றன. உலக நன்மைகளுக்காகவும், மக்களின் பாச நீக்கத்திற்காகவும் நடைபெறும் எல்லா விழாக்களையும்விட இந்த விழாச் சிறப்புமிக்கது.

ஒவ்வொரு நாள் விழாவிலும், மதுரையம் பதியில், பக்தர்கள் பொருட்டுச் சொக்கநாதப் பெருமானால் ஆற்றப்பட்ட திருவிளையாடல்களின் பெருமையை விளக்கும் முறையில் ஓதுவார் மூர்த்திகளாலும், அர்ச்சகப் பெருமக்களாலும், மற்ற எல்லாச் சமூக ஊழியர்களாலும், பாவனாரூபமாக நடித்துக் காட்டவும், பாடலாகப் பாடவும், உரையாக நிகழ்த்தவும் செய்து அவர்களுக்கு யானை ஏற்றம், பல்லக்கு ஏற்றம் முதலான சகல மரியாதைகளும் கொடுத்து ஆண்டவனின் திருவிளையாடல் தத்துவங்களைப் புரிய வைப்பதோடு, வேற்றுமையற்று எல்லாநிலை ஊழியர்களுக்கும் கௌரவமளிக்கப்படும். ஒருமைப்பாட்டு உணர்வை உலகத்தோர்க்கு அளிக்கும் உயர் உணர்வு விழாவாக இது திகழ்கிறது.

முதல் நாள் விழா —கருங்குருவிக்கருளியது
2ஆம் நாள் விழா —நாரைக் கருளியது
3ஆம் நாள் விழா —மாணிக்கம் விற்றருளியது
4ஆம் நாள் விழா —தருமிக்குப் பொற்கிழி யளித்தருளியது
5ஆம்நாள்விழா—உலவாக்கோட்டையருளியது
6ஆம் நாள் விழா —பக்த பாணனுக்கு உதவி யருளியது
7ஆம் நாள் விழா —வளையல் விற்றது: ஸ்ரீசொக்கநாதர் பட்டாபிஷேகம்
8ஆம் நாள் விழா —நரிபரியாக அருளியது
9ஆம் நாள் விழா —பிட்டுக்கு மண் சுமந்தது; பிட்டு வாணிச்சிக்கு அருளியது.
10ஆம் நாள் விழா—விறகு விற்றருளியது.

மேற்கூறிய திருவிளையாடற் புராணத் தொடர்பான உற்சவங்களில், கோவில், பணியில் ஈடுபட்டுள்ள அந்த அந்த இனமக்களின் பிரதிநிதிகளைத் தக்க மரியாதையுடனும், மேளதாளங்களுடனும் அழைத்துவரச் செய்து சொக்கநாதப் பெருமான் திருவுலாவோடு உடன் வரச்செய்து குறிப்பிட்ட திருவிளையாடல் பற்றி விவரிக்கப்பட்ட அளவில் யானை, குதிரை, பல்லக்கு ஆகியவற்றில் இருக்கச் செய்து, அவரவர்கள் இருக்கைகளில் மரியாதையுடன் விட்டு வருவது பாண்டிய மன்னர்கள் காலந்தொட்டு நடந்துவரும் சிறப்பு நிகழ்ச்சியாகும்.

## புரட்டாசிவிழா

அடுத்துப் புரட்டாசி மாதத்தில் நடைபெறும் நவராத்திரி விழாவில் மீனாட்சி உற்சவமூர்த்திக்கு விசேட அபிடேக அலங்கார ஆராதனைகள் நடைபெறுவதுபோல் மூல மூர்த்திக்கும் விசேட அபிடேக அலங்கார ஆராதனைகள் நடந்து வருகின்றன.

## ஐப்பசி விழா

ஐப்பசி மாதம் சுக்ல ஷஷ்டியோடு முடிவடையும் தேதியில் கோலாட்ட விழா. புது மண்டபத்தில் நடைபெற்று வரும் இந்த விழாவில் மீனாட்சி அம்மை உலாவரும்போது உடன் இசையோடு கோலாட்ட ஒலி முழக்கி வரும் கன்னிப் பெண்கள் எல்லோருக்கும் விநியோகம் முதலியன நடந்து வருகின்றன.

மேலும் இந்த மாதத்தில் பௌர்ணமி அன்றோடு முடிவு பெறும் ஐந்துநாள் பவித்ர உற்சவம் மிகப் புனிதமிக்கது. சுவாமியின் விழாவிலும், பூஜாகாரியங்களிலும், ஏற்படும் குறைகளை நீக்கக் கூடியதாகவே இந்த விழாக் கொண்டாடப்படுகிறது. இந்த ஐப்பசி மாதத்தில் இருவிழாக்கள் தனித்தனியே நடைபெறுகின்றன.

## கார்த்திகை விழா

கார்த்திகை மாத தீப உற்சவம் திருவாதிரை நட்சத்திரத்தோடு முடிவு அடையும் 10 நாள் விழாவாகும் இது. 6ஆம் நாள் விழாவன்று இடபவாகனக் காட்சியும், 7ஆம் நாள் திருக்கார்த்திகையன்று ஓர் இடப வாகனக் காட்சியும், 10ஆம் நாள் விழா அன்று ஓர் இடப வாகனக் காட்சியும், காணக் கூடியது இந்த விழாவின் சிறப்பு அம்சமாகும்.

## மார்கழி விழா

மார்கழி மாதம் முழுதுமே விழாக்கோலம் தான். ஏறத்தாழ 15 ஏக்கர் அளவில் கட்டப்பட்டுள்ள இந்தக் கோவிலையே சிறியதாக ஆக்கும் அளவிற்குக் காலை 4 மணிக்கே தினம் பக்தர்கள் கூட்டம் பெருகுகிறது. திருவாதிரை அன்றோடு முடிவுபெறும் 10 ஆம்நாள் எண்ணெயக்காப்பு விழாவும், அதே 10ஆம் நாள் காலையில் மாணிக்கவாசகப் பெருமானைஎழுந்தருள்வித்து ஓதுவார் மூர்த்திகளால் திருவெம்பாவை இன்னிசை முழங்கச் செய்விக்கும் விழாவும் நடைபெறுகின்றன. இந்த மாத அஷ்டமி

யன்று இடபவாகனத்தோடு திருத்தேரில் மீனாட்சி சொக்கேசப் பெருமான் எழுந்தருள் வதும் பக்தர்கள் கூட்டமும், காணக் கண் கொள்ளாக் காட்சியாகும்.

## தை விழா

தை மாதம் திருவாதிரை நட்சத்திரத்தைத் தீர்க்கமாகக் கொண்டு 10 தினங்கள் நடை பெறும் திருவிழா இது. பின் புனர்பூசத்தன்று கதிரறுப்புத் திருவிழாவும், பூசநட்சத்திரத் தன்று நடைபெறும் தெப்ப உற்சவமும் ராஜ உத்ஸவமாகும்.

திருமலை மன்னரின் மந்திரியார் நீலகண்ட தீட்சதர் புதுமண்டபம் சிற்ப வேலைப்பாடு நடக்கும்போது கூறப்பட்ட யோசனையின் போது ஏற்பட்ட ஐயத்தால் நடந்த நிகழ்ச்சி வரலாற்றில் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இது நீலகண்ட தீட்சதர், திருமலைமன்னரிடம் வேண்டிக்கொண்டபடியே, திருமலை மன்னர் மதுரையின் கிழக்கே தெப்பக்குளம் எடுப்பித்து தம் பிறந்தநாளில் பெருமானைத் தெப்ப உற்சவம் கொள்ளச் செய்து பரிகாரம் செய் தார்.

## மாசி விழா

தை மாதம் மக நட்சத்திரத்தில் துவங்கி எட்டுக்கொடிகள் ஏற்றி விநாயகர், சுப்பிரமணி யர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய முதல் மூவருக்கும், சந்திரசேகரப் பெருமானுக் கும் மீனாட்சி சொக்கநாதப் பெருமானுக்கும், சண்டேசுரருக்கும் மாசிவிழா எடுத்து மௌன உற்சவத்தோடு பூர்த்தி பெறும் 40 நாள் விழா. (திருமலை மன்னர் காலத்திற்கு முன்பு வரை இந்த விழாவின்போதுதான் கல்யாணம், திருத்தேர் உலா ஆகியன நிகழ்ந்தன.)

## பங்குனி விழா

பங்குனி உத்திரத்தோடு முடிவடையும் 10 நாள் விழா. தெற்குச் சித்திரை வீதியில் உள்ள வெள்ளியம்பல மண்டபத்திற்கு எழுந் தருளி விசேட சைத்யோபசாரங்களுடன் உலா நடைபெறும். 10ஆம் நாள் விழா அன்று திருவாப்புடையார் கோவிலுக்கு எழுந்தருள் வார் மீனாட்சி சொக்கேசர்.

பாண்டிய மன்னர்கள் காலத்தில் பொன் னனையாளுக்குக் காட்சியளித்து இந்தப்பங்குனி உத்திர நன்னாளில் சொக்கநாதப்பெருமான் மதுரையின் கிழக்கில் 12 மைல் தூரத்திலுள்ள திருப்பூவணம் சென்று வருவாராம். (எந்த ஊருக்கு மீனாட்சி சுந்தரேசுவரர் எழுந்தருளி னாலும், சுவாமிக்கு வேண்டிய அபிஷேக சாமான்கள், திருமஞ்சனம், நிவேதனம், புஷ் பங்கள் எல்லாமே மதுரையிலிருந்து தான் செல்லும். தற்போது திருப்பரங்குன்றத்தில் நடைபெறும் ஸ்ரீஆண்டவர் சுப்பிரமணியர்க்கு நடக்கும் திருக்கல்யாண விழாவுக்கு எழுந் தருளும்போதும் இந்த முறையே நடந்து வரு கின்றது) தினமும் ஸ்ரீமீனாட்சி கோவில் அர்த்தயாம பூஜை ஒலிகேட்ட பின்பே உணவு அருந்திப் படுக்கச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் திருமலைமன்னர். ஒரு பங்குனி உத்திரத்தன்று ஸ்ரீமீனாட்சிசுந்தரேஸ் வரர் திருப்பூவணம் எழுந்தருளிய பின் வைகை யில் இருகரையும் புரள வெள்ளம் பெருக் கெடுத்துவிட்டது. 'சொக்கர் இராத் தங்கார்' என்ற பழமொழியை நாம் காப்பாற்ற வேண்டுமே என நாயக்கர் எண்ணினார். மதுரையிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் பங்குனி உத்திர நன்னாளுக்காகத் திருப் பூவணம் எழுந்தருளியிருக்கும் மீனாட்சிசொக்க நாதப் பெருமானை இன்று வைகையில் கடும் வெள்ளத்தினால் எந்தக் குறையும் நேர்ந்து விடாது இக்கரை கொண்டுவந்து சேர்க்கும் தீரர்களுக்குத் தக்க சன்மானம் வழங்கப்படும் என்று பறைசாற்றப்பட்டது.

வீரர்கள் புறப்பட்டார்கள். பொங்கிப் பாய்ந்துவரும் வெள்ளத்தைப் பொருட்படுத் தாது எதிர்க்கரை சென்று மீனாட்சி சொக் கேசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் வாக னங்களைத் தோளில் சுமந்து இக்கரைகொண்டு வந்து சேர்த்தார்கள். தக்க சமயத்தில் சொக்க நாதர் அர்த்தயாமபூஜை நடைபெறத் துணிந்து உதவிய தீரர்களின் குடும்பத்திற்கென்றே 'சாமநத்தம்' என்ற கிராமம் விடப்பட்டது திருமலை மன்னரால். இதுபோன்று ஓரிரு முறை நடைபெற்றதால் திருமலை மன்னர் ஆட்சிக்குப்பின், திருப்பூவணம் செல்லாமல் பங்குனி உத்திர நன்னாளில் மதுரை வைகை நதிக்கு எதிர்க்கரையிலிருக்கும் திருவாப்புடை யார் கோவிலுக்கு ஸ்ரீமீனாட்சி சொக்கநாதரை எழுந்தருளச் செய்து திருவிழா கொண்டாடப் படுகிறது.

இங்குக் கொடியேற்றம் நடந்து சொக்க நாதப் பெருமானுக்கும் மீனாட்சி அம்மனுக்கும் காலை, மாலை நடக்கும் விழாக்கள் 5.

ஸ்ரீ அம்பிகை மீனாட்சிக்கு மட்டும் கொடி யேற்றம் செய்து காலை மாலை நடைபெறும் விழா ஒன்று.

கொடியேற்றம் இன்றி இரட்சாபந்தனத் துடன் மாலை மட்டும் நடத்துவன ஸ்ரீமீனாட் சிக்கும் சொக்கநாதருக்குமாக மூன்று விழா (வைகாசி—ஆனி—பங்குனி).

தனியாக ஸ்ரீ மீனாட்சிக்கு மட்டும் நடத் தப் பெறும் திருவிழாக்கள் மூன்று (புரட்டாசி- ஐப்பசி-மார்கழி)

சந்திரசேகரர் புறப்பாட்டுடன் நடை பெறும் பவித்ரோற்சவம் ஒன்று.

இதைத் தவிர, ஆனி உத்திரத்தன்று நட ராஜப் பெருமான் வீதியுலா, திருவாதிரையன்று நடராஜப் பெருமான் வீதியுலா, நாயன்மார்கள் அறுபத்து மூவர்க்கும் அவரவர்கள் திரு நட்சத் திரத்தன்று திருவுலா நடைபெற்று ஓதுவார் மூர்த்திகளால் அந்தந்த நாயன்மாரின் திருச் சரித்திரத்தைப் பாடலாக நிகழ்த்துவது ஆக என்றுமே திருவிழாவாக நடைபெறும் பதி மதுரையம்பதி ஒன்றே.

# ஒடுக்கத்துத் தம்புரான்

டி. என். முருகதாஸ் தீர்த்தபதி

பரம்பரை அறங்காவலர், அருள்மிகு சொரி முத்தையனார் திருக்கோயில், சிங்கம்பட்டி.

சைவ மடங்களில் ஒடுக்கத்துத் தம்புரான் என்ற ஒருவர் பணியில் இருப்பார். ஆய்வு செய்து பார்த்ததில் அவர் போற்றுதலுக்கு உரியவராக இருந்தாலும்கூட, நடைமுறையில் அவருக்குக் கிடைக்கும் மரியாதை என்பது ஏச்சும் பேச்சும் மற்றும் சில வேளைகளில் அடியும் உதையும்தான். காரணம் மகா சன்னிதானம் அவர்களின் கௌபீனத்தைத் துவைத்து உலர்த்திப் பக்குவப்படுத்தி வைப்பதினாலோ என்னவோ அவரை அகௌரவமாக நடத்த ஏனைய மடத்து அலுவலர்கள் நினைப்பார்கள் எனக் கருத வேண்டியிருக்கிறது. உண்மையில் அவர் பாராட்டிற்கு உரியவர். மகா சன்னிதானத்தின் அணுக்கத் தொண்டர். சிவபிரானுக்கு எப்படி ஆலாலசுந்தரர் அணுக்கத் தொண்டராக இருந்தாரோ அதுபோல் நம் மகா சன்னிதானங்களுக்கு அரும் பெரும் தொண்டாற்றிப் பெருமை சேர்ப்பதற்காகவே அமைந்தவர்: சைவத்திற்கு அடிகோலி என்று கூட அவரைச் சொல்லலாம்.

ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்னால் தருமபுரம் ஆதீனத்தைச் சார்ந்த 14-வது பட்டத்து மகாசன்னிதானம் திருநெல்வேலி சந்திப்பிள்ளை அவர்களது ஆதீனத்திற்குப் பாத்தியப்பட்ட மடத்திற்கு எழுந்தருளியிருந்தார்கள். ஸ்ரீ ல ஸ்ரீ கந்தப்ப தேசிக சுவாமிகள் என்பது அவர்களது தீட்சா நாமம். அவ்வேளை இராதாபுரம் மற்றும் வள்ளியூர் போன்ற சுற்றுப்புற கிராமங்கள் மழையின்மையால் பஞ்சத்தில் வாடி வதங்கி இருந்தன. வருவாய்த் துறை அதிகாரிகள் இந்நிலையைப் பாராது விவசாயிகளை நிலவரிகேட்டுதுன்புறுத்தி வந்ததால் அவதி தாங்காமல் பெருவாரியான மக்கள் அப்பகுதியிலிருந்து புறப்பட்டு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரைக் காண வந்து மனுவும் கொடுத்து நேரிலும்குறைகளை சொன்னார்கள். வெள்ளையராட்சியில் ஆணவச் சின்னமாக விளங்கிய அந்த மாவட்ட ஆட்சியாளர் காதில் அது 'செவிடன் காதில் சங்கூதியது போல' என்பதற்கிணங்க ஆயிற்று. அத்துடன் நில்லாமல் ஆட்சித் தலைவர் ''வடக்கிலிருந்து உங்கள் சாமியார் ஒருவர் வந்திருக்கிறார் அல்லவா! அவரிடம் சென்று உங்கள் குறைகளைச் சொல்லுங்கள்; மழை பெய்யும்'' என்று கூறிவிட்டார்.

குரு மகாசன்னிதானம் காலையில் அவசிய கருமங்களை முடித்து, திருமஞ்சனம் முடித்து, ஆத்மார்த்தமான சிவபூஜையை முடித்து எழுந்த சமயம் மடத்து வாசலில் ஏதோ ஆரவாரம் கேட்கின்றதே என்று பணியாள் ஒருவனிடம் பார்த்து வரச் சொன்னார்கள். அவன் ஓடிச் சென்று பார்த்து வந்து மகா சன்னிதானத்திடம் ''பெரும் ஜன சமுத்திரமாக இருக்கிறது. இராதாபுரம் மற்றும் வள்ளியூர் பகுதியிலிருந்து விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களைக் காண வந்திருக்கிறார்கள்'' என்று அறிவித்தான். உடன் மகா சன்னிதானம் அவர்கள் விரைந்து பலகணியிலிருந்து ஜனங்களுக்குக் காட்சி கொடுத்து விபரங்களைக் கேட்டார்கள். ஜனங்களும் தம் குறைகளை விளக்கமாகத் தெரிவித்து மாவட்ட ஆட்சித் தலைவர் வரி வஜா செய்ய மறுத்ததைச் சொல்லி மற்றும் அவர் வடக்கில் இருந்து தங்களின் மத குரு ஒருவர் வந்திருக்கிறார் அல்லவா! அவரிடம் சொல்லுங்கள் மழை பெய்யும் என்று கூறினார் என்றும் சொன்னார்கள்.

விபரங்களைப் பொறுமையே வடிவமான சன்னிதானம் அவர்கள் கேட்டுவிட்டு, மடத்துக் காரியஸ்தர்களை அழைத்து, வந்திருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் குறைவின்றி உணவளிக்குமாறு பணித்துவிட்டு பூஜை அறையில் தாழிட்டுக் கொண்டு மூன்று மணி நேரம் நிஷ்டையில் அமர்ந்துவிட்டார்கள். நிஷ்டை கலைந்து பூஜை அறையிலிருந்து வெளிவந்தவுடன் அவர்கள் திருவாய் மலர்ந்து பாடிய பாடல்:

''சைவ சமயமே சமயம் எனில் அச்சமயத்து
தெய்வம் பிறை சூடும் தெய்வம் எனில்
இவரைவென்று ஆனந்த வெள்ளத்தில்
அழுந்துவதே முத்தி எனில்
வானங்காள் பெய்க மழை''

இப்பாட்டு முடிவடைந்ததும் மேகங்கள் திரண்டன. வானம் குமுறியது, இடையறாது ஒருவார காலம் சோவென்றுமழை பொழிந்தது. ஆறுகளும், வாய்க்கால்களும் கரை புரண்டோடின. நீர் தேக்கங்களான குளங்களும் ஏரிகளும் நிரம்பி வழிந்தன.

''விரும்பும் சரியை முதல் மெய்ஞானம் நான்கும் அரும்பு, மலர், காய், கனிபோல் அன்றோ பராபரமே'' என்கின்றார் தாயுமான சுவாமிகள்'', முன்னாள் காவல் துறை இயக்குநர் திரு பரமகுரு அவர்களின் தந்தை ஸ்ரீ ல ஸ்ரீ பொன்னையா ஸ்வாமி அவர்கள் சரியை கிரியையை காட்டிலும் யோகமும் ஞானமும் சிறப்புடையது எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அன்று மகா சன்னிதானத்தினால் மழை பெய்

விக்கின்ற செயல்பாட்டின் ஆற்றல் யோகத்தின் அடிப்படையைக் கொண்டது. யோகதாரணை நுணுக்கத்தை, நன்கு கற்றறிந்த குரு வாயிலாகப் பெறுவதே சாலச் சிறந்தது 'தொட்டுக் கொடுக்காத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது'' என்று வழக்கில் ஒரு சொல்லுண்டு.

யோகத்தில் முக்கிய அம்சம் பிராணாயாமம். இது சுவாசத்தை ஒழுங்கு செய்வது. 'மூச்சுப் போனால் பேச்சு போச்சு' என்றும்' காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்'' என்றும் வழக்கில் உள்ள சொற்கள் கவனிக்க தகுந்தன. 'காற்றுள்ளபோது தூற்றிக் கொள்'' என்பதற்கு,ஏற்ற சமயங்களில் காரியங்களைச் செய்து கொள் என்று பொருள் கொள்வது சரியல்ல. சுவாசம் ஓடிக் கொண்டிருக்கும் போதுதான் உடலில் உயிர் நிற்கும். அத் தருணத்தில் நம் கெட்ட குணங்களை அறிந்து களைந்தெறிந்தால் பிறவிச் சுழலிலிருந்து விடு பட்டு வீடு பேறு அடைய மார்க்கம் உண்டு எனக் கொள்ளல் வேண்டும். முதலில் பத்மாசனத்தில் உட்கார வேண்டும். இது முதுகுத் தண்டை நிமிர்த்தி வைக்க உதவும். மூட்டு வலியில் அவதிப்படுகிறவர்கள் சாதாரணமாக கால்களை மடக்கி உட்காரலாம். வலதுகையில் பாம்பு விரலை மடக்கிக் கொண்டு மோதிர விரலாலும் கட்டை விரலாலும் நாசித் துவாரத்தை மூடிக் கொள்ள வேண்டும். ஆண்கள் பிராணாயாமத்தைத் தொடங்கும் முன் வலது நாசி வழியாக சுவாசப் பையிலுள்ள காற்றை மெதுவாக வெளியிட வேண்டும். பெண்கள் தொடங்குவதற்கு முன் இடது நாசி வழியாக வெளிவிட வேண்டும். பின் தொடக்கத்தில் மட்டும் மூச்சை வெளியிட்ட மறு நாசி வழி எடுக்கவேண்டும். இது பூரகம்; மெதுவாக எட்டு எண்ணி உள் எடுத்தால் பின் 32 எண்ணிக்கை காற்றை உள் நிறுத்த வேண்டும்.இது கும்பகம். பின் மெதுவாக மறு நாசி வழி 16 எண்ணி வெளியிட வேண்டும் இது ரேசகம். இதை மாறி மாறிச் செய்ய வேண்டும். துவக்கத்தில் கும்பகம் இல்லாமல் செய்து பழக வேண்டும். அதாவது பூரகமும் ரேசகமும் மட்டும் செய்ய வேண்டும். இதை நாடி சுத்தி என்று கூறுவார்கள். கால போக்கில் தானாகவே கும்பகம் சித்திக்கும். பிராணாயாமத்தில் சுமார் 180 வகையுண்டு என்று யோகிகள் கூறுகிறார்கள். இதில் மூச்சை உள்ளே 12 அளவு எடுத்து வெளியில் 8-ஐ மட்டும் விடுவது ஒரு வகை. இதை நாம் விவரம் அறிந்த குரு வாயிலாகத் தெரிந்து தான் அப்பியாசம் செய்ய வேண்டும். இதில் மூச்சானது உள் நோக்கி ஓடும்போது நம் அப்பியாசம் வலுக்கும்போது புருவ மத்தியில் இலங்கும் உயிர் வெளி வருவதுபோல் வரும். பின் சொப்பனமே இல்லாமல் அதிகப்படியான அசதியால்சூக்கும்மனது தூங்கும்போதுஉடலும் செயல் இழந்து கிடக்கும். சுழுப்தி கண்ட நிலை எனப்படும் இருதய பகுதியான நெஞ்சிற்கு வரும். இதன் பின் தொடர்ந்து அப்பியாசம் செய்தால் துரியம் எனப்படும் தொப்புளுக்கு வந்தடையும். கடைசியாக துரிய ஆதீதம்-துரியாதீதம் எனப்படும் நிலையினைக் குறிக்கும் ஆசனத்திற்கும் மத்தியான மூலாதாரத்தில் வந்தடையும்.

''சாக்கிர முப்பத்தைந்து நுதலினில், கனவு தன்னில்
ஆக்கிய இருபத்தைந்து களுத்தில் சுழுமுனை மூன்று
நீக்கி இதயம்தன்னில்,துரியத்தில் இரண்டு நாபி
நோக்கியே, துரியாதீதம் நுவலின் மூலத்திலொன்றே''

—சிவஞான சித்தியார்-223

இப்பாடலை உன்னிப்பாக படித்து உணரற்பாலது. நம் போன்றவர்களுக்கு உயிரானது ஜாக்கிரம், சுவப்னம் மற்றும் சுழுப்தி போன்ற நிலைகளுக்கு வருவது அனிச்ச செயலால் ஏற்படுவது. ஆனால் யோகிகளுக்கு இச் சிச்சமாத்திரத்தில் அந்நிலைகள் வந்தடையும். இதனால்தான் தாயுமான ஸ்வாமிகள் ''தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்''!என் கிறார்.

யோக பயிற்சியில் மூச்சானது மூலாதாரத்தைத் தொட்டுவிட்டால் செயலற்றிருக்கும் ( Dorment ) குண்டலினி சக்தி பாம்பு வடிவத்திலிருப்பதைத் தட்டி எழுப்பும்,அப்படி எழுப்பப்பட்ட சக்தியானது முதுகெலும்பை (Apinal column) இரண்டரைச் சுற்று மேலே ஏற்றும். அப்படி மேலேறும்போது ஆதாரம் அல்லது சக்கரம் என்று குறிக்கப்படும் இடங்களாவது : மூலாதாரம் மேலே குறிப்பிடப் பட்டுள்ளது. சுவாதிஷ்டானம்-முதுகெலும்பின் அடிப்பாகத்திலிருந்து ஏறத்தாழ நாலு விரல் கடைக்கு மேலுள்ள இடம். மணிப்பூரகம்—நாபிக்கு நேர். அனாகதம்—நெஞ்சிற்கு நேர். விசுத்தி—கழுத்தின் பின்புற மத்தி பாகம். ஆக்ஞை—புருவ மத்திக்கு நேர் பின்புறம் மண்டை ஓடு முடிவடைகிற இடம்.( Medulla Oblongate ) என்று மருத்துவத்துறை பரிபாஷையில் கூறுவார்கள்; அல்லது தலையின் பின் பகுதியெனக் கொள்ளலாம். கடைசியாக பிரும்மரந்திரம் உச்சந்தலை (சிறு குழந்தைகளுக்கு—பிறந்த குழந்தைகளுக்கு மூச்சு விடும் போது தோல் மேலும் கீழும் போய்வரும். உடலில் உள்ள முதுகெலும்பே கோவிலில்உள்ள கொடி மரம். குண்டலினி சக்தி முதுகெலும்பின் மேல் இரண்டரைச் சுற்று சுற்றி மேலெழும்புவதை குறிப்பதே கோயிலில் நடைபெறும் கொடி ஏற்று விழாவாகும். உடலில் உள்ள பிரும்மரந்திரம் கோபுரத்திலுள்ள கலசம். ஆகவேதான் திருமந்திரம்

''உள்ளம் பெரும் கோவில், ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானருக்கு வாய் கோபுர வாசல்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே
தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கமே''

என்று கூறுகிறது. மூலாதாரத்தில் விநாயகரும், மற்றும் பிரும்மரந்தரத்தில் ஆயிரம் இதழ் கூடிய தாமரை மலரில் அம்பாளும் இருப்பதாகவும் யோக சாஸ்திரம் கூறுகிறது.

குண்டலினி சக்தி மேலேறும்போது யோகிக்குப் பல சக்திகள் கைகூடும். மணிப்பூரகத்தை ஊடுருவும்போது அவனுக்கு எக்ஸ்ரே

கண் கிடைக்கும். இது போல்தான் மனிதனின் உடற்கூற்றில் 72,000 நரம்புகள் இருக்கின்றனவென்று கண்டுபிடித்தார்களே அன்றி தற்போதுள்ள மருத்துவத் துறை போன்று Dissection செய்தல்ல என்பது இங்கு குறிப்பிடத் தகுந்தது. விசுத்தி சக்கரத்தை அடையும்போது பசி, தாகம் போன்றவை எடுக்காது. மேலே குறிப்பிட்டுள்ள உச்சந்தலையான பிரும்மரந்தரம் அல்லது சகஸ்ரதளம் போன்ற இடத்தை குண்டலினி சக்தி அடையும்போது ஜலவாதை மற்றும் மலவாதை அடங்கி விடும். கபாலத்திலிருந்து அமிர்தம் சுரக்கும். அவ்வமிர்தத்தை உண்ட யோகிக்கு அது மீண்டும் முதுகெலும்பின் அடிப்பாகத்திலுள்ள துவாரம் வழி கபாலத்தை வந்தடையும். Concervation of matter என்ற அடிப்படையில் ஜீவ முக்தனாய் அவன் இருப்பான். 'மோனம் என்பது ஞான வரம்பு' என்பதற்கிணங்க பேச்சு அறுபட்டு போகும். அவனுடைய தேகத்தை ஒளி ஊடுருவதால் அவனது நிழல் தரையில் விழாது. இந்நிலையில் உள்ளவர்கள் இறந்தால்தான் சமாதி வைத்து மேலே சிவலிங்கம் வைக்க வேண்டுமே தவிர மற்ற ஏனையர் அனைவரையும் சுட்டெரிக்கத்தான் வேண்டும். கபாலத்திலிருந்து அமிர்தம் சுரப்பதை எடுத்துக் காட்டும் யோகிகள் நம் பாரத கண்டத்தில் இன்னும் உலவுகிறார்கள் என்பது இங்கு குறிப்பிட வேண்டியது.

இவ்யோகப் பயிற்சியை ஒருவன் செய்து இடையில் மறைந்தாலும் கர்ம வினைகள் ஒருவனை மறு ஜென்மங்களில் பின் தொடர்வது போல் இவனை பின்வரும் ஜென்மங்களில் தொடரும். அதனால்தான் வள்ளுவர் பெருந்தகை

'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவருக்கு எழுமையும் ஏமாப்புடைத்து' என்கின்றார்.

இத்தகைய நிலையை நோக்கும்போதுதான் ஞான சம்பந்தப் பெருமானின் வாக்கு 'ஞான சம்பந்தன் நான்மறை கற்றவன் காழியர் கோன்' என்பது புலனாகிறது. ஏன் என்றால் ஒரு வேதத்தை முறையாக 'கணம்' செய்து பயின்றாலே 14 வருடங்கள் ஆகும் என்றால், நான்கு வேதங்களையும் கற்பதற்கு ஏறத்தாழ அறுபது (60) ஆண்டுகளாகுமே! அப்படியிருக்க உபநயனம் செய்து கொள்ள மறுத்த பெருமான் 3 வயது எய்திய நிலையில் எப்படி நான்கு வேதங்களைக் கற்றிருக்க முடியும்? அதுபோன்று தான்7வயது நிரம்பிய குமர குருபர ஸ்வாமிகள் தன்னை மதிக்காத நவாப் முன்பு நினைத்த மாத்திரத்தில் சிங்கம்மேல் அமர்ந்து இருந்ததும் மற்றும் கங்கை கரையில் நின்று சகலகலாவல்லி மாலை பாடி நவாப்புடன் இந்தி மொழியில் பேசுவதற்கு ஆற்றல் பெற்றதும் ஆகும்.


இதுபோன்ற யோக பயிற்சி செய்யும்போது உடற்சுற்றில் உள்ள நவ துவாரத்தின் ஒன்றின் வழியாக உயிர் நழுவப்பார்க்கும். இதில் அவன் கவனமாக இருக்க வேண்டும். சாதாரணமாகவே அபானம் வழியாக உயிர் பிரிந்தால் அவன் நற்கதியில்லாமல் போவான். குறிவழி பிரிந்தால் மறு ஜென்மத்தில் மகா தரித்திரனாகப் பிறப்பான். மூக்கு வழி பிரிந்தால் வாசனைப் பிரியனாகப் பிறப்பான். வாய் வழி பிரிந்தால் சாப்பாடு பிரியனாகப் பிறப்பான். காது வழி பிரிந்தால் சங்கீதப் பிரியனாகப் பிறப்பான். கண் வழி பிரிந்தால் மகாஞானஸ்தனாகப் பிறப்பான். தியாகபிரும்ம ஸ்வாமிகளுக்கு ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பு மண்டை ஓடு கீறி உயிர் கபாலம் வழி பிரிந்தது போல் ஆனால் முக்தி கிடைக்கும் என்பதுஇங்கு குறிப்பிட தகுந்தது.

இடையறாது ஒருவன் மனதை ஒருமுகப்படுத்தி உபாசனை தெய்வத்தை நினைந்து முறையாகக் கற்ற மந்திரங்களை ஜெபித்து வந்தாலும் மூச்சு ஒடுங்கி யோக நிலைகள் சித்திக்கும். ஜெபிக்கும்போது உரக்கச்சொல்வது அதமம் மெல்ல ஜெபிப்பது மத்திபம்; மனதுக்குள் சொல்வது உத்தமம். அதனாலேயே சமஸ்கிருத ஸ்லோகம் 'மனனா திராயது இதி மந்தரக.' என்று கூறுகிறது. ஜெபிக்கும் போது தொண்டைக்குழிகூட அலுங்கக் கூடாது. இஸ்லாமியர்களுக்கு முறையான ஐந்து நேரத் தொழுகையிலும் கும்பகம் சிந்தித்து யோக நிலைகள் கைவரப் பெறும் எனக் கூறுகிறார்கள். சாமான்களைத் தூக்கினாலும், விளையாட்டில் ( Long Jump ) மற்றும் (High Jump) செய்தாலும் நாம் அறியாமல் மூச்சை அடக்குவதுபோல் சற்று கவனித்தால் ஜெபிக்கும்போதும் மூச்சு அடங்குவதை காணலாம்.

மகாசன்னிதானங்கள் திருமஞ்சனம் முடித்து ஆச்சாரத்தின் அடிப்படையில் குளியலறை அருகாமையிலேயே பூஜைக்கு அமர்வது வழக்கம். இவ்விடத்தைத்தான் ஒடுக்கம் என்பார்கள். ஆனால் இவ்விடமோ அகன்று விரிந்து இருக்கும். இப்படிப்பட்ட இடத்தை ஏன் ஒடுக்கம் என்கிறார்கள். விட்டகுறை, தொட்டகுறை என்பதற்கிணங்க நமக்கு ஆச்சார்ய புருஷர்களாக வருகிற மகாசன்னிதானங்கள் உன்னத நிலையில் உள்ள ஆன்மாக்கள் என்பதில் ஐயம் வேண்டாம். இப்படிப்பட்டவர்களுக்குச் சில சமயங்களில் கும்பகம் சிந்தித்து விடும். இந்நிலையிலேயே மூன்று அல்லது நான்கு நாட்கள் ஏன் ஒரு வாரம்கூட ஆகிவிடும். அவர் நிலை கலைந்து எழும் சமயம் பூஜைக்கு வைத்திருக்கும் பூ வாடி இருக்கக்கூடாது. காலையும் மாலையும் சிரத்தையோடு அணுக்கத் தொண்டரான தம்பிரான் ஓசையிடாமல் பூக்களை மாற்றி வருவார். அவ்விடம், சுவாசம் ஒடுங்கும் இடம். அதற்கான சேவை செய்கின்றவரே ஒடுக்கத்துத் தம்பிரான். இப்படிப்பட்ட அரிய சேவை செய்யும் ஒடுக்கத்து தம்பிரானை ஏச்சும் பேச்சும் இல்லாமல் அவர் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர் என்பதை உணர வேண்டியது அவசியம்.

'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்,
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்,
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'

—திருமந்திரம்



# கங்கா ஸ்நானம் அல்லது தீபாவளி

டாக்டர் **சிவப்பிரியா**

இந்துநெறியின் திருவிழாக்கள் வெறும் பொழுதுபோக்காகவோ அர்த்தமற்ற சடங்குகளாகவோ அமையவில்லை. திருவிழாக்களும் அவை கொண்டாடப்படும் முறைகளும் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து மக்கள் அன்போடு கூடி வாழ்வதற்கும் நட்பையும் உறவையும் வளர்ப்பதற்கும் அடிப்படையாக உள்ளன. இந்துக்களின் திருவிழாக்கள் உயர்ந்த பண்பாட்டின் உயிர்நாடியாக விளங்குகின்றன. ஒவ்வொரு திருவிழாவிற்கும் ஒரு சிறப்புண்டு; கொண்டாடப்படும் முறைக்கும் காரணம் உண்டு.

கங்கா ஸ்நானமும் வெடி வெடிப்பதும் தீபாவளியின் சிறப்பு அம்சம். விடிவதற்கு முன்பு எழுந்து எண்ணெய், சிகைக்காய், வெந்நீர், புத்தாடை ஆகியவற்றை வைத்து இறைவனை வழிபட்டு, எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்கு கங்கா ஸ்நானம் என்று பெயர். நீராடிய பின் ஒருவரையொருவர் பார்த்து வணங்கி நலம் அறியும்போது கங்கா ஸ்நானம் ஆயிற்றா என்று கேட்பர். வெள்ளிக்கிழமைதோறும் எண்ணெய் தேய்த்து நீராடுகின்றோம். நாள்தோறும் ஸ்நானம் செய்கின்றோம். ஆனால் இவற்றையெல்லாம் யாரும் கங்கா ஸ்நானம் என்று சொல்வதில்லை; கங்கா ஸ்நானம் ஆயிற்றா என்று கேட்பதும் இல்லை. தீபாவளியன்று மட்டுந்தான் எந்த நீரில் நீராடினாலும் அது கங்கா ஸ்நானம் ஆகின்றது. எல்லோரையும் பார்த்து கங்கா ஸ்நானம் ஆயிற்றா என்று மகிழ்ச்சியோடு கேட்கின்றோம். ஏனென்றால் அன்றுதான் கங்கை பூவுலகிற்குப் பாய்ந்தாள். அன்று எல்லோருக்கும் கங்கா ஸ்நானம் ஆயிற்று. பரமேசுவரன் பகீரதனுக்காகத் திருமுடியிலிருந்து கங்கையாற்றைப் பூவுலகிற்கு விடுத்த நாளே கங்கா ஸ்நானம் அல்லது தீபாவளி என்ற பெயரில் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

கங்கையைப் பூமியில் வரச் செய்வதற்காக பகீரத மன்னன் பெருந்தவம் புரிந்தான். கங்கையின் பெருவேகத்தால் விண்ணும் மண்ணும் அழிந்துவிடும். ஆதலால் பரமேசுவரன் கங்கையாற்றைத் திருமுடிமேல் தாங்கி ஏழு கிளைகளாகப் பிரித்து விடுத்தார். அண்ட சராசரங்களையெல்லாம் கடந்து அப்பாலுக்கு அப்பாலாகத் திகழும் திருமுடியிலிருந்து ஏழு கிளைகளும் வந்தபோது உலகெங்கும் உள்ள அனைத்து உயரினங்களின் மேலும் கங்கை நீர் பொழிந்தது. உலகமெங்கும் உள்ள கடல், ஆறு, ஏரி, கிணறு, குளம் குட்டை என எல்லா நீரிலும்கங்கை பாய்ந்தது. அன்று புல் முதல் தேவர்கள் வரையுள்ள எல்லா உயிர்களும் கங்கையில் நீராடின. அன்று எல்லோருக்கும் கங்கா ஸ்நானம் ஆயிற்று. அந்த நாள்தான் தீபாவளி என்ற பெயரோடு திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. இதனால் எந்த நீரில் நீராடினாலும் தீபாவளியன்று குளிக்கும் குளியல் கங்கா ஸ்நானமாயிற்று கங்கை நீராடலானது. ஈசன் விடுத்த ஏழு கிளைகளில் ஒரு கிளை பகீரதனைத் தொடர்ந்து சென்றது. அக்கிளைக்குப் பாகீரதி என்று பெயர். அரும்பாடுபட்டு முடித்த பகீரதனது பெருமுயற்சி பகீரதப் பிரயத்தனம் எனப்படுகிறது.

''எண்ணிய எண்ணியாங்கு எய்தலால்
ஈண்டு முயலப்படும்''. [செய்தவம்

என்று தவத்தின் வல்லமையைத் திருவள்ளுவர் போற்றுகிறார்.

கங்கை வந்த கதை இறையியல்பையும் பண்டைக்காலச் சமுதாயத்தில் பெண்களுக்கு இருந்த சிறப்பையும் புலப்படுத்துகின்றது. பரமசிவன் திருமுடியில், மயிரிழையில் பெருநதியைக் கட்டி வைத்தது இறைவன். எல்லாம் வல்லவன், எல்லாவற்றையும் திருவருளால் செய்பவன், எது ஒன்று செய்வதற்கும் கருவியோ, துணையோ வேண்டாம் என்ற பரம்பொருள் இயல்பை, கடவுள் தன்மையைக் காட்டுகிறது. மங்கை பங்கனான பரமேசுவரன் கைகால்களால் தடுத்து நிறுத்தாமல்தலையில் அடக்கியது. இறைநெறியில் பண்டைச் சமுதாயத்தில் பெண்களுக்கு இருந்த உயரிய இடத்தையும் பெருமையையும் காட்டுகிறது.

''மையறு மனத்தனாய், பகீரதன் வரங்கள் வேண்ட
ஐயமில் அமரர் ஏந்த ஆயிரமுகமதாகி
வையகம் நெளியப் பாய்வான் வந்திழி கங்கையென்னும்
தையலைச் சடையில் ஏற்றார் சாய்க்காடு மேவினாரே''

என்று சைவத்தின் சிறப்பைத் திருநாவுக்கரச ரது தேவாரம் போற்றுகின்றது. கங்கையை ஏற்றதால் ஈசுவரனுக்கு ஆறுசூடி, நதிச்சடையன் கங்காதரன், கங்கைமுடியன், கங்கைநாயகன் என்றெல்லாம் திருப்பெயர்கள் அமைந்தன.

காலங்கள் உருண்டு சென்றன. அன்று கங்கா ஸ்நான நாள். அதாவது தீபாவளித் திருநாள். கண்ணன் நரகாசுரனுடன் போர் புரியச் சென்றான். அவனுடைய இரண்டா வது மனைவி சத்தியபாமை தேரோட்டினாள். போரில் நரகாசுரன் எய்த அம்பால் கண்ணன் மயக்கமடைந்து விழுந்தான். சத்தியபாமை தானே தேரையும் ஓட்டியதோடு போரும் புரிந் தாள். போரில் நரகாசுரன் இறந்தான். உயிர் விடும் நேரத்தில் தன்னுடைய இறந்தநாளை (திவசம்) எல்லோரும் மகிழ்ச்சியோடு கொண் டாடவேண்டும் என்று விரும்பினான். இதனால் கங்கா ஸ்நானத்தோடு வெடி வெடிப்பது சேர்ந்தது என்று கூறுவர். வடநாட்டுக் கதை யான இதை வடநாட்டில் யாரும் கொண்டாடு வதில்லை.

கங்கா ஸ்நானம் அதாவது தென்னாட்டுத் தீபாவளி - நீர்த் திருவிழா. வடநாட்டுத் தீபாவளி ஒளி அல்லது நெருப்புத் திருவிழா. இது சுற்றிலும் தென்னாட்டுக் கார்த்திகை தீபத் திருவிழாவை ஒத்துள்ளது. பரமேசுவரன் அடிமுடியில்லாத நெருப்புத் தூணாக நின்று உலகமெங்கும். ஒளி பரப்பிய நாளே கார்த் திகை திருவிழாவாகக் கொண்டாடப்படு கின்றது. உலகம் ஒளிவெள்ளமாக விளங்கிய இந்நாளை வீடெங்கும் ஊரெங்கும் விளக் கேற்றி வைத்துக் கொண்டாடுகின்றனர். அண்ணாமலைக் கார்த்திகை தீபத் திருவிழா வும் வடநாட்டுத் தீபாவளி(தீபங்களின் வரிசை) விழாவும் ஒன்றாக உள்ளன. விளக்கேற்றி வைத்தல், அலங்கரித்தல், பொரியுருண்டை, பல வித தின்பண்டங்கள் யாவும் கார்த்திகை தீபத் திற்கும் வடநாட்டுத் தீபாவளிக்கும் ஒன்றா கவே உள்ளன. மிகத் தொன்மையான இக்கார்த்திகை தீபத் திருவிழாவை


''தொல் கார்த்திகை நாள்.......தையலார்
கொண்டாடும் விளக்கிடு''.

என்று ஞானக்குழந்தை திருஞானசம்பந்தர் போற்றுகின்றார்.

கங்கா ஸ்நானம், கார்த்திகை தீபம் ஆகிய வையெல்லாம் உலகம் முழுவதும் கொண் டாடப்பட்டு வந்தன. 1400 ஆண்டுகளுக்கு முன்பு முகம்மதியமும் 1995 ஆண்டுகளுக்கு முன்பு கிருத்துவம், மற்றும் யூதமும், 2500 ஆண்டுகளுக்கு முன்பு பௌத்தம் மற்றும் சமணமும் பிறப்பதற்கு முன்னர் உலக மக்கள் யாவரும் இத்திருவிழாக்களைக் கொண்டாடி நீருக்கும் நெருப்பிற்கும் நன்றி செலுத்தி இறை வனை வழிபட்டு வந்தனர். உலக மக்கள் அனை வரும் சிவனடியவர்களாக இருந்த உண்மையை

'தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''

என்று மாணிக்கவாசகரின் திருவாசகம்போற்று கின்றது. குவைத் நாட்டில் பல சிவன் கோயில்கள் சிறந்து விளங்கிய உண்மையை



''குவைப்பதி மலிந்த கோவே போற்றி''

என்று மாணிக்கவாசகர் போற்றுகின்றார். மக்கா, மதினா ஆகியவை முறையே மக்கீச் சுரம் மத்திச்சுரம் என்ற புகழ் பெற்ற சிவத் தலங்களாகத் திகழ்ந்ததைத் திருநாவுக்கரசர் தெரிவிக்கின்றார்.

''குக்குடேச்சுரம் மக்கீச்சுரம் கூறுங்கால்
ஆடகேச்சுரம் அகத்தீச்சரம் அயனீச்சுரம்
மத்திச்சுரம் சித்திச்சுரம் தண்கானல் ஈடுதிரை
இராமேச்சுரம் என்று என்று ஏத்தி
இறைவன் உறை சுரம் பலவும் இயம்புவோமே''

என்பது தேவாரத் துதி. அமெரிக்க, ஐரோப் பிய நாடுகளில் 5,000, 10,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த சிவன் கோயில்களையும் சிவ லிங்கங்களையும் புதைபொருள் ஆய்வாளர்கள் கண்டெடுத்துள்ளனர். நாற்புறமும் கடல் களால் சூழப்பட்ட ஐரோப்பிய ஆசியாக் கண்டங்களே (யுரேஷியா) ஜம்புத்தீவு அல்லது நாவலந்திவு என்று புகழ் பெற்று விளங்கியது.

' நாவலம் தீவினுக்கு நாதரான காவலரே ஏவி
விடுத்தா
ரேனும் கடவம் அலோம் கடுமையொடு
களவற்றோமே''

என்பது தேவாரத் துதி. சிவன் கோயில்களும், சிவனுக்குரிய சிறந்த தலமரமான நாவல்மரங் களும் (நாகமரம்) நிரம்பிக் காணப்பட்ட தாலேயே நாவலந் தீவானது ஜம்புகேசுவரம் என்றும் நாவலம் தண்பொழில் என்றும் வழங் கப்பட்டது. மனித வழிபாட்டை அடிப்படை யாகக் கொண்ட செயற்கைச் சமயங்களது மத மாற்ற வெறி காரணமாக மற்றைய நாடுகளில் கங்கா ஸ்நானம் முதலிய திருவிழா மறைந்து போயிற்று. தென்னாட்டில் கங்கா ஸ்நானத் தின் காரணம் மறைந்தது.

# சென்னை

# ஸ்ரீ காளிகாம்பாள் திருக்கோயில்

## பி. வி. கிரி



அந்தக் காளியின் முன்னே, ஒரு கவிஞன் கண்ணீர் மல்க உட்கார்ந்திருக்கிறான். ஒளி உமிழும் காளியின் கண்களைப் பார்க்கப் பார்க்க, அந்தக் கவிஞனுக்குக் கவிதை ஊற்றெடுக்கின்றது.

ஏடெடுத்தான் பாட்டெழுத....மடை திறந்தாற் போன்று கவிதை வெள்ளம் பெருக்கெடுக்கின்றது

மாகாளியின் முன் பாடிய அந்தக் கவிஞன் யார்? அவன்தான், மகாகவி சுப்பிரமணிய பாரதி. காளிதாசர், கவிகாளமேகம், கம்பர், அபிராமி பட்டர் ஆகிய கவிஞர்களைப் போல மாக்கவி பாரதியும் காளியைப் பாடினார்.

பாரதி பாடிய அந்தப் பாடலின் தொடக்கம் இதுதான்:

யாது மாகி நின்றாய்—காளீ!
எங்கும் நீநி றைந்தாய்
தீது நன்மை யெல்லாம்—நின்றன்
செயல்க ளன்றி யில்லை
போதும் இங்கு மாந்தர்—வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதிசக்தி, தாயே!—என்மீ
தருள் புரிந்து காப்பாய்.''

என்று பாடிய இந்தக் காளிப்பாட்டுஅரங்கேறிய ஆலயம்தான், சென்னை தம்புச் செட்டித் தெருவில் உள்ள, அருள்மிகு சென்னை ஸ்ரீகாளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயில்.

இத்திருக்கோயில், திருவண்ணாமலையின் மகிமையையும், காமாட்சி உறையும் காஞ்சி மாநகரின் பெருமையையும் ஒருங்கு அமைந்த திருத்தலமாகும்

முதலில் இந்த ஆலயம், சென்னை கோட்டையில் இருந்தது என்றால் விந்தையாக இல்லையா! ஆம் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் கிழக்கிந்தியக் கம்பெனியார் சென்னைப் பகுதியிலிருந்த மூன்று குப்பங்களை விலைக்கு வாங்கி, தங்கள் வியாபாரத்தை நடத்தி வந்தனர். அதில் ஒன்றுதான் மதராஸ் குப்பம். கோட்டைக்கு வெளியே இருந்த பகுதிகள் சென்னைக் குப்பம் என்றும், கறுப்பர் பட்டினம் என்றும் வழங்கப்பட்டது.

இப்பகுதிகளில் பேரிச் செட்டிமார்கள், முதலிமார்கள், விஸ்வகர்மாக்கள், மீனவர்கள் ஆகியோர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தங்கள் விருப்பப்படித் தனித்தனி ஆலயங்களை அமைத்துக் கொண்டு வழிபட்டு வந்தனர். அந்த வகையில், சென்னைப் பகுதியில் விஸ்வகர்மாக்கள் தங்கள் வழிபாட்டுக்காக அமைத்துக் கொண்ட ஆலயங்களில் ஒன்றுதான், ஸ்ரீகாளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயில் ஆகும்.

ஆங்கிலேயர், இந்தியாவைக் கைப்பற்றிய பிறகு, சென்னைப் பகுதியில் கோட்டைக் கொத்தளங்கள் கட்டத் தொடங்கினர். அந்தப்

பகுதிகள் பாதுகாப்பான இடமாக இருந்ததால் ஆலய வழிபாட்டுக்குக் குந்தகம் ஏற்பட்டது. இதை அறிந்த ஆங்கிலேய அதிகாரிகள், தங்களிடம் பணிபுரிந்த சுதேசிகளிடம், உங்கள் கடவுள்களை எங்கு வைத்து வழிபட விரும்புகிறீர்களோ அங்கு வைத்துக் கொள்ளலாம் என்றும், அதற்கு அனைத்து வசதிகளும் வழங்கப்படும் என்றும் கூறினார்கள். அதேபோல, மாகாளியை வைத்து வழிபட விஸ்வகர்மாக்களிடமும் கூறினார்கள்.

இதற்குப் பிறகுதான், மாகாளியின் திருக்கோயில், சென்னைத் தம்புச்செட்டித்தெருவில் அமைந்தது.

கோட்டையில் இருந்ததால் என்னவோ இந்த அன்னைக்குக் 'கோட்டையம்மன்' என்ற பெயர் வந்தது போலும். செந்தூரம் பூசி வழிபட்டதால் 'சென்னம்மன்' என்றும் மக்கள் போற்றி வழிபட்டு வந்தனர் என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

மகாராஷ்டிர மாமன்னன் சத்ரபதி சிவாஜி ஆங்கிலேயரையும், முகமதியரையும் எதிர்க்கப் போர்க் கோலம் பூண்டிருந்தபோது, 1677-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ஆம் தேதி, இந்த ஆலயத்துக்கு வருகை தந்து, மாகாளியை வழிபட்டுச் சென்று வெற்றிவாகை சூடியதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

இத்தகைய அருமையும், பெருமையும் மிக்க இக்கோயிலில் வடமேற்குப் பகுதியில், துணைவிகள் சமேதராக விளங்கும் சித்தி புத்தி விநாயகரைக் காணலாம். அருகே அகோர வீரபத்திர சுவாமியையும் பார்க்கலாம். கோயிலை வலம் வரும்போது உற்சவர் சந்நிதி நம் உள்ளத்தைக் கவரும்.

மகிமை மிக்க இம்மாகாளியின் திருக்கோயிலில் ஸ்ரீகாயத்ரிதேவி ஆலயமும் உள்ளது. ஐம்பெரும் சக்திகளின் தோற்ற வடிவமான ஐந்து திருமுகங்களின் வடிவாகக் காட்சி தருகின்றாள் ஸ்ரீகாயத்ரிதேவி. இந்தத் தெய்வத் திருமேனியை உருவாக்கியவர் சிற்பக் கலைஞர் வை. கணபதி ஸ்தபதியார்.

*19-9-94* அன்று ஸ்ரீ காயத்ரி சன்னதியின் மகாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தது. இந்தியாவிலேயே ஒரிசா மாநிலத்தில் உள்ள ஸ்ரீ காயத்ரிதேவி கோவிலுக்கு அடுத்தபடியாக, இத்திருக்கோயிலில்தான் ஸ்ரீ காயத்ரி தேவிக்கெனத் தனியாகச் சன்னதி அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் நடைபெறும் வசந்த நவராத்திரி விழாவில் அம்பாளுக்குக் குங்கும லட்சார்ச்சனை நடைபெறுகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். வைகாசித் திங்களில் பத்து நாட்கள் பிரம்மோச்சவம் நடைபெறுகின்றது. ஒன்பதாம் நாள் இரவு, வெண்கலக் கிண்ணித் தேர்த் திருவிழா நடைபெறுவது இவ்விழாவில் சிறப்பம்சமாகும். ஆனி மாதத்தில் வசந்த உற்சவமும், ஆடி மாதத்தில் ஆடிப் பெருவிழாவும், ஆவணியில் விநாயகர் சதுர்த்தி உற்சவமும், புரட்டாசியில் நவராத்திரி உற்சவமும், ஐப்பசியில் கந்தசஷ்டி லட்சார்ச்சனை பெருவிழாவும், கார்த்திகையில் சோமவாரங்களில் சிறப்பு வழிபாடும், மார்கழியில் மாணிக்கவாசகர் உற்சவமும், நடராஜர் அபிஷேகமும், தை மாத முதல் நாளில் புஷ்பாஞ்சலி விழாவும், மாசி மாதத்தில் மாசி மக உற்சவமும் நடைபெறுகின்றது.

இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ விராட விஸ்வ பரப்பிரம்மத்திற்கு, தமிழ்ப் புத்தாண்டு தினத்திலிருந்து பத்து நாட்கள் மகோற்சவமும் பிரதி அமாவாசையன்று இரவு சிறப்புப் பூசையும் கூட்டு வழிபாடும் நடைபெறுகின்றது.

இத்திருக்கோயிலில் செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் இராகு காலத்தில் ஸ்ரீதுர்க்கா தேவிக்கு, எலுமிச்சம் பழ விளக்கேற்றி வழிபாடு செய்கின்ற காட்சி பக்தர்களைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தும். வெள்ளிக்கிழமை தோறும் கோமாதா பூசையும், தமிழ்த் திங்கள் மூன்றாவது வெள்ளிக் கிழமைகளில் திரு விளக்குப் பூசையும் நடைபெறுகிறது.

தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட இத்திருக்கோயில் திருப்பணிக் குழுவிற்கு, தேவி உபாசகர் தவத்திரு சுவாமி இராமதாசர் அவர்கள் தலைவராக இருக்கின்றார்.

இத்திருக்கோயிலில், நூதன வெள்ளி ரத வெள்ளோட்ட விழா 2-3-95 அன்று ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜெயந்தி சரஸ்வதி சுவாமிகள் அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது.

இக்கோயிலில், நாள்தோறும் 'அருள் விருந்து' என்னும் தலைப்பில் புராண, இதிகாச மற்றும் இலக்கியங்களிலிருந்து அரிய கருத்து மணிகள் தொகுத்து வழங்கப்பட்டுவருகின்றன.

''காளி மீது நெஞ்சம்—என்றும்
கலந்து நிற்க வேண்டும்;
வேளை யொத்த விறலும்—பாரில்
வேந்த ரேத்து புகழும்,
யாளி யொத்த வலியும்—என்றும்
இன்பம் நிற்கும் மனமும்,
வாழி யீதல் வேண்டும்—அன்னாய்!
வாழ்க நின்றன் அருளே''

என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க, மாகாளியின் அருளைப் பெறுவோம்; மன நிறைவோடு மன்பதையில் மனிதநேயத்துடன் வாழ்வோம்.

# அறுகம்புல் மகிமை

டாக்டர் டி. செல்வராஜன்
பேராசிரியர், தமிழ்த்துறை, அரசினர் கல்லூரி, பொன்னேரி.

**1. அறுகு :** ஆறு இடங்களில் வேர் கொண்டு வளரும் ஒரு வகைக் கொடிப் புல் அறுகு அல்லது அறுகம்புல். இதனைத்தூர்வா என்று வடமொழியில் அழைப்பர். இது மிக்க வீரியமுடைய மூலிகை; சத்தான மருந்து. பசு பால் தருகிறது. பாலை, உலகம் முழுவதும், இளையவர் முதல் முதியவர் வரை உணவாகப் பருகுவார்கள். பால் சுவையாகவும், சத்தாக வும் இருப்பதற்குக் காரணம் பசு உண்ணும் புல் வகைகளே ஆகும். குதிரையின் ஓட்டத் திற்குரிய ஊட்டத்தையும் அது உண்ணும் புல் வகைகள் தருகின்றன. புல்லையே உணவாகக் கொள்ளும் பல விலங்குகள் மிக்க பலம் பொருந்தியவையாக இருக்கின்றன. எனவே, புல்வகைகள் சக்தியுடையன; இவற்றுள் அறு கம்புல் மிக்க சக்தியுடையது என்று தெரி கிறது. அறுகு, உப்பறுகு, கூந்தலறுகு, சிற்ற றுகு, கொடியறுகு, புல்லறுகு, பேரறுகு, பாளையறுகு, வெள்ளறுகு முதலிய பல வகைப் படும். இவற்றின் குணங்களும் வெவ் வேறானவை.

## 2. அருமையான மூலிகை :

(1) அறுகம் புல் இயற்கையின் முதல் மூலிகை; தெய்வீக மூலிகை.

(2) மிக்க குளிர்ச்சியுடையது; கோடை யிலும் வாடாது. (3) தியானம் செய்பவர் அறுகம்புல்லை இருக்கையாகப் பரப்பினால் மூலச்சூடும், தலை மாலையாகச் சூடினால் தலைச்சூடும் தணியும். சூட்டைத் தணிக்கும் மூலிகை இது. (4) நஞ்சினை முரிக்கும். பாம் புடன் சண்டையிட்ட கீரி நஞ்சினை முரிக்க அறுகம்புல்லை உண்ணும்; அதில் புரளும்.

(5) சுற்றுப்புறச் சூழலைத் தூய்மைப் படுத்தும்.

## 3. மூலிகைப் பயன்கள் :

1. அறுகம்புல், உடலின் எடையைக் குறைக்கும். 2. கொழுப்புச் சத்தைக் கரைக் கும். 3. நரம்புத் தளர்ச்சியை நீக்கும். 4. சொறி, சிரங்குகளைப் போக்கும்., 5. இரத்தப் புற்று நோயைத் தணிக்கும். 6. நஞ்சினை முரிக்கும்., 7. இரத்தச்சிவப்பணுக்களைப் பெருக்கும், 8. இருமல் 9. இதயக்கோளாறு, 10. இரத்தச்சோகை, 11. மூட்டுவலி முதலிய நோய்களுக்கு இது சிறந்த மருந்து. 12. குளோரோபில் என்ற பச்சயம் இதில் நிறைய இருக்கிறது. 13. அறுகம்புல்லை அடிப்படை யாகக் கொண்டு செய்யப்படும். 'தூர்வாதி தைலம்' பல வியாதிகளுக்கு ஏற்றது.

## 4. அறுகம்புல் சாறு :


அறுகம்புல்லை ஒரு மருந்தாகப் பயன் படுத்த நினைத்தால், அதைத் தூய்மையான இடத்தில் வளர்த்தல் வேண்டும். எந்த வகை அசுத்தமும் அதன் மீது படியலாகாது. அறுகம் புல் சாறு செய்யும் முறைகள் :

(அ) 1. அறுகம்புல்லைப் போதுமான அளவு எடுத்து நன்றாகக் கழுவவும். 2. துண் டாக்கித் தண்ணீருடன் சேர்த்து உரல் அல்லது மிக்சியில் அறைக்கவும். 3. வெள்ளைத் துணி யில் ஊற்றிப் பிழிந்து சாறு எடுக்கவும். 4 சாறுடன் தேன் அல்லது வெல்லம் அல்லது மோர் அல்லது இளநீர் அல்லது 'காரட்' சாறு கலந்து, காலையில், வெறும் வயிற்றில் பருகு வது உடம்புக்கு மிக நல்லது. இது உடம்புக்கு ஊட்டம் தரும்; சோர்வைப் போக்கும்; சோர்வு வாராமல் காக்கும்; சுறுசுறுப்பைத் தரும். இன்னும் பல நன்மைகள் அறுகம்புல் சாற்றால் விளைகின்றன. இந்தச் சாற்றில் வீரியம் அதிக மாக இருப்பதால் இதனைப் 'பச்சைநிற இரத் தம்' என்றே அழைப்பர். இயற்கை அருளிய ஊட்டச்சத்து மிகுந்த பானம் இது.

(ஆ) அறுகம்புல், ஆறுமிளகு, இரண்டு சிட்டிகை சீரகம் கலந்து, அறைத்து, நெல்லிக் காயளவு எடுத்து, மோர் அல்லது இளநீருடன் கலந்தும் சாப்பிடலாம்.

(இ) வாழைப்பழச்சாறு : வாழைப்பழத் தில் சாறு எடுப்பது மிகவும் கடினமான ஒரு செயல். ஆனால் ஒரு பிடி அறுகம்புல் இருந் தால் போதும், வாழைப்பழத்திலும் சாறு எடுக்க முடியும். உறித்த பூவன்பழம் (மஞ்சள் வாழை) ஒன்றையும் ஒரு பிடி அறுகம் புல்லை யும் ஒன்றாகச் சேர்த்துப் பிசைந்து கொண் டிருக்க, மூன்று நிமிடங்களில், வாழைப்பழம் காணாமற் போய்விடும். வாழைப்பழச் சாறும், அறுகம்புற் சாறும் கலந்த இனிமையான சுவை நீர் பாத்திரத்தில் எஞ்சும். இதுவும் நாள் தோறும், காலையில் பருகத்தக்கது.

அறுகம்புல் பொடியும் இப்போது தனியே கிடைக்கிறது. இதை நீர் முதலியவற்றில்



கலந்தும் பருகலாம். அறுகம்புல் சாறு எந்த விதமான எதிர்விளைவுகளையும், பின் விளைவு களையும் தருவதில்லை.

## 5. வழிபாடு :

பழங்கால முதலே அறுகம்புல் வழிபாட் டுக்குப் பயன்படும் ஒரு பொருளாகத் திகழ் கிறது. கடவுளுக்கு அறுகம்புல்லைப் புனைந் தும், தூவியும் வழிபடுவார்கள். அறுகம்புல் லுடன் நெல்லையும் மலரையும் கலந்து சொரிந்து ஒருவரை வாழ்த்துவார்கள். மேலும் உழவர்கள் ஏர் உழுவதற்கு முன்னால் அதற்கு அறுகம் புல்லையும், நெற்கதிர்களையும் பல மலர்களையும் கலந்து சூட்டி, வணங்கிப் பின்னர் நிலத்தை உழுவதற்குத் தொடங்கு வார்கள். இக்காலத்தும் அறுகம்புல் வழிபாட் டிற்கு மிகப் பயன்படுகிறது.

'ஒரு புல்லின் விளிம்புக்கூரிலும் கடவுள் இருக்கிறார்' என்றார் ஆங்கில அறிஞர் ஒருவர். அறுசம்புல் எளிதில் கிடைக்கும் அரிய பொருள். இது விநாயகருக்கு உரியது; அர்ச் சனைப் பொருள்களில் முதன்மையானது. இருபத்தொரு கணுக்களைக் கொண்ட அறுகம் புல்லால் விநாயகரை வழிபடுவது மேலும் சிறந்தது. 'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்''..... (திருவாசகம், சிவபுராணம் 26)வளரும் உயிரின வரிசையில் முதலாவது புல்; ஓரறிவுயிர். இது முதலுக்கு முதலும், முடிவுக்கு முடிவுமான விநாயகருக்கு முதல் அர்ச்சனைப் பொருளா வது மிகப் பொருத்தமாகும். சிவனோ ஆத்தி சூடி; விநாயகரோ அறுகுசூடி. விநாயகரை இரண்டு அறுகம்புற்களால் வழிபாடு செய்வது மரபு.

கடவுள் வழிபாட்டுக்குப் பயன்படுவது அறுகம்புல்; மதச்சடங்குகளுக்குப் பயன்படுவது தருப்பைப்புல். இவை விதை போட்டு வளர்வ தில்லை; தாமே தோன்றும் 'சுயம்புகள்.' பதியும் சுயம்பு; பசுவும் சுயம்பு; சுயம்பான இப்பசும்புற்கள் வழிபாட்டுக்கும், சடங்குகளுக் கும் பயன்படுவது பொருத்தமாகத் தோன்று கிறது.

## 6 அறுகம்புல்லும், ஆறாதாரமும் ;

உடம்பில் மூலாதாரம், சுவாதிட்டானம் முதலிய ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. மூலாதாரத்திற்குரிய கடவுள் விநாயகர். இவ ருக்கு ஆறு இடங்களில் வேரிடும் அறுகம்புல் வழிபாட்டுக்கு உகந்த பொருளாக அமைந் திருக்கிறது.

**7. முடிவுரை :** நோய்களை ஒழிப்பதில், 'அறுகம் புல்லும் ஆபத்துக்கு உதவும்'. இது சாதாரணப்புல் என்று வெறுமனே ஒதுக்கிவிடக் கூடாது. சிலபோது 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாகிவிடும்.' நிலத்தில் படர்ந்திருக்கும் அழகிய பொருளாய், அருமையான மருந்தாய், விநாயகருக்குச் சூட்டும் மாலையாய் விளங்கும் அறுகம்புல்லை மக்கள் எப்போதும் மறப்ப தில்லை. ஒருவரை வாழ்த்தும் பொழுதும் 'ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி 'வாழ்க' என்றுதான் வாழ்த்துவார்கள். ஒரு விடுகதை அறுகம்புல்லின் சிறப்பைக் கூறு கிறது.

'வாடாத பயிர்—அது எது?

விடை: அறுகம்புல்.

# சகலகலா வல்லவன்

அருள்முருக சௌந்தரராச அடிகள்

இக்காலத்தில் அரசாங்கம், 'பத்மபூஷன்', பாரத ரத்னா' போன்ற பட்டங்களைப்பற்பல கலைஞர்களுக்கு அளிப்பதைப் போல அக் காலத்திலே கல்வியில் சிறந்தவருக்கு தேவர் களாலும், முனிவர்களாலும் கொடுக்கப்படும் பட்டத்திற்கு 'வித்யா தாம்பூலம்' என்று பெயர். ஓர் முறை சகல கலைகளிலும் சிறந்த வர், வல்லவர் யார்? என்ற ஓர் கேள்வி எழுந்தது தேவர்களுக்கும், முனிவர்களுக்கும்.

கல்வியில் சிறந்தவர் 'ஔவை பிராட்டி யாரே' எனத்தீர்மானித்து அவரிடம் சென்றனர் தேவர்களும் முனிவர்களும். அவரிடம் அந்தப் பட்டத்தை அளிக்க அவரோ இதை வாங்கும் தகுதி எனக்கு இல்லை. 'ஐந்திர வியாக்கரணம்' இயற்றிய இந்திரனான தேவேந்திரனே இதை பெறத் தகுதி வாய்ந்தவர் என்றார். தேவர்கள் புரியாது விழித்தனர்.

அடுத்து தேவேந்திரனை நாடி தேவ லோகம் சென்றனர். அங்கு இந்திரனைக் கண்டு விபரங்களைக் கூறி 'வித்யா தாம் பூலத்தை' அளித்தனர். இந்திரனோ அதனை வாங்க மறுத்து இந்த பட்டத்தை வாங்க மிகவும் தகுதி வாய்ந்தவர் என்னைக் காட்டிலும் தமிழ் கற்றறிந்தவரும், உலகுக்கே தமிழ் பரப்பியவரும், தமிழகத்திலே வாழ்ந்து வருபவருமான அகத்தியர் ஒருவரே என்று கூறினார். தேவர்களும் முனிவர்களும் மீண்டும் பூலோகத்தை நாடி வந்தனர்.

அடுத்ததாக அகத்திய முனிவரை சென்ற டைந்தனர். அவருக்கும் விளக்கம் கூறி ஔவை யாரிடமும் தேவேந்திரனிடமும் சென்று வந் ததைப் பற்றி கூறினர். அவர்களில் தேவேந் திரன் குறிப்பிட்டபடி, கல்வியில் சிறந்தவரான தங்களுக்கு, அளிப்பதற்காக, இந்த வித்யா தாம்பூலத்தை கொண்டு வந்தோம் என்று கூறினர். அகத்தியரோ அதை வாங்க மறுத்து 'என்னைக் காட்டிலும் சிறந்தவர், 'தமிழுக்கே தெய்வம்' என்று கூறப்படும் கலைமகளான சரஸ்வதி தேவியே அந்த பட்டத்தை பெற மிகவும் தகுதி பெற்றவர் என்று கூறி அவர் களை அனுப்பி வைத்தார். தேவர்களும் முனிவர்களும் மீண்டும் தேவலோகத்தை நோக்கி சென்றனர்.

கலைமகளான சரஸ்வதிதேவியை நாடி வந்தனர். அவருக்கு என்னவென்று ஒன்றும் புரியவில்லை. தேவர்களும் முனிவர்களும், தாங்கள் நாடி வந்த காரணத்தையும் ஒவ் வொருவர் கூறிய காரணத்தையும் கூறி, வித்யா தாம்பூலத்தை அவருக்கு அளிக்க வந்ததையும் கூறினார்கள். கலைமகளும் அதை வாங்க மறுத்து 'நான் கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலகளவு' அப்படி இருக்க, இந்த பரிசைப் பெறுவதற்கும் சற்றும் தகுதி இல்லாதவள் நான்'' என்று கூறிவிட்டார் கலைவாணியான சரஸ்வதிதேவி. தேவர்கள் குழம்பினர். அவர்களைச் சமாதானப்படுத்தி, 'என்னைக் காட்டிலும் சிறந்தவர், எல்லாம் அறிந்தவர், தெரிந்தவர், வாகீஸ்வரியான, உமாதேவியாகிய, பார்வதிதேவியே இந்த பரிசைப் பெறும் பாக்கியம் பெற்றவர். அவ ருக்கு சென்று கொடுங்கள்' என்று கூறினார். மீண்டும் விழித்தனர்தேவர்களும் முனிவர்களும்.

அடுத்து எல்லோரும் சிவலோகத்திலுள்ள உமாதேவியாரை நாடிச் சென்றனர். அந்த அம்மையை வணங்கி, வித்யா தாம்பூலத்தைக் கொடுக்க நடந்த விபரங்களைக் கூறிக், கலை வாணி, கூறியதையும் கூறினர். தேவியாரோ, ஓர் முறை சிரித்து மகிழ்ந்தார். பின்னர் அவர் அங்கு வந்த தேவர்களையும், முனிவர்களையும் பார்த்து 'இதனை ஏற்றுக் கொள்ளக்கூடியவ னும் சகலகலாவல்லவனுமாகியவன், எனது இரண்டாவது புதல்வனான முத்துக்குமரன் ஒருவனே. அவனிடம் செல்லுங்கள். அவனுக்கு சென்று கொடுங்கள். இதை ஏற்றுக்கொள்ளும் தகுதி எனக்கில்லை' என்று அவரும் மறுத்து விட்டார் வித்யா தாம்பூலத்தை பெறுவதற்கு. தேவர்களும், முனிவர்களும் இம்முறை விழிக்க வில்லை. ஆனந்தத்தால் துள்ளி குதித்தனர். அங்கிருந்து அனைவரும் கந்தபுரத்தை நோக்கி விரைந்தார்கள்.

தேவர்களும், முனிவர்களும் கூட்டமாக கந்தபுரம் வந்ததைக் கண்டு அதிசயித்தான் எம்பெருமான் முருகவேள். வந்தவர்கள் நடந்த கதைகள் அனைத்தும் கூறினர். ஔவையார் அதன்பின் இந்திரன், அகத்தியர், கலைமகள், மலைமகள் என வரிசையாக கூறி, சகலகலா வல்லவனானவனும், அகத்தியருக்கும், அருண கிரிநாதருக்கும் தமிழை உரைத்தவனும், தன் தந்தைக்கே ஓம் என்னும் பிரணவத்திற்குப் பொருள் உரைத்தவனுமான ஸ்ரீமுருகப்பெரு மானை அந்த வித்யா தாம்பூலத்தை பெற்றுக் கொள்ளும்படி வேண்டினர்.

கந்தபெருமானும் உளம் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டார் அவர்கள் அளித்த வித்யா தாம் பூலத்தை. அவர்கள் அனைவருக்கும் அருளாசி யும் வழங்கினார்.

இந்த அற்புதமான செய்தியை தெரி விக்கவே ஸ்ரீஅருணகிரிநாதர் வள்ளிமலை திருப் புகழில்

''கல்லசல மங்கை எல்லையில் விரிந்த
கல்வி கரைகண்ட புலவோனே''.

என்று பாடிப் புகழ்கிறார்.

அந்த சகல கலா வல்லவனை நாமும், ஆடிப் பாடித் தொழுதிட்டால் அனைத்து அருளும் கொடுத்து நம்மையும் சகல கலா வல்லவனாக்குவான் என்பதில் வியப்பில்லை.

# அன்பே தெய்வம்

**திருமிகு வை. பழநிசாமி, இ. ஆ. ப.;**
**தமிழக அரசின் மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்-செயலர்.**

**[வத்திராயிருப்பு முத்தாலம்மன் கலை விழாவில் ஆற்றிய சிறப்புரை இங்கு வாசகர்கள் பயன்பெற வழங்கப்படுகிறது.]**


சிறப்புமிகுந்த வத்திராயிருப்பு முத்தாலம்மன் கலை விழாவின் துவக்க விழாவிற்குத் தலைமையேற்க வருகை தந்துள்ள காமராசர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமிகு வி. கனகராஜ், ஐ.ஏ.எஸ்., அவர்களே! முன்னிலை வகித்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் காமராசர் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் திருமிகு பி.கே. ரவி, ஐ.பி.எஸ் அவர்களே, வாழ்த்துரை வழங்க வருகை தந்துள்ள விருதுநகர் முதன்மைக் கல்வி அலுவலர் திருமிகு கணபதிராமன் அவர்களே, சிறப்பாக விழா ஏற்பாடுகளைச் செய்துள்ள அருள்மிகு முத்தாலம்மன் பக்த சபையின் தலைவர் அவர்களே, செயலாளர் அவர்களே, இதர நிர்வாகிகளே, தாய்மார்களே, பெரியோர்களே.

இந்தச் சீர்மிகு கலைவிழாவின் துவக்க விழாவிலே அவசியம் நீங்கள் கலந்து கொண்டாக வேண்டும் என்று என்னை வற்புறுத்தி அழைத்த உங்கள் அனைவருக்கும் ஊர் பெரியவர்களுக்கும், கோயில் அறங்காவலர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் என் மனமார்ந்த மகிழ்ச்சியையும் நன்றியையும் முதற்கண் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில் இல்லாத ஊர் பெருமையில்லாத ஊர் என்று நம் முன்னோர்கள்-திருநாவுக்கரசரைப் போன்ற அருளாளர்கள் கூறியுள்ளார்கள்.

திருநாவுக்கரசரைப் போலவே நம் தமிழ் மூதாட்டி ஔவையாரும், 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று சொல்லியிருக்கிறார்கள்.


ஏன் நம்முடைய பெரியவர்கள் எல்லாம் கோயிலை-ஆலயங்களை வற்புறுத்தியிருக்கிறார்கள் என்று நாம் எப்போதாவது எண்ணிப் பார்த்திருக்கிறோமா? வானை முட்டுகிற கோபுரங்களோடு சிறந்து விளங்குகின்ற இந்தப் பெரிய பெரிய கோயில்களை எல்லாம் கட்டி



முடிப்பதற்கு நம்முடைய முன்னோர்கள் எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்கள் என்று நாம் எண்ணிப் பார்த்திருக்கிறோமா! அவ்வளவு அரும்பாடுபட்டு இந்த ஆலயங்களைக் கட்டி, அவற்றை வழிவழியாகப் பராமரித்து, திருப்பணிகள் எல்லாம் செய்து இந்தத் திருக்கோயில்களை நம் முன்னோர்கள் கட்டிக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள் என்றால், எதற்காக அவர்கள் இவ்வளவு சிரமத்தைஎடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் இந்தத்திருக்கோயில் வழிபாட்டிலே இருக்கிற சிறப்புகள் எல்லாம் நமக்குத் தெரியவரும்.

மனித நாகரிகத்தின்-பண்பாட்டின் அடையாளச் சின்னங்கள்தான் திருக்கோயில்கள். எங்கே கோயில் இருக்கிறதோ அங்கே நல்ல மக்கள் வாழ்கிறார்கள் என்று பொருள். அங்கே பண்பாடு வாழ்கிறது என்று பொருள். கோயில்களால் கலைகள் வளர்கின்றன என்று பொருள். கோயில்களால் நம்முடைய தமிழ்மொழி-தமிழ்க்கலாச்சாரம் - நாகரிகம் எல்லாம் வழிவழியாக வளர்கிறது - வாழ்கிறது என்பது பொருள்.

மக்களின் ஐக்கிய உணர்வு, ஒருமைப்பாட்டு உணர்வு, மனித நேயம் செழித்தோங்கி வளர்வது மிக அவசியம் என்ற சூழ்நிலையில், அத்தகைய எண்ணம் ஈடேறும் வகையில் ஒருமைப்பாட்டு உணர்வு சாதி, மத, இன, வேறுபாடின்றி ஆண்டுதோறும், கொண்டாடப்பட்டு வரும் விழாவில் இன்று துவங்குகின்ற இந்த 43-வது ஆண்டு விழா வத்திராயிருப்பு முத்தாலம்மன் திருக்கோயில், திருவிழா பண்பட்ட கலைவிழாவாக இப்பகுதி வாழ் கிராம மக்களின் ஒற்றுமையையும், மனம் வாக்கு, சொல் என்னும் ஒழுக்கத்தையும் வளர்க்கும் உயர்ந்த நோக்கத்தையும் அடிப்



படையாகக் கொண்டு நடைபெறுவது சாலப் பொருத்தமானதாகும்.

நம்முடைய வரலாற்று ஏடுகளைப் புரட்டி பார்த்தால் - நம்முடைய இலக்கிய நூல்களை திறந்து பார்த்தால் என்றைக்கு மனிதன் தோன்றினானோ, அன்றைக்கே அவனிடம் தெய்வ நம்பிக்கையும் தோன்றிவிட்டது என் பதை உணர்கிறோம்.

காலையிலே தோன்றுகிற கதிரவனைப் பார்க்கும்போது, இரவிலே தோன்றுகிற நிலவைப் பார்க்கும்போது-எட்டாத ஆகாயத் தில் மின்னுகிற எண்ணற்ற நட்சத்திரங்களைப் பார்க்கும்போது, ஆகாயத்தில் வலம் வந்து கொண்டிருக்கிற கோள்களைப் பார்க்கிற போது-மழை, வெள்ளம், புயல் என இயற்கை யின் திருவிளையாடல்களைப் பார்க்கிறபோது, ஒரு மாபெரும் சக்தி - தெய்வசக்தி இருப்பதை கோடான கோடி, வருடங்களுக்கு முன்பே பகுத்தறிவு கொண்ட மனிதன் புரிந்து கொண்டு விட்டான்.

''கற்றதனால் ஆயபயன் என்கொல்வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.''

என்பது திருக்குறள். இறை சக்தியை-இறை வனை உணர்கிற மனிதன்தான் பகுத்தறிவு பெற்ற மனிதனாக இருக்க முடியும் என்பது வள்ளுவர் கருத்து.

தெய்வசக்தியை உணராதவன்,—உணர்ந்து நன்றியுடன் அச்சக்தியை வழிபடாதவன்சிறந்த மனிதன் ஆக முடியாது.

விலங்குகளும், பசி எடுத்தால் உணவு உண் கின்றன. தாகம் எடுத்தால் நீர் அருந்துகின் றன. அவைகளும், உறக்கம் வந்தால் உறங்கு கின்றன. காதல் உணர்வு வந்தால் இனப் பெருக்கம் செய்கின்றன. மனிதனும் உண்பது உறங்குவது, இனப்பெருக்கம் செய்வது என்று இருப்பானானால் அவனுக்கும் விலங்குகளுக்கும் என்ன வேறுபாடு?

'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார்.

மனிதப்பிறவி அவ்வளவு எளிதாக வந்துவிடாது.

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
பல்மிருகமாகிப் பறவையாய் பாம்பாய்,
கல்லாகி மனிதராய்.''

என்று படிப்படியாகப் பிறவிகள் அமைந்து இறுதியாக மனிதப் பிறவி வாய்க்கும் என்று கூறுகிறார் மாணிக்கவாசகர்.

இப்படி அரிதாகக் கிடைக்கிற மனிதப் பிறவையை நல்ல வழியிலே நாம் பயன்படுத்த வேண்டும் என்பதற்குத்தான் இத்தகைய கோயில்களை எல்லாம் நம் முன்னோர்கள் கட்டி வைத்திருக்கிறார்கள்.

''அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல்
வேண்டும்
ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல்
வேண்டும்''

என்று பாடினார் இராமலிங்க சுவாமிகள்,

அன்பே வடிவம் ஆனவன் ஆண்டவன். அன்பு வேறு, தெய்வம் வேறு அல்ல என்கிறார் திரு மூலர்.



''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே''

எங்கே அன்பிருக்கிறதோ அன்பு உள்ள அந்த இடத்தைத் தேடி இறைவனே அங்கே வந்து அருள் செய்கிறான். இதைத்தான் நம்முடைய இலக்கியங்கள் வற்புறுத்திச் சொல்கின்றன.

கண்ணப்பர் ஒப்பற்ற அன்புடையவராக இருந்தார். 6 நாள் அவர் காட்டிய அன்பிற்கு இறங்கி அவரைத் தேடி வந்து ஆட்கொண்டார் இறைவர். சிறுத்தொண்டர் எத்தகைய சோதனையைக் கண்டும் அஞ்சாத அன்புடையவராக இருந்தார். அவர் காட்டிய அன்பிற்கு ஆட்பட்டார் இறைவர்.

தம்முடைய பக்தர்கள் செல்வரா, அல்லது வறியவரா என்று இறைவன் பார்ப்பதே இல்லை. உள்ளம் நல்ல உள்ளமா? அது அன்பு பெருகும் உள்ளமா? இதைத்தான் இறைவன் பார்க்கிறார்.

எல்லோருக்கும் திருவேங்கடமலை தெரியும். 'படியாய்க் கிடந்து பவளவாய் காண்பேனே' 'மீனாய்ப் பிறக்கும் விதி உடையேன் ஆவேனே' என்று திருவேங்கடமலையில் ஒரு கல்லாக, மரமாக, மீனாக ஆகவேண்டும் என்று குலசேகராழ்வார் பாடி உருகியதை நமக்கு வைணவப் பிரபந்தங்கள் காட்டுகின்றன.

அப்படிப்பட்ட திருவேங்கட மலைமேலே கோயில் கொண்டுள்ள வேங்கடநாதனுக்குத் தொண்டைமான் என்கிற மாமன்னன் பெரிய பக்தனாக இருந்திருக்கிறான். அவன் தினமும் பூசை செய்யும்போது, பொன்னாலேயே பூக்களைச் செய்து அந்தப் பொற்பூக்களாலே பெருமாளுக்கு அபிசேகம் செய்திருக்கிறான். நம்மை போல பக்தன் உண்டா என்கிற ஆணவம் அந்த மன்னனிடத்திலே இருந்திருக்கிறது. அன்பெனும் பிடியுள் அகப்படும் இறைவனுக்கு ஆணவம் என்பது சிறிதும் பிடிக்காத ஒன்று. மன்னனுக்கு ஒரு பாடம் கற்றுத்தரவேண்டும் என்று எண்ணிவிட்டான் திருவேங்கடநாதன்.

ஒரு நாள் பொற்பூக்களைக் கொண்டு மன்னன் நெடுமாலைப் பூசிக்கும்போது, மண்ணுருண்டைகளும், நடுநடுவே வந்து விழக்கண்டு திகைக்கிறான் மன்னன். 'ஆ' பொன்மலர்களுக்கு நடுவே மண்மலர்களா! யார் இதைச் செய்வது?' என்று கோபிக்கிறான். அப்போது வேங்கடநாதனே அசரீரியாகச் சொல்கிறார். "அப்பா, கோபிக்காதே! உன் பொன்மலர்களை விடவும் எனக்கு இந்த மண்மலர்கள் தான் அதிக விருப்பத்தை தந்திருக்கின்றன. இந்த மண்மலரால் என்னை அருச்சிக்கிறவன் கால் ஊனமான ஒரு பக்தன். மண்பாண்டம் வனைகிறவன் அவன்! 'மலர் பறித்து உனக்கு மாலை போட எனக்குக் கால்கள் இல்லை இறைவா! இந்த மண் உருண்டைகளை மலர்களாக ஏற்றுக் கொள்' என்று பக்தியோடு கண்ணீரையும் சொரிந்து நாளும் பூசை செய்கிறான். அவன் உருக்கத்துடன் படைக்கிற இந்த எளிய மண்மலர்களை நீ அர்ப்பணிக்கும் பொன்மலர்களினும் அதிகமாக நான் நேசிக்கிறேன்.''

என்று கூறித் திருவேங்கடநாதன் தொண்டைமான் மன்னனின் ஆணவம் அகற்றினான் என்பதை நாம் கதையாகப் பார்க்கிறோம். இறைவனுக்குச் சாதிபேதம் கிடையாது; தொழில் பேதம் கிடையாது. நிற பேதம் கிடையாது. இறைவனை நேசிக்கிற மெய்யான பக்தர்களும், இத்தகைய பேதங்களைப் பாராட்ட மாட்டார்கள். விரும்பிட மாட்டார்கள்.

சேரமான் பெருமாள் நாயனார் என்பவர் பெரிய சிவபக்தர். சேரநாட்டிற்கு அரசராக வீற்றிருந்த இவர் திருநீறு பூசிய அடியார்கள் யாராக இருந்தாலும் அவரைப் பேதம் இன்றிப் பணிந்து வணங்கினார் என்பதையும் பெரிய புராணம் கூறுகிறது.

வாரியார் சுவாமிகள் நெற்றியிலே பட்டை பட்டையாகத் திருநீறு பூசியிருப்பார் என்பது நம் அனைவருக்கும் தெரியும்.

ஒரு நாள் ஒரு மாணவன் அவரைப்பார்த்து 'நெற்றியில் ஏன் வெள்ளையடித்துக் கொண்டிருக்கிறீர்கள்!' என்று கேட்டான்.

'தம்பி! குடியிருக்கிற வீடு சுத்தமாக இருக்க வேண்டும் என்று தானே வெள்ளையடிக்கிறோம். அதைப் போல இறைவன் குடியிருக்கிற வீடு இந்த உடல் என்று காட்டத்தான் வெள்ளை நீறு பூசிக்கொள்கிறோம்'' என்று பதில் சொன்னாராம் வாரியார்.

அந்த மாணவன் பிறகு பதில் ஏதும் பேச வில்லையாம், ''சுவாமி எனக்கும் கொஞ்சம் திருநீறு தாருங்கள்'' என்று கேட்டுப் பூசிக் கொண்டானாம்.

அப்படிப்பட்ட திருநீறு பூசிய யாவராயினும் அவரை மதித்து வணங்கிப் போற்றினார் மாமன்னராக இருந்த சேரமான் பெருமான் நாயனார். ஒரு நாள் பட்டத்து யானைமேல் அவர் வந்து கொண்டிருந்தபோது ஒரு வண்ணான் உவர்மண் மூட்டையோடு எதிரிலே வந்தான். மழையிலே நனைந்து அவனுடைய உவர்மண் மூட்டையும் நனைந்து, திட்டுதிட்டாக வெள்ளையாக உவர்மண் அந்த வண்ணான் மேனியிலே படிந்திருந்தது.

அந்த வண்ணான் எதிர்வரக் கண்ட சேரமான் பெருமாள் நாயனார் அவனைத் திருநீறு பூசிய சிவனடியாராக எண்ணிக் கும்பிட்டாராம், வண்ணான் அச்சத்தோடு 'அடியேன் வண்ணான்! என்னை மன்னர் பெருமான் வணங்கலாமா' என்று கேட்க, சேரமானும்' 'அடியேன் சேரன், உம்மைக் கண்டு திருநீறு பூசிய அடியாருடைய நினைவு வந்தது. வணங்கினோம்' என்று பணிவோடு கூறி அனுப்பி வைத்தாராம்.

இப்படி நம்முடைய சமயங்கள் சமத்துவம் வளர்க்கும் - அன்பு வளர்க்கும்-மனித நேயம் வளர்க்கும் மாபெரும் பணியை ஆற்றியிருக்கின்றன. இன்றும் ஆற்றி வருகின்றன என்பதைத்தான் நான் இன்று இந்தக்கலை விழாவிலே என்னுடைய சிந்தனையாக உங்கள் முன் வைக்கவிரும்புகிறேன்.

நம்முடைய இந்து சமயம் என்பதுமிகவும் தொன்மையானது. பல உட்பிரிவுகளைக் கொண்டது. சிவபெருமானை வணங்குவது சைவம், பெருமாளை வணங்குவது வைணவம், கணபதியை வணங்குவது காணாபத்யம், குமரனை வணங்குவது கௌமாரம், சக்தியை



வணங்குவது சாக்தம், சூரியனை வணங்குவது சௌரம். இப்படி சைவம், வைணவம் முதலான ஆறு உட்பிரிவுகளும் இணைந்ததுதான் இந்து மதம்.

முருகப் பெருமானுக்கு உள்ளவை ஆறு முகங்கள். மேற்கூறிய ஆறு மதங்களையும் ஒன்றென இணைக்கும் வகையிலேதான் தமிழ்க் கடவுளாம் முருகனுக்கு ஆறு முகங்களை நம்டைய முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள்.

''கந்தனை வணங்கினால்
கடவுளர் யாவரையும்
வணங்குதல் போலே''

என்று கவியரசர் கண்ணதாசன்கூட ஒரு பாட்டு எழுதியிருக்க காண்கின்றோம்.

கந்தனைக் கும்பிட்டால் தந்தை சிவ பெருமானும் வருவார். தாய் பார்வதியும் வருவார். அண்ணன் கணபதியும் வருவார், மாமன் திருமாலும் வருவார், சூரியன் முருகனுடைய முக்கண்களிலே ஒரு கண்ணாக விளங்குகிறார். ஆகவே, கந்தனைக் கும்பிட்டால் எல்லாக் கடவுளையும் கும்பிட்டதற்குச் சமமாகும்.

அதைப் போலத்தான் சிவபெருமானைக் கும்பிட்டாலும், பார்வதியைக் கும்பிட்டாலும் திருமாலைக் கும்பிட்டாலும், விநாயகரைக் கும்பிட்டாலும் எல்லாக் கடவுளையும் கும்பிட்ட ஒரு நிறைவை நாம் காண முடியும். ஒன்றே குலம் ஒருவனே தேவன். இதைத்தான் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருமூலர் என்ற மகான் திருமந்திரத்திலே சொல்லி விட்டுச் சென்றிருக்கிறார்.

ஒரு ஊர் என்றால் அந்த ஊரை அடைவதற்கு ஆறு வழிகள் இருக்கலாம். ஆனால் எல்லா வழிகளும் ஒரு ஊரைப் போய் சேருவதற்குத்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

''ஒன்றது பேரூர் வழிஆறு அதற்குள்'' என்பதும், திருமூலர் சொன்ன தத்துவம் தான்.

இதைத்தான் இராமகிருஷ்ணப் பரம அம்சர் எல்லோருக்கும் விளங்கும்படியாக எளிமையாகச் சொல்கிறார்.

''நதிகள் யாவும் ஒரே கடலைச் சென்று சேர்வதைப் போல மதங்கள் யாவும் ஒரே பரம்பொருளைத்தான் காட்டுகின்றன.''

''ஒன்று பரம்பொருள், நாம் அதன் மக்கள் உலகு இன்பக் கேணி'

இது மகாகவி பாரதியாருடைய வாக்கு.

கடவுள் ஒருவரே, அவருக்குப் பெயர்கள் ஆயிரம்; என்ன இதன் பொருள்? ஆயிரம் பெயரைச் சொல்லிப் போற்றினாலும், தெய்வம் ஒரே தெய்வம்தான். சமயப்பூசல் கூடாது என்பதுதான் பொருள்.


இந்த உண்மை எல்லோருக்கும் தெரியும். அப்படி தெரிந்தாலும், சுயநலம் காரணமாக ஒரு சிலர் சமயச்சண்டைகளை மூட்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள்.

அவர்களைத் தெய்வம்தான் திருத்த வேண்டும். சிலரை எல்லாம் தெய்வமே முயன்றாலும்கூட திருத்த முடியாது என்றுகூறுகிறார் இராமகிருஷ்ண பரம அம்சர்.

வேற்றுமையில் ஒற்றுமை உணர்வை ஊட்டி, அனைத்துயிர்கள்பாலும், அன்பு பாராட்டி, பரந்த உள்ளத்தோடு,''எத்தனை எத்தனை இன்பம் வைத்தாய் இறைவா இறைவா'' என்று எல்லோரும் இன்புற்றிருக்க வழி காட்டுவதுதான் நம் இந்து மதம்.

அத்தகைய இந்து மதம் தோன்றிய நம் இந்திய நாட்டு மக்களின் நாகரீகம், பண்பாடு, கலை ஆகியவை உலகிலேயே மிகவும் சிறந்ததாகும். அதிலும் குறிப்பாக நம் தமிழர் நாகரீகம், பண்பாடு, கலை ஆகியவற்றின் வளர்ச்சி, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் அமைந்துள்ள தென்றால் அது மிகையாகாது.

அறிவியலில் வளர்ந்துவிட்ட ஜப்பான் போன்ற நாடுகள்கூட அவர்களது பண்பாடு, கலை, நாகரீகத்தைக் கட்டிக் காத்து வருவதைப் பார்க்கிறோம். அதைப்போல நாமும் நமது தமிழர் நாகரீகம், பண்பாடு கலைத்துறை ஆகியவற்றைப் போற்றி வளர்க்கவேண்டும். உலகப் பெரும் மதங்களில் ஒன்றாக விளங்குவதும், தொன்மையும், சிறப்பும் வாய்ந்ததுமான இந்து சமயத்தவர்களாகிய நாம் கொடுத்து வைத்தவர்கள். சமயத்தைப் போற்றி வளர்ப்பன திருக்கோயில்கள். அத்தகைய திருக்கோயில்களில் ஒன்றான வத்திராயிருப்பு முத்தாலம்மன் திருக்கோயில் திருவிழாவின் ஒரு பகுதியாக இந்தக் கலைவிழா ஆண்டுதோறும் நடைபெறுவது சிறப்புக்குரிய ஒன்றாகும்.



பட்டினத்தார் பாடியுள்ள ஒரு பாடலை இங்கு நான் நினைவுப்படுத்த விழைகின்றேன்.

" ஒன்றென்றிரு தெய்வம்உண்டென்று
உயர்செல்வமெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார்
நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு நடுநீங்காமலே நமக்கிட்டபடி
என்றென்றிரு மனமே உனக்குபதேசமிதே''.

தெய்வ நம்பிக்கை வேண்டும். அத்தெய்வமும் ஒரே தெய்வம் என்கிற நல்லுணர்வும் வேண்டும். செல்வத்தைப் பெரிதென மதிக்கக் கூடாது. அறவழியில் பொருள் ஈட்டி அறங்களுக்கே பொருட்களைச் செலவழிக்க வேண்டும். நல்ல நட்பு, வாழ்க்கை இனிதாக துணை புரியும் என்பதால் நட்பைப் போற்றவேண்டும். நமக்கென்று உள்ளது நம் விதியின் வழி நம்மை வந்து சேர்கிறது என்ற உணர்வோடு பொறாமையின்றி, இப்பூமியில் நாம் வாழ வேண்டும் எனறு பட்டினத்தார் பாங்குடன் உணர்த்தியுள்ள ஒப்பற்ற இக்கருத்தை ஏற்று, நாம் சிறப்பாக வாழ்ந்திட, எல்லாம் வல்ல முத்தாலம்மன திருவருளைப் போற்றிட வேண்டும் எனக் கூறி, இவ்வினிய வாய்ப்பளித்த சான்றோர்களுக்கு மீண்டும் என் மனமார்ந்த நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி. வணக்கம்.

# பதினாறு

**சேது. சிவா**
**மேலாளும் அறங்காவலர்,**
**அருள்மிகு மாணிக்கவாசகர் ஆலயம், சின்னமனூர்**

இலக்கியம், புராணம், இலக்கணம், சாத்திரம், தோத்திரம், உலகியல், உடற்கூறு ஆகியவற்றில் பதினாறு எவ்வெவ்வாறு இடம் பெற்றுள்ளது என்பதனை ஓரளவு தொகுத்துப் பார்ப்பதே இக்கட்டுரை.

பதினாறு என்றவுடன் அனைவருக்கும் நினைவுக்கு வருவது மார்க்கண்டேயரின்வயது.

கடகம் என்ற நகரில் இருந்த குச்சகன் என்னும் அந்தணரின் மகன் கௌசிகன் என்பவர், சிவபெருமானை நோக்கித் தவம் இயற்றினார். எப்படிப்பட்ட தவம்! மாணிக்கவாசகர் சுவாமிகள் கூறுவது போன்று ''ஊன் கெட்டு, உயிர்கெட்டு, உணர்வு கெட்டு உள்ளமும் போய்த்'' தவம் இயற்றினார். அவரின் உடல்மீது விலங்குகள் தங்களின் தினவு தீர உராய்ந்து சென்றன.

திருமால் அவர்முன் தோன்றி ''உன்மீது மிருகங்கள் உராய்ந்து சென்றமையால் 'மிருக கண்டூயன்' என்னும் பெயரினைப் பெறுவாய் என்று அருள் செய்தார்.

மிருக கண்டூயர் தன் தந்தையின் சொற்படி இல்லற வாழ்க்கையை ஏற்றார். அவர் தனக்குக் குழந்தை வரம் வேண்டிச் சிவபெருமானை நோக்கித் தவம் இயற்றினார். அவரது தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் அவர்முன் காட்சி கொடுத்து ''வேண்டிய வரம் யாது!'' என்று வினவ; அவர் ''குழந்தை வரம் வேண்டும்'' என்றார். சிவபெருமான் அவரிடம்; ''தீமை செய்யும் குணமும், உண்மை அறிவும் இல்லாமலும், ஊமையாகவும், செவிடாகவும் மூடமாகவும், குருடாகவும், நூறு வயது வரை நோயினால் அழுந்துபவனாகவும் ஒரு மகனைக் கொடுக்கவா!''

''தீதுறு குணமே மிக்குச் சிறிது மெய்யுணர் விலாமல்
மூங்கையும் வெதிருமாகி முடமுமாய் விழியும் இன்றி
ஓங்கிய ஆண்டு நூறும் உறுபிணி உழப் போனாகி
ஈங்கொரு புதல்வன் தன்னை ஈதுமோ மாதவத் தோய்''

-கந்தபுராணம் 2-5-173

''அழகுமிக்குடையவனாகவும் உடற்குன்றம் இல்லாதவனாகவும்; நோயற்றவனாகவும், எம்மிடம் அன்பு உள்ளவனாகவும் பதினாறு ஆண்டுகள் வாழ்வு பெற்றுக் கலைகளில் சிறந்து வல்லவனாகும் மகனைத் தரவா''


'கோலமெய் வனப்பு மிக்குக் குறைவிலா வடிவம் எய்தி
ஏலுறு பிணிகள் இன்றி எமக்கும் அன்புடையோனாகிக்
காலம் எண்ணி ரண்டே பெற்றுக் கலைபல பயின்று வல்ல
பாலனைத் தருதுமோ! நின்எண்ணம் என்பகர்தி என்றான்',

—2-5-180'

மிருககண்டுயர் முதலில் கூறப்பட்ட குழந்தையை மறுத்து, இரண்டாவதாகக் கூறப்பட்ட குழந்தையை வேண்டினார். இறைவனும் அவ்வாறே வரம் அருளினார்.

மிருககண்டுயரின் மனைவி கர்ப்பம் தரித்து, ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். குழந்தைக்கு மார்க்கண்டேயர் என்று பெயர் சூட்டப்பட்டது. குழந்தை வளர்ந்து, தந்தையாரால் கலைகள் உணர்த்தப் பெற்று, சிறந்து விளங்கி, சிவபெருமானிடம் பற்றுக் கொண்டு மெய்யன்புடன் வழிபட்டு வந்தது. மார்க்கண்டேயருக்கு வயது பதினாறு தொடங்கியவுடன் பெற்றோர், இறைவன் வழங்கிய வரத்தை எண்ணி வருந்தினர். அவர்களின் வருத்தத்தைக் கண்ட மார்க்கண்டேயர், அவர்களிடம் காரணம் கேட்க; அவர்கள் இறைவன் வழங்கிய வரத்தின் விவரங்களைக் கூறி, அவருக்குப் பதினாறு வயது ஆண்டு நடந்து கொண்டிருப்பதால், ஆண்டின் முடிவில் அவருக்கு ஏற்பட இருக்கும் மரணம் பற்றி வருந்துவதாகக் கூறினர். மார்க்கண்டேயர் பெற்றோரைத் தேற்றி அவர்களை விட்டு மணிகன்னிகை என்னும் திருக்கோயிலில் ஓரிடத்தில் சிவலிங்கம் அமைத்து, அன்போடு வழிபட்டுப் போற்றி வந்தார்.

அவரின் வழிபாட்டிற்கு மகிழ்ந்து சிவபெருமான் காட்சி கொடுத்து ''விரும்பியது யாது!'' என்று வினவ; மார்க்கண்டேயர்,



''பரம்பொருளே! அடியேன் எமனின் கைப் படாமல் திருவருள் புரிய வேண்டும்'' என்றார். இறைவன் அவரை நோக்கி, ''நீ கூற்றுவனுக்கு அஞ்சாதே'' என்று கூறி, அவரின் தலைமீது திருவடிகளை வைத்து அருள் செய்து மறைந் தருளினார்.

மார்க்கண்டேயருக்கு வயது பதினாறு நிறைந்தது. எமனின் ஆணைப்படி தூதன் மார்க்கண்டேயரின் உயிரைக் கைப்பற்ற வந்து அவரின் சிவவழிபாட்டினைக் கண்டு அவரை அணுக முடியாமல் திரும்பி எமனிடம் கூறினான். எமன் தன் அமைச்சனாகிய காலனை அனுப்பினான். காலனும் சென்று மார்க்கண்டேயரின் உயிரைக் கௌவ முடியாமல் திரும்பினான். எமன் தானே நேரில் மார்க்கண்டேயரிடம் சென்று, 'உன் உயிரைப் பற்றாமல் செல்ல மாட்டேன்' என்று கூறிப்பாசக் கயிற்றினை வீச, மார்க்கண்டேயர் சிவபெருமானைப் போற்றினார். சிவபெருமான், 'மகனே! அஞ்சாதே'. என்று கூறி வெளிப்பட்டு எமனை தமது இடது திருவடியினால் உதைத்தார். எமன் உயிரற்று வீழ்ந்தான்.

சிவபெருமான் மார்க்கண்டேயரை நோக்கி, 'மகனே! உனக்கு முடிவில்லாத ஆயுளைத் தந்தோம்' என்று அருள் செய்தார்.

முடிவில்லாத ஆயுள் என்பது காலச் சுழற்சியினால் கூடிக் கொண்டே செல்லும் ஆயுள் ஆகும். அதனால்தான் மார்க்கண்டேயருக்கு என்றும் பதினாறு வயது.

0 0 0

'பிறைச் சந்திரனைச் சடையிற் சூடிய சிவபெருமானே! நான் சுவர்க்கத்தில வாழ்ந்தாலும்; நரகத்தில் அழுந்தினாலும், இறந்தாலும், பிறந்தாலும், இன்பம் அனுபவித்தாலும் இந்த வரங்களை மறுத்திடாமல் நீ எனக்கு வழங்க வேண்டும்' என்று சைவ சமயக் கோட்பாடுகளுடன் கூடிய பதினாறு வரங்களைத் திருநந்தி தேவர் சிவபெருமானிடம் வேண்டுவதாக திருவையாற்றுப் புராணம் பாடுகின்றது.

'மறைகள் நிந்தனை சைவநிந்தனை
பொறா மனமும்1
தறுகண் ஐம்புலன் களுக்(கு) ஏவல்
செய்யுறாச் சதுரும்2
பிறவி தீ(து) எனாப் பேதையர் தம்மொடு
பிணக்கும்3
உறுதி நல்லறம் செய்பவர் தங்களோ(டு)
உறவும்4
யாது நல்லன்பர் கேட்கினும் உதவுறு(ப்)
இயல்பும்5
மாத வத்தினோர் ஒறுப்பினும் வணங்கிடு
மகிழ்வும்6
ஓது நல்லுப தேசமெய் உறுதியும் அன்பர்7
தீது செய்யினும் சிவன்செயல் எனக்கொளும்
தெளிவும்8
மனமும் வாக்கு(ம்)நின் அன்பர்பால்
ஒருப்படு செயலும்9
கனவிலும் உனது அனபருக்கு அடிமையாம்
கருத்தும்10
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா
நிலையும்11
புனித நின்புகழ் நாடொறும் உணர்த்திடும்
பொலிவும்12
தீமை யாம்புறச் சமயங்கள் ஒழித்திடும்
திறனும்13
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறா
வளனும் 14
ஏழுறும் பரதாரம் நச்சிடாத
நன்னோன்பும்15
தூய்மை நெஞ்சின் யானெனது எனும்
செருக்குறாத் துறவும்16
துறக்கமீ துறையினும் நரகிற் றோய்கினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பம் துய்க்கினும்

பிறைக் கொழுந்(து) அணிசடைப் பெரும
இவ்வரம்
மறுத்திடா(து) எனக்குநீ வழங்கல்
வேண்டுமால்''

0 0 0

திரிபுராந்தகரர்களால் தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைத் தேவர்கள் திருக்கைலாய பதிக்கு விண்ணப்பிக்க, அவர் ஆயிரம் தேவ வருடம் தம் மூன்று கண்களையும் மலர்த்திக் கொண்டிருப்ப, சந்திரனாகிய இடக் கண் பொழிந்த நீரிலே பதினாறு உருத்திராட்ச மரங்கள் உதித்தன. அவ்வுருத்திராக்கங்கள் வெண்மை நிறம் கொண்டவை.

பதினாறு முகமுடைய உருத்திராக்கங்கள் முப்பத்து முக்கோடி தேவர்கள், பிரம்மா, விட்டுணு, சிவன் ஆகியவர்களுக்கு விருப்பம் உண்டாக்கும்.

0 0 0

தேவர்களும் அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடையும் பொழுது தோன்றியவை களைக் குணம் மற்றும் இனவாரியாகத் தொகுத்துப் பார்க்கும் பொழுது; 1. ஆலகால விடம், 2. மூதேவி, 3. இலக்குமி, 4. சரசுவதி, 5. இந்திராணி, 6. சந்திரன், 7. அரம்பையர், 8. தன்வந்திரி, 9. ஐராவதம் (யானை), 10. உச்சைச்சிரவம் (குதிரை) 11. காமதேனு, 12. கற்பக விருட்சங்கள், 13. கௌத்துவமணி 14. சிந்தாமணி, 15. சங்கநிதி, பதுமநிதி 16. சுரை (பானம்) ஆகிய பதினாறும் தோன்றிய பின்னர்தான் அமுதம் தோன்றியது.

0 0 0

திருப்பாற் கடலில் தோன்றிய சந்திரனுக்கும் பதினாறு கலைகள்-கூறுகள்-உண்டு.

0 0 0

சைவ ஆகமங்கள் இருபத்து எட்டில் விமலம், புரோற்கீதம் என்னும் இரண்டிற்கும் உபபேதங்கள் தனித்தனியே பதினாறு ஆகும்.

0 0 0

நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை, ஒரு இடத்தில் ஒரு பொருளில் நிறுத்தி வழிபடும் பொழுது பதினாறு வகையில் உபசாரங்கள் செய்து வழிபடுவதற்கு சோடசோபசாரம் என்று பெயர். அப் பதினாறு வகை யாவன; 1. ஆவாகனம்; 2 தாபனம்; 3. சந்நிதானம்; 4. சந்நிரோதனம்; 5. அவகுண்டம்; 6. தேனுமுத்திரை, 7. பாத்தியம்; 8. ஆசமனீயம்; 9. அருக்கியம், 10. புஷ்பதானம்; 11. தூபம், 12. தீபம்; 13. நைவேத்தியம், 14. பானீயம், 15. ஜபசமர்ப்பணம்; 16. ஆராத்திகம்.

0 0 0

பொத்தப்பி நாட்டில் உடுப்பூரில் வேடுவர் தலைவனாகிய நாகன் தன் மனைவியாகிய தத்தையுடன் குலதெய்வமாம் முருகனை வழிபட்டுப் பெற்ற குழந்தையைக் கையில் எடுக்கும் பொழுது, அக்குழந்தை 'திண்' என்று இருந்ததினால் திண்ணன் என்று பெயர் சூட்டி வளர்த்தான். திண்ணனும் வளர்ந்து வில் மற்றும்இதர படைக் கருவிகளைக்கையாளும்திறமையினைத் தெளிவாகக் கற்று, அனைத்துக்கலைகளும் வளரப் பெற்ற சந்திரனைப் போல் பதினாறு ஆண்டு காளைப் பருவம் அடைந்தார்.

'வண்ணவெஞ் சிலையும் மற்றும் படைகளும்
மலரக் கற்றுக்
கண்ணகல் சாயல் பொங்கக் கலைவளர்
திங்களே போல்
எண்ணிரண் டாண்டின் செவ்வி எய்தினார்
எல்லை இல்லாப்
புண்ணியம் தோன்றி மேன்மேல் வளர்வதன்
பொலிவு போல்வார்''

என்று சேக்கிழார் பெரிய புராணத்தில் பாடுகின்றார்.

''இவ்வண்ணம் திண்ணனார் நிரம்பு நாளில்''-அதாவது இப்படி திண்ணனார் பதினாறு வயது நிறையும் நாளில், தந்தை நாகன் மூப்பின் காரணமாக வேடர்தலைவன் பொறுப்பினைத் திண்ணனுக்குக் கொடுத்தான்.

திண்ணன் முதலாவது வேட்டையாகிய கன்னிவேட்டைக்குச் சென்று காளத்தி மலையில் குடுமித்தேவரைக் கண்டு, உள்ளம் பறி கொடுத்து, அன்பு பெருகத் தொண்டு செய்து, குடுமித் தேவரின் கண்களில் வலக்கண்ணில் குருதி ஒழுகக் கண்டு, பச்சிலைச் சாறு பிழிந்தும் நிற்காதது கண்டு; ''ஊனுக்கு ஊன்'' என்னும் சொற்கு இணங்க, அம்பினால் தன் கண்களில் ஒன்றைப் பெயர்த்து எடுத்து இரத்தம் ஒழுகும் வலக்கண்ணில் பொருத்தினார். இரத்த ஒழுக்கு நின்றது. மகிழ்ச்சி மிகுதியினால் தோள்களைக் கொட்டி ஆடினார். தன் செயலைத் தானே பாராட்டி மகிழ்ந்தார்.

குடுமித் தேவர் தமது இடக் கண்ணிலும் இரத்தம் ஒழுகும்படி செய்தார். அதனைக் கண்டதிண்ணன் வருந்தவில்லை. 'எனக்குத் தான் மருந்துதெரியுமே; என்னிடம் மற்றொரு கண் உள்ளது. அதனையும் அக்கண்ணில் அப்புவேன்'' என்று கூறி, தன்கண்ணைப் பெயர்த்து விட்டால், குடுமித் தேவரின் இரத்தம் ஒழுகும் கண்ணைக் குறிப்பாகப் பார்க்க முடியாதே என்று எண்ணித் தன் இடது காலைத் தேவரின் இடக்கண் அருகே ஊன்றிக் கொண்டு, கண்ணைப் பெயர்க்க அம்பினை ஊன்றிய வுடன் தேவ தேவர் 'கண்ணப்ப நிற்க' என்று மும்முறைக் கூவித் தன் திருக்கையால், திண்ணனின் கையைப் பற்றிக் கொண்டு, 'என் வலத்தில் மாறிலாய், நிற்க'' என்று அருள் செய்தார்.

திண்ணன் குடுமித்தேவரின் திருக்கையினால் பற்றப்பட்டு, கண்ணப்பன் என்று பெயர் சூட்டப் பெற்று, சிவசாமீபம் பேறு பெற்றது பதினாறு வயதாண்டில்.

திருமயிலையில் சிவநேசர் என்பவர் தன் மகள் பூம்பாவை அரவு தீண்டி இறந்துவிட, உடல் எரிக்கப்பட்ட அவளின் எலும்பினைப் பெண்ணுருவாக்கிய பொழுது திருஞான சம்பந்தருக்கு வயது பதினாறு என்பதனை;

'எண்ணிலாண் டெய்தும் வேதாப் படைத்
தவள் எழிலின் வெள்ளம்
நண்ணுநான் முகத்தால் கண்டான் அவளினும்
நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினாறாண்டு பேர்பெறும் புகலி
வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரம்
முகத்தாற் கண்டார்''

என்று சேக்கிழார் பாடுகின்றார்.

பூம்பாவையை மீண்டும் பெண்ணுருவாக்கி உயிர்ப்பித்து சிவநேசரிடம்ஒப்படைத்துவிட்டுப் பல திருத்தலங்களையும் வழிபட்டுப் போற்றிப் பின்பு சீகாழியை அடைந்து இருந்த திருஞான சம்பந்தரிடம் பெற்றவரும், மற்றவர்களும் ''திருவளர் ஞானத் தலைவர் திருமணம் செய்தருளுதற்குப் பருவமிது' என்றெண்ணி, அவரிடம், 'கோதில்மறை நெறிச் சடங்கு காட்ட வரும் வேள்வி பல புரிவதற்கோர் கன்னிதனை வேட்டருள வேண்டும்'' என்று விண்ணப்பம் செய்தனர்.

திருஞான சம்பந்தருக்குத் திருமணம் பதினாறு வயதில். திருமண நாளன்றே சிவப் பேறும் அடைந்ததினால்' தொல் ஞான சம்பந்தர்க்கு அந்தம் பதினாறு அறி' என்று தனிப் பாடல் பாடுகின்றது.

0 0 0

உலக வாழ்க்கைக்குத் தேவையான பதினாறு பேறுகளைப் பழம் பாடல் ஒன்று பாடுகின்றது.

'புகழ்1 கல்வி2 ஆற்றல்3 வென்றி4 புகலும்
நன்மக்கள்5 பொன்6 நெல்7
அழகொடு இளமை8 நல்லூழ்9 அறிவு10
நற்பெருமை''11 சால்பு12
பகருறு துணிவு13 வாழ்நாள் 14 பண்பில்
நோயின்-மை 15யொடு
புகலுறு நுகர்ச்சி16 கூடப் பொருந்திய பேறு
ஈரெட்டாம்,''

ஆலவாயாகிய மதுரைப் பெருமானிடம் பதினாறு பேறுகள் வேண்டுவதாகப் பாடல் ஒன்று பாடுகின்றது.

'துதிவாணி1 வீரம்2 விசயம்3 சந்தானம்4
துணிவு5 தனம்6
மதி7 தானியம்8 சவுபாக்கியம்9 போகம்10
அறிவு11 அழகு12
புதிதாம் பெருமை13 அறம்14 குலம்15
நோயகல் பூண் வயது16
பதினாறு பேறும் தருவாய்மதுரைப் பராபரனே
துதிவாணி—கல்வி.

'அகிலமதில் நோயின்மை1 கல்வி2 தனம்3
தானியம்4
அழகு5 புகழ்6 பெருமை7 இளமை8
அறிவு9 சந்தானம்10 வலி11 துணிவு12
வாழ்நாள்13 வெற்றி14
ஆகுநல்லூழ்15 நுகர்ச்சி16
தொகை தரும் பதினாறு பேறுந்தந் தருளிநீ
சுகானந்த வாழ்வளிப்பாய்''

அபிராமி பட்டர் மற்றொரு பாடலில் பதினாறு பேறுகள் என்று கூறாமல், உலக வாழ்க்கைக்குத் தேவையான பதினாறு பாடுகின்றார்;

'கலையாத கல்வியும்1 குறையாத வயதும்2ஓர்
கபடு வாராத நட்பும்3
கன்றாத வளமையும்4 குன்றாத இளமையும்5
கழுபிணி இலாத உடலும்6
சலியாத மனமும்7அன்பு அகலாத மனைவியும்8
தவறாத சந்தானமும்9
தாழாத கீர்த்தியும்10 மாறாத
வார்த்தையும்11
தடைகள் வாராத கொடையும்12
தொலையாத நிதியமும்13 கோணாத
கோலும்14 ஒரு
துன்பம் இல்லாத வாழ்வும்15
துய்யநின் பாதத்தில் அன்பும்16 உதவிப்
பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்''

'உண்ணாமுலைச் சத்திக்குரிய அண்ணா மலைத் தெய்வமே' என்று விளித்து, திருச் சிற்றம்பல நாவலர் அண்ணாமலை சதகத்தில் கூறும் பதினாறு பேறுகளாவன;

'நதிவளந் தருபூமி விளைகின்ற நெல்லாதி
நவதானியப் பெருமையும்,
நற்குணத்தொடு சொன்ன சொற்படி நடந்து
வரு
நன்மனையும்2 நன்மக்களும்3
மதிவளந் தருகின்ற குறைவிலாக் கல்வியுடன்4
மனமிக்க ஞான அறிவும்5
வளர்கின்ற இளமையொடு6 மறுவிலா அழகும்
மகிழ்ச்சி தரு நோயின்மையும்8
விதிவளந் தருகின்ற வாழ்நாளும்9
மெய்த்திடமும்10
மெய்த்துணிவும்11 மிக்க புகழும்12
வெற்றியுடன்13 நல்லூழும்14 அறுவை
நுகர்ச்சியும்15
மேலான நிறைந்த தனமும்16 என்பன.

0 0 0

அட்டாங்க யோக சாத்திரம், உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களில் விசுத்தி என்று கூறப் படும் கண்டத்தில் பதினாறு இதழ்த்தாமரை சூக்கும சக்கரநிலையில் உள்ளது என்று கூறு கின்றது.

0 0 0

காளைப் பருவம் பதினாறு என்றும், அந்த வயதில் சிவபுராணங்கள், சாத்திரங்கள் கற்று; அடியார்களின் திருவடிகளை நினைந்து வணங்க வேண்டும் என்பதனை;

'அவனிதனிலே பிறந்து மதலையெனவே
தவழ்ந்து
அழகு பெறவே நடந்து இளையோனாய்
அருமழலையே மிகுந்து குதலைமொழியே
புகன்று
அதிவிதமாய் வளர்ந்து பதினாறாய்
சிவகலைகள் ஆகமங்கள் மிகவுமறையோதும்
அன்பர்
திருவடிகளே நினைந்து துதியாமல்''

என்று திருப்புகழில் அருணகிரிநாதர் பாடுவதுடன்.

'வனிதையுடல் காயநின்ற உதிரமதிலேஉருண்டு
வயிற்றில் நெடுநாள் அலைந்து புவிமீதே
மனிதருரு வாகிவந்து அனுதினமும் வளர்ந்து
வயது பதினாறு சென்று வடிவாகி''

என்றும் பாடுகின்றார்.

ஒருவன் காளைப் பருவமாகிய பதினாறு வயதுக்குள் குரு உபதேசம் பெற்றும்; தமிழின் கலைகளைக் கற்றும் தெளிவடைய வேண்டும் என்பதனைப் பட்டினத்தார்;

'உயர்தரு ஞான குருவும்தேச முத்தமிழின்
கலையுங் கரைகண்டு
வளர்பிறை என்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும் வந்து'

என்று பாடி அருணகிரிநாதர் வாக்கினை உறுதிப் படுத்துகின்றார்.

0 0 0

ஆடி மாதப் பிறப்பு தெட்சிணாயனம் எனப்படும். இதில் மாதம் பிறக்குமுன் பதினாறு நாழிகை புண்ணிய காலம். தைமாதப் பிறப்பு உத்ராயணம் எனப்படும். இதில் மாதம் பிறந்தபின் பதினாறுநாழிகைபுண்ணிய காலம். கார்த்திகை, மாசி, வைகாசி, ஆவணி என்னும் இந்நான்கு மாதப் பிறப்பும் விட்டுணுபதி எனப்படும். இவைகளிலே மாதம் பிறக்குமுன் பதினாறு நாழிகை புண்ணியகாலம். ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி என்னும் இந் நான்கு மாதம் பிறப்புசடசீதிமுகம் எனப்படும். இவைகளிலே மாதம் பிறந்தபின் பதினாறு நாழிகை புண்ணிய காலம்.

0 0 0

சூரியன் மறைவுக்கு முன் கிழக்கே பதினாறு அடி நிழல் விழும் நேரம் நத்தம் என்னும் காலம் ஆகும் என்பதனை:

''அத்தம யத்தின் முன் பதினாறு அடி
நிழலை
நத்தம் எனுங் காலமென நாடு''

என்று சைவசமய நெறி கூறுகின்றது.

0 0 0

அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உண்டு என்பது பழமொழி. அண்டமாகிய புற வெளியில் உள்ள சூரியனுக்குப் பன்னிரண்டு கலைகளும், சந்திரனுக்கும் பதினாறு கலைகளும்; நெருப்புக்கு அறுபத்து நான்கு கலைகளும் இருப்பது போன்று; பிண்டமாகிய உடம்பிலும் அவைகள் அத்தன்மையில் நிற்பதனை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள் என்று திருமூலர் கூறுகின்றார்.

'பத்தும் இரண்டும் பகலோன் உயர்கலை
பத்தினொடு ஆறும் உயர்கலை யான்மதி
ஒத்தநல் அங்கிய(து) எட்டெட்(டு) உயர்கலை
அத்திறன் நின்றமை ஆய்ந்து கொள்வீரே'' 854

திருமூலர் சந்திர யோகம் என்ற தலைப்பில் சந்திர கலைகள் பதினாறும் நம் உடலோடு சேர்ந்து இருப்பதனை நீசத் தன்மையுடையவர்கள் அறியாமல், எமன் எண்ணியபடி அவனிடம் வீழ்கின்றார்களே; மயக்கத்தினை ஒழிக்க மாட்டாதவர்களாக ஆகின்றனரே என்று வருந்துகின்றார்.

''ஒன்றிய ஈரெண் கலையும் உடலுற
நின்றது கண்டு நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருத்துழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே'' 863

பதினாறு கலைகளும் உடம்பில் நிற்கும் தன்மையை, தருமபுரம் ஆதீனத்தைத் தோற்றுவித்த குருமகா சந்நிதானம் சீர் வளர்சீர் குருஞானசம்பந்த சுவாமிகள் அவர்கள் சோடச கலாப் பிரசாதசட்கம் என்னும் நூலில், ''நற்றழலின் கொழுந்து' என்ற பாடலில் கலைகளின் வன்னமும் தானமும் பாடுகின்றார்.

1. நாபித் தானத்திலே அகார கலையானது அக்கினிக் கொழுந்து போன்றிருக்கும். 2. இருதயத் தானத்திலே உகார கலையானது சந்திர சூரியருடைய ஒளி போன்றிருக்கும். 3. கண்டத்தானத்தில் மகார கலையானது மின்னல் ஒளி போன்றிருக்கும். 4. புருவ மத்தியில் விந்து கலையானது விளக்கின் தோற்றம் போன்றிருக்கும்; 5. நடுநெற்றியில் உள்ள அர்த்த சந்திரகலை, விளக்கிய வாளினை வெய்யிலில் வீசியது போன்றிருக்கும். 6. மேல் நெற்றியில் உள்ள நிரோதினி கலை, புகை போன்றிருக்கும்; 7. தலையின் உச்சியில் உள்ள நாதகலை, மாணிக்கத்தின் ஒளி போலிருக்கும்; 8. உச்சந் தலையின் பின் உள்ள நாதாந்த் கலை, இரண்டு மின்னலின் ஒளி போன்றிருக்கும்; 9. உச்சந் தலைக்கு மேல் நிராதாரமான பன்னிரண்டு அங்குல உயரப் பெரு வெளியாகிய துவாத சாந்தத்தின் அடியில்—அதாவது உச்சந் தலைக்கு மேல் ஒன்றரை அங்குல உயரத்தில் உள்ள சத்தி கலை, நூறாயிரங் கோடி உதயசூரியர்களின் ஒளி போன்றிருக்கும் 10. துவாதசாந்தத்தின் இரண்டாவது ஒன்றரை அங்குல உயரத்தில்-சத்தி கலைக்கு மேல் உள்ள வியாபினி கலை, நூறாயிரங் கோடி சூரிய வட்டத்தின் ஒளி போன்றிருக்கும்; 11. மூன்றாவது ஒன்றரை அங்குல உயரத்தில்—

வியாமபினி கலைக்குமேல் வியோம ரூபினி கலை ஞானாகாயம் போன்றிருக்கும்.; 12 நான்காவதுஒன்றரை அங்குல உயரத்தில்; -வியோம ரூபினி கலைக்கு மேல் அநந்தை எனும் கலை, ஞான சமுத்திரம் போன்றிருக்கும்; 13. ஐந்தாவது ஒன்றரை அங்குலஉயரத்தில்- அநந்தைக்கு மேல் உள்ள அநாதைகலை, ஞானக்கண்ணாடி போன்றிருக்கும்; 14. ஆறாவது ஒன்றரை அங்குல உயரத்தில்; அநாதைக்கு மேல் அநாசிருதை எனும்கலை, நூறாயிரங்கோடி பூர்ணச் சந்திரர்களின் ஒளி போன்றிருக்கும்; 15 ஏழாவது ஒன்றரை அங்குல உயரத்தில்-அநாசிருதைக்கு மேல் உள்ள சமனை எனும் கலை, நூறாயிரம் கோடி சூரியருடைய வெய்யில் ஒளி போன்று இருக்கும்; 16. எட்டாவது ஒன்றரை அங்குல உயரத்தில்-எல்லாக் கலைகளுக்கும்:—சமனைக்கும்—மேல் உள்ள உன்மனை எனும் கலை இருள் போன்றிருக்கும்.

0 0 0

திருநீற்றினைத் திரிபுண்ட ரகமாக, தலை, நெற்றி, காதுகள் இரண்டு, கழுத்து, மார்பு தோள்கள் இரண்டு, தொப்பூழ்; முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, முழந்தாள்கள் இரண்டு, முதுகு என்றும் பதினாறு இடங்களில் தரிக்க வேண்டும் என்று சைவ சமயநெறி கூறுகின்றது.

'சிர நெற்றி காது திரண்ட கழுத்தின்
உரம் தோளின் நாபி தனிலும்''
''இரண்டு முழங்கையின் இரண்டு மணிபந்தத்து
இரண்டு முழந்தாள் முதுகிலுமே''

பதினாறு உருந்திராக்கங்களால் கோர்க்கப் பெற்ற மாலைகளை தோள்களில் அணிய வேண்டும்.

0 6 0

ஒருவன் தன் மூச்சினை இடகலையால் பதினாறு மாத்திரை அளவு நேரம் பூரகமாம் உள்ளிழுத்தலைச் செய்யவேண்டும் என்பதனை திருமூலர், 'ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்' என்றும்; 'வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே' என்றும் பாடுகின்றார்.

0 0 0

பூணூல் அணிபவர்களில் மறை ஓதுபவர் பதினாறு வயதுக்குள்ளும்; மற்றவர்களுக்கும் வயது வரையறை செய்து; அந்த வயதுக்குள் அணிந்து கொள்ள வேண்டும் என்றும்; அப்பருவம் கடந்து விட்டால் சாந்தி-பரிகாரம்-செய்யாமல் அணிந்து கொள்வது முறையல்ல என்றும் அதிவீரராம பாண்டியர் காசி காண்டத்தில் பாடுகின்றார்.

''மறையோர் கட்காண்டு பதினாறு
மறங்கிடக்கும்
எறிவே லரசர்க் கியலாண் டிருபத்திரண்டு
நெறிசேர் வணிகர்க் கறுநான்கு இவை நீங்கு
மெனின்
முறையன்று சாந்தி புரிந்தன்றி முந்நூல்
சேர்த்தல்''

0 0 0

ஒருவன் தன் நினைவாற்றலின் தன்மையை வெளிப்படுத்துவதனை அவதானம் என்று கூறுவர். ஒரே நேரத்தில் நிகழ்த்தப் பெறும் பதினாறு வகைப்பட்ட, வெவ்வேறு செய்கைகளை நினைவிற் கொண்டு, அவற்றிற்கு சரியாகப் பதில் கூறுவது சோடசாவதானம் என்று கூறப்படுகின்றது.

முழு வளர்ச்சி அடைந்த ஒருவனின் மேல் தாடையில் பதினாறு பற்களும், கீழ்த்தாடையில் பதினாறு பற்களும் உள்ளன.

உணவு உட்கொண்டபின் கைகழுவி, தண்ணீர் வாயிற் கொண்டு பதினாறு தரம் இடப்புறத்தில் கொப்பளிக்க வேண்டும் என்று சைவ சமய நெறி கூறுகின்றது.

பெண்கள் வீட்டுக்கு விலக்காகும் நாள் முதல் பதினாறு நாட்கள் வரையும் ருது காலம் என்று கூறப்படுகின்றது.

இறந்து போன ஒருவனுக்கு இறுதிக் கடனிறுத்தல் பதினாறாவது நாளாகும்.

ஆசிரியனிடம் பாடம் கேட்க, மாணாக்கர் ஆகக் கூடாதவர்கள் பதினாறு பேர் என்று நன் னூல் பாடுகின்றது :

'களி1 மடி2 மானி3 காமி4 கள்வன்5
பிணியன்6 ஏழை7 பிணக்கன்8 சினத்தன்9
துயில்வோன்10 மந்தன்11 தொன்னூற்(கு)
அஞ்சி12
தடுமாறுளத்தன்13 தறுகணன்14 பாவி15
படிறன்16 இன்னோர்க்குப் பகரார் நூலே'

களி-கட்குடியன், மடி-சோம்பேறி, மானி: செருக்குடையவன்; ஏழை-அறிவில்லாதவன், பிணக்கன்: மாறுபாடுடையவன், தறுகணன்: அஞ்சத்தக்கவைகளை அஞ்சாதவன்; பற்றன்: பொய்யன்.

சிறு தெய்வங்களில் ஆண் தெய்வங்களைச் சிறப்பாகப் பேசும் பொழுதும் துடிப்புமிக்க இளைஞனைப் பெருமையாகப் பேசும்பொழுதும் ''பதினாறடி வேங்கை' என்று பாராட்டுவது உலக வழக்கு.

தன் பாடல்களால் சுதந்திரக் கனல் மூட்டிய சுப்பிரமணிய பாரதியார், மங்கிய தோர் நிலவினிலே கனவில் கண்டதும் பதினாறு வயது இளமங்கையாகும்.

மார்க்கண்டேயரின் நிலையான ஆயுளுடன் தன்னைத் தொடர்புபடுத்திக் கொண்டதுடன் அல்லாமல், மேற்காட்டிய வகைகளிலும் தனக்கு என்று தனியிடம் கொண்டு, மற்ற எண்களுக்கு இல்லாத சிறப்பும் பெருமையும் பதினாறு பெறுகின்றதல்லவா!

# திருக்கோயில் வழிபாடும் உட்பொருளும்

தமிழகக் கோபிற்கலைச் செல்வர் தி. இராசமாணிக்கம்

ஆன்மாக்கள் அவற்றின் பக்குவ நிலைக்கு ஏற்ப பூதான்மா முதல் அறுவகைப்படும் என்றும், அவை கோபுரம் முதலாக கோயிலின் பல உறுப்புகளை உணர்த்துகின்றன என்றும் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட ஆறு ஆன்மாக்களின் இயல்புகளையும், தொடக்க நிலையான 'பூதான்மா' நிலையில் உள்ள ஒருவன் உன்னதநிலையான 'பரமான்மா' நிலையை அடைய கோயில் வழிபாடு எவ்வாறு உறுதுணையாக உள்ளது என்பதையும் இனி பார்ப்போம்;

ஆறுவகை ஆன்மாக்களின் இயல்புகளாவன :

. தன் தூல உடம்பையே தானாகக்' கருதுவது 'பூதான்மா' அல்லது 'தேகான்மா எனப்படும்.

2. தன் விருப்பு வெறுப்புக்ளைத் தானாகக் கொள்வது 'அந்தரான்மா' என அழைக்கப் பெறும்.


3. தத்துவான்மா' எனப்படுவது புவி முதலாய ஆன்ம தத்துவங்களை அறியும் கருவியாகிய மனதைத் தானாக உணருதல்.

4. தன்னால் எல்லாவற்றையும் அடக்கி ஆள இயலும் என்பதை ஒருவன் உணரும்போது 'நான் பிரமம்' என்ற ஆணவம் ஏற்படும். அப்போது அது 'சீவான்மா' என்று கூறப்படும்.

5. மந்திரான்மா' என்பது யான், எனது என்ற பசு நிலையை நீக்கவும் பேரின்ப வீட்டை பெறவும் விருப்பங் கொண்டு மந்திரோபசானையில் ஒன்றியிருத்தல்.

6. இறைவனுடன் இரண்டறக் கலந்து ஒன்றியிருக்கும் நிலை 'பரமான்மா' என வழங்கப் பெறும்.

இனி கோயில் வழிபாடு அன்பரை எவ்வாறு உன்னத நிலையை அடைய உதவுகிறது என்பதைப் பார்ப்போம் :—



'பூதான்மா' நிலையில் உள்ளவர்கள் ஐம்புலன் நுகர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டவர்கள். அவற்றை அடைய கொலை, களவு, கள்ளுண்டல் போன்ற எதனையும் செய்யத் தயங்க மாட்டார்கள். முரட்டு உணர்ச்சிகளே அவர்களை இயக்கவல்லன.

கோயிலின் கோபுரம் தான் வெளியில் எங்கிருந்து பார்த்தாலும் கண்ணுக்குத் தெரிகிறது. அதேபோன்று மனிதனுக்கு எளிதில் தோன்றுவது அவனது தூல உடம்பு. அதனால்தான் என்னவோ கோபுரம் 'தூலலிங்கம்' என அழைக்கப்பட்டது போலும்.

அடியார் கோபுரத்தை கண்டவுடன் 'நான் இந்த உடம்பு அல்ல. இதன் உள்ளிருக்கும் ஆன்மா' என்பதை நினைவுப்படுத்திக் கொள்ள வேண்டும். உடம்பை நான் எனக் கொள்வது மயக்கம். எவ்வாறு திருச்சுற்று மூலவரை வெளியிலிருந்து பார்க்கும் அடியார் கண்களுக்குத் தெரியாது மறைக்கிறதோ, அதே போன்று நான் என்ற மயக்கம் ஆன்மாவை மறைத்து விடுகிறது. இந்த மறைப்பு இறைவனது ஐந்தொழில்களில் ஒன்றான திரோபவம் அல்லது மறைத்தல் எனப்படும். இந்த மயக்கம் நீங்கினால் ஒழிய, மனிதனுக்கு ஆன்மீக வாழ்வோ அல்லது பேரின்ப நிலையோ ஏற்படாது. உடல் வளத்தையும் உலக சுகத்தையும் கருதாது ஆன்மீக நலம் கருதித்தான் கோயிலுக்கு இறைவனைத் தொழச் செல்ல வேண்டும். மனிதனுக்குத்தான் உடம்பு என்ற மாயையை நீக்கி, தான் ஆன்மா என்பதை ஞாபகம் மூட்டுவதுதான் கோபுரத்தின்வேலை. இவ்வாறுதான் ஆன்மா என்ற உணர்வு பெற்ற அடியார் 'அந்தரான்மா நிலையை அடைகிறான். 'அந்தரான்மா நிலையில் உள்ளவன் சிற்றின்பப் பிரியனாயினும், அதற்காக அல்லலை விலைக்கு வாங்க மாட்டான். தன்இச்சைகளைத்தான் என எண்ணி வாழ்வான்; ஊருடன் ஒத்து வாழமுயல்வான். தூலான்மாநிலையைக் கோபுரம் உணர்த்துவது போன்று, அந்தரான்மா நிலையைச் சுட்டிக் காட்டுவது பலிபீடம்.

பல பிறவிகளில் தான் அடைந்த இன்ப துன்பங்களாலும், தானகற்ற கல்வியாலும் தான் இச்சை என்ற நிலையைக் கடந்து, மனம் தான் தான் என்ற நம்பிக்கை உண்டாகிறது. மிருக இச்சைகளால் துன்பமே தவிர இன்பம் அடைய இயலாது என்பதையும்உணருகிறான். எனவே அவன் பலி பீடத்திற்கு இப்பால் விழுந்து வணங்குவதன் மூலம் தன் இச்சைகளை அங்கு பலி கொடுத்துவிட்டு, கொடிமரத்தண்டை செல்கிறான். இவ்வாறு மனிதன் பலிபீடத்திற்கு இப்பால் தன் மிருக இச்சைகளைப் பலி கொடுத்து விட்டு 'தத்துவான்மா நிலையை அடைவதைத்தான் அவன் கீழே விழுந்து வணங்குவது உணர்த்துகிறது

'தத்துவான்மா' நிலையில் உள்ள மனிதன் வாழ்க்கையில் இன்பத்தை விட துன்பமே கூடுதலாக இருப்பதை உணருகிறான். இன்பக் கோட்டை எனக் கனவு கண்ட இல்வாழ்க்கை கால் விலங்காகத் தோன்றுகிறது. தன் குடும்பத்திலும் தன் உற்றார் உறவினர் நண்பர்கள் குடும்பத்திலும் உண்டாகும் பிணி, மூப்பு, சாக்காடு போன்ற துனபங்களால் பிரசவ வைராக்கியம், மயான வைராக்கியம் போன்ற வைராக்கியங்கள் அவ்வப்போது ஏற்படுகின்றன. அதனால் மனம் உடைகிறான்; சிற்றின்பத்தின் இயல்பை உணருகிறான். இவற்றால் தத்துவ விசாரனை செய்யத் தொடங்கி, தியானம் போன்ற யோக நெறிகளைப் பின் பற்றுகிறான். இதனால் அவன் நாளடைவில் 'நான் இன்ப துன்பங்களுக்கு உறைவிடமான உடம்பல்ல; இச்சையல்ல; மனமும் அல்ல; நான் இவற்றை ஆளவும் அடக்கவும் இயலும்; ஆகையால் நான் 'பிரமம்' என்ற சிவான்மா நிலைமை அடைகிறான். அதன் அறிகுறியாக இருப்பது மூலவர். கோபுரத்தைப் போன்றே மூலவரின் முதல் வேலை. 'மனிதன் உடம்பல்ல; ஆன்மா' என்பதை இடைவிடாது ஞாபக மூட்டிக் கொண்டு இருப்பதுதான்.


கோயில் வழிபாட்டில் மூலவரைத் தொழுவதுதான் முக்கியமானதாகும். மனித மனம் ஓரிடம் நில்லாது பொல்லாது கறங்கென சுழன்று ஓடிக் கொண்டே இருப்பதால் ஒரே உருவத்திடம் அதை ஒன்றச் செய்வது சாதாரண மக்களுக்கு இயலாது. எனவேதான் திருச்சுற்றில் இறைவனது பல வடிவங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இறை வடிவங்களை அடுத்து அடுத்து காணும்போது மனம் இறை வடிவங்களையே பற்றும். இங்ஙனம் இறைவன் தொடர்வானவற்றில் கருத்தை வைத்துக் கொண்டு வருவதால், மூலவரை வணங்கும் போது இறையன்பு பெருக்கெடுத்து ஓடும்,

அடியாரது பசு ஞானம் நீங்கி, பதிஞானம் பெறத் தேவையான மந்திரோப சனையை ஆச்சாரியர் செய்வார். அவற்றைப் பயிலும் அடியார் 'மந்திரான்மா' நிலையை அடைகிறான். இதைக்கோயிலில் அறிகுறியாகக் காட்டும் ஆன்மலிங்கம் ஆச்சாரியராகும்.

இவ்வாறு மந்திர, யோகப் பயிற்சிகளால் பக்குவம் அடையும்போது, எங்கும் நீக்கமற பாலில் நெய்போல் மறைந்து நிற்கும் இறைவனை அண்மையிலும், சேய்மையிலும் கண்டு இன்புறுகிறான். அவன் 'பரமான்மா' நிலையை அடைகிறான். இவ்வாறு இறைவனிடம் கலந்துநிற்கும் பேரின்பநிலை பரவெளி அல்லது அகண்டலிங்கம் எனப் பெறும்.

மனிதனின் அன்ன உடம்பு உயிர்த்திருக்க மூன்று தேவைகளை நிறைவேற்ற வேண்டும். அவை :—(1) ஊட்டத்திற்கு உணவு: (2) சுவாசிக்க காற்று: (3) நரம்பொழுக்கத்திற்கு குண்டலினி சக்தி, ஜீவசக்தி, .பிராணசக்தி என்ற மூன்று பிராணாதார சக்திகளாம்.

உணவை உட்கொள்ள வாய், காற்றைச் சுவாசிக்க மூக்கு இருப்பது போன்று மூவகைப் பிராணாதார சக்திகளை.உட்கொள்ள பிராண உடம்பில் பல கருவிகள் உள்ளன. அவை சிறு தட்டுகளைப் போன்று வட்டவடிவினதாகும். எப்போதும் அவை சுழன்று கொண்டே இருப்பதால், அவை 'சக்கரங்கள்' என்றும் உடம்பிற்கு ஆதாரமான சக்திகளை உட்கொள்ளுவதால் ஆதாரங்கள்' என்றும், தாமரைப் பூ போன்ற தோற்றத்தை உடையனவாக இருப்பதால், 'கமலங்கள்' என்றும் அழைக்கப் பெறுகின்றன. அவற்றின் பெயர், உடம்பில் இருக்கும் உறுப்பு, கோயிலில் குறிக்கப்படும் அங்கம் எவ்வளவு இதழ்கள் கொண்ட தாமரை என்பன வருமாறு:



| பெயர் | உடல் உறுப்பு | கோயிலில் உள்ள அங்கம் | கமல இதழ்கள் |
|---|---|---|---|
| 1 மூலாதாரம் | முதுகுத் தண்டின் அடி அதாவது குதம் | கொடிமரப் பீடம் (கொடிமரம் அல்ல) | 4 |
| 2 சுவாதிஷ்டனம் வாமமார்க்கம் (தெனபகுதியில்) | குறியின் அடி அதாவது குய்யம் | .மகாபலி பீடம் | 6 |
| தேவமார்க்கம் (வட இந்தியாவில்) | மண்ணீரல் | அம்பிகை | 6 |
| 3 மணிபூரகம் | கொப்பூழ் (நாபி) | அதிகார நந்தி | 10 |
| 4 அனாகதம் | இதயம் (நெஞ்சு) | ஆடவல் லான் | 12 |
| 5 விசுத்தி | கழுத்து (அடி நா) | இடப ஊர்தி | 16 |
| 6 ஆக்ஞை | புருவநடு (நெற்றி) | மூலவராகிய இலிங்கம் | 96 |


இந்த ஆறு ஆதாரங்களும் விரியும்போது தான் தலை உச்சியிலுள்ள 'பிரமரந்திரம்' என்ற சகஸ்ராரமும் கூடவே விரியும். அதை ஒரு சக்கரமாகக் கூறப்படாவிடினும் அதுதான் அனைத்திற்கும் மேலான சக்கரமாகும். அது 972 அல்லது 1000 இதழ்கள் உடையதாம். மூன்றடுக்கு கிரீடம் போன்ற தோற்றத்தை உடையது.

மூலாதாரம் என்பது கொடி மரத்தின் பீடம் (கொடி மரம் அன்று). மூலாதாரத்தில் ஏழு சுருள்கள் கொண்ட பாம்பு போன்று குண்டலின் சக்தி உறங்கிக்கிடக்கும். அதுபெரும் பாலும் கீழ் நோக்கிச் சென்று குறியடியிலிருக் கும் வீரியத்திற்கு அடிப்படையான சுவாதிஷ் டானம் என்ற இரண்டாவது சக்கரத்தைத் தூண்டும். இதனால் சிற்றின்ப உணர்ச்சிகளும் இச்சைகளும் அதிகமாக ஏற்படும். இதைத் தடுக்கும் பொருட்டு இடுப்பில் அரைநாண் கட்ட வேண்டும்; இடுப்பு வேட்டியைச் சுற்றி மேல் வேட்டி இருக்க வேண்டும் என்ற விதிகள் ஏற்படுத்தப்பட்டன.

பலிபீடத்தின் முன்னால் கீழே விழுந்து வணங்குவது காம இச்சைகளைப் பலிகொடுத்து விந்துவைக் கட்டுவதை உணர்த்துகிறது. பலி பீடத்தை யொட்டியுள்ள கொடிமரம் அன்ன உடம்பிற்கு முக்கிய உறுப்பான முதுகுத் தண் டாம். கட்டிய விந்துவை முதுகுத் தண்டு நரம்புகள் வழியாக மூளைக்கு ஏற்ற வேண்டும் என்பதை இது குறிக்கிறது. இவ்வாறு குண்ட லின் சக்தி தலை உச்சிக்கு ஏறியதும், அது பிரமரந்திரத்தின் வழியாகத் தங்குதடையின்றி பொங்கி வழிந்து கொண்டிருக்கும். அப்போது அவன் எல்லா சக்திகளையும் கையாளும் வல்ல மையைப் பெறுகிறான்.

கோயில் வழிபாட்டின் உட்பொருளை உணர்ந்து அதை முறையாகக் கடைப்பிடித்து ஒழுகினால், ஆன்மீகப் பெருவாழ்வு பெறலாம் என்பது உறுதி.

---



# கயிலாயச் சிறப்பு!

**ப. சிவநேசன்,** எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.,

சிவபெருமான் உமாதேவியோடு எழுந்தருளியிருக்கும் மலை திருக்கயிலைமலை. அம்மலை, இமயமலையின் வடபால் மேற்குத் தீபத்தில் உள்ளது. அதன் உயரம் கடல் மட்டத்திலிருந்து 22,023 அடியாகும். அது கயிலாயம், கயிலயங்கிரி, வெள்ளியங்கிரி, நொடித்தான்மலை எனவும் அழைக்கப் பெறுவது. பிங்கல நிகண்டு, இறைவன் வீற்றிருந்தருளும் இடமாகக் கயிலையைக் குறித்துள்ளது.

'இருப்பது கயிலை தரிப்பது கங்கை
முடிப்பது கொன்றை உடுப்பது சருமம்' (100)

என்பது செய்யுள். உலகிலுள்ள எல்லாத்தலங்களையும் கயிலாயம் என்று அழைத்தல் மரபு. ஆயினும் இமயமலையிலுள்ள கயிலாயமே மகாகயிலாயம் என அழைக்கப் பெறும் பேறுடையது. எனவேதான், 'சிவனைக் காட்டிலும் பெரிய தெய்வமும், கயிலையைக் காட்டிலும் உயர்ந்த மலையும் இல்லை' எனும் பழமொழியும் எழுந்தது.

'ஈசனுக்கு நிகர்தேவும் தொகுத்துச் சொன்ன
இருங்கயிலைக்கு இணைவரையும் இலையீது
உண்மை'' (283)

எனப் புகழ்ந்துரைக்கின்றது கடம்பவன புராணம்,

**தொன்முது கடவுளும், கயிலையும்:**

சிவபெருமான் முன்னைப் பழம்பொருட்கும் பழம் பொருளாவார். தொன்முது கடவுள் (மதுரைக் காஞ்சி-41) நான்மறை முதுநூல் மக்கட் செல்வன் (அகம் 181),. மறை முதல்வன் (சிலம்பு - 2.1) எனவரும் தொடர்களால் இதனை உணரலாம். எனவே, அவர் எழுந்தருளியிருக்கும் திருக்கயிலைதாம் தொன்மையானதாகும். இம்மலைபற்றிய குறிப்பு கலித்தொகையிலும், சிலப்பதிகாரத்திலும் இடம் பெற்று உள்ளது.

'இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந்து உயர்மலை இருந்தனன்'
(குறிஞ்சிக் கலி-2)

என்பது கலித்தொகை. இதில் 'உயர்மலை' என்பது திருக்கயிலையாகும். கயிலை எனும் பெயர் முதன் முதலில் சிலம்பில்தான் வருகிறது. அது முருகனை அறிமுகப்படுத்தும் பாங்கில் அமைந்துள்ளது.

'கயிலைநன் மலையிறை மகன்' (24.16)

என்பது அப்பாடற் பகுதி. பழந்தமிழ் இலக்கியங்களில் கயிலை குறிக்கப்பட்டுள்ளதால் அம்மலையின் தொன்மை இனிது புலனாகும்



## கயிலை சார்பதி :

சிலம்பில் குயிலாலுவம் என்ற தலமும் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

'இமையச் சிமையத்து இருங்குயி லாலுவத்து
உமையொரு பாகத்து ஒருவனை வணங்கி''-
(28:102-3)

என்பது அப்பகுதி. குயிலாலுவம் மகாகயிலாய மன்று. இமயமலையின் பக்கத்திலுள்ள ஒரு சிவப்பதி.

## ஊர்க்கோட்டம் :

இளங்கோவடிகள் பூம்புகாரிலுள்ள கோயில்களைக் குறிப்பிடுகையில், ஊர்க் கோட்டம் (9:12) என்ற ஒன்றையும் சுட்டியுள்ளார். ஊர்க்கோட்டம் என்பதற்கு அரும்பத உரைகாரரும், அடியார்க்கு நல்லாரும் இறைவனூராகிய கைலாயம் நிற்கும்கோயில் (ப. 246) என உரை கண்டனர். பெருமழைப் புலவர், 'சம்பாபதியின் கோயில்' என்பர். இக் கோயில் இமயமலை பக்கத்தன்று பூம்புகாரில் உள்ளது. பொதுவாக, திருக்கோயில்களைக் கயிலாயம் என்று அழைக்கும் வழக்குகொண்டு உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளனர் எனலாம்.

## கயிலையைத் தொழுதோர்:

தேவாரம் பாடிய மூவரும் இத்தலத்தையும், பெருமானையும் போற்றியுள்ளனர். திருக் கயிலைக்கு இவர்கள் பாடியுள்ளனவாக ஏழு பதிகங்கள் உள்ளன. சம்பந்தர் இரண்டும், அப்பர் நான்கும், சுந்தரர் ஒன்றுமாகப் பதிகம் பாடிச் சிறப்பித்துள்ளனர். மணிவாசகர் இறைவனிடம் 'கயிலைப் புகுநெறி' (அருட்பத்து-10) காட்டியருளுமாறு வேண்டியுள்ளார்.

திருக்கயிலைக்குக் காரைக்காலம்மையார் சுந்தரர், சேரமான் பெருமான், பெருமிழலைக் குறும்பர் முதலியோர் யாத்திரை செய்தருளி உள்ளார்கள். அப்பர் கயிலைக் காட்சியைத் திருவையாற்றில் கண்டு மகிழ்ந்துள்ளார்.

திருக்கயிலையை, நக்கீரர் கயிலை பாதி. காளத்திபாதி அந்தாதி மூலமும், சேக்கிழார் பெரியபுராணம்-திருமலைச் சிறப்பு வழியும் சிறப்பித்துள்ளார்கள். வீமநாத பண்டிதர் தம் கடம்பவன புராணத்து மகாகயிலை மான்மியம் உரைத்த அத்தியாயத்தில் விரிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். கச்சியப்பர் கந்த புராணம்-திருக்கைலாசப் படலத்திலும், சிவப் பிரகாசர் பிரபுலிங்கலீலை-கயிலாச கதியிலும் விளக்கி உள்ளார். பரஞ்சோதிமுனிவர் திருக் கயிலாயச் சிறப்பு என்ற ஒரு பகுதியை அமைத்துப் பரவியுள்ளார். வில்லிப்புத்தூராழ்வார் 'கயிலையின் பெருமை தன்னைக் கட்டுரை செய்வ தெங்ஙன்' என்று வியந்துள்ளார்.

## நிறைவுரை :

சிவபெருமான் தொன்மைக்கடவுள். அவர் உறையும் மலையும் தொன்மை வாய்ந்தது. அதன் சிறப்பை அருளாளர்கள் அருள்நலத்தோடு போற்றிப் பாடியுள்ளார்கள். அவர்கள் தம் அருட்பாடல்களை ஓதி, கயிலையைத் தரிசிக்க முயலுவோமாக!

— — — —

# கபீர்தாசர்

## ஆ. சுப்பிரமணியன்



**ஆன்மநேயம் :**

வடநாட்டில் தோன்றிய அருளாளர்களில் கபீர்தாசர் சிறப்புமிக்கவர். அவருடைய பாடல்கள் படிப்பவர் உடலிலுள்ள நாடி நரம்புகளிலெல்லாம் ஆன்மநேயத்தை ஊடுருவச் செய்வன; சாதி சமயப் பேய்கள் தலைவிரித்தாடிய நாளிலிருந்தே சம்மட்டியால் அடித்துக் கொண்டிருப்பன. அவர் பாடல்கள் மனச்சாட்சியின் எதிரொலி. குரு நானக்; இரவீந்திரநாத் தாகூர் போன்றவர்கள் இவர் பாடல்களைப் பாடிப் பரவசப்பட்டவர்கள். படிப்பவர் உள்ளங்களில் ஆன்மநேயத்தை ஊற்றுவிக்கும் அமரகங்கை.

**தோற்றம் :**

கபீர் 14-ஆவது நூற்றாண்டில் தோன்றியவர். பெற்றோர் யாரெனத் தெரியாது. தமால் என்னும் சேணியன் ஒருவன் காசியில் உள்ள கங்கையில் நூல்கண்டுகளை அலசிக் கொண்டிருந்தான். அப்பொழுது கிளிஞ்சலை ஒத்த பொருள் ஒன்று மிதந்து வந்தது. தமால் நீந்திச் சென்று அதை எடுத்து வந்து பார்த்தான். அழகான ஆண் குழந்தை, தெய்வக்களை வீசியது. அதைக் கொண்டு வந்து. தன் மனைவி நீருவின் கையில்கொடுத்தான். பிள்ளையில்லாக் குறைதீர்க்க வந்த பிறைமதியே என்று மார்புற அணைத்து உச்சி மோந்தாள் நீரு. அவள் மார்பிலே பால் சுரந்தது.

'அருவாம் இறையருளும்
அன்னைமுலைப்பால்போல்
உருவாகும் அன்பருளம்.'

என்பது போல் இறைவனே குழந்தையாக வந்துளான் என்று எண்ணி கபீர் என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

கபீர் பெரியவன் ஆனவுடன் அவனை நெசவுத்தொழிலில் ஈடுபடுத்தினர். நெய்து கொண்டிருக்கும்போதே அவனுடைய உதடுகள் இராம், ராம், சீதாராம் என்று ஒலித்துக்கொண்டிருந்தன. ஒரு நாள் இராம மந்திரத்தால் தன் செயலை மறந்திருந்தான். இதையறிந்த தாய் அவன் முதுகில் அறைந்து 'விரைவாக நெய்யடா' என்று கத்தினாள். கபீர் தன்னிலையடைந்து நெய்யத் தொடங்கினான். தினமும் நாலுமுழ வேட்டி நெய்ய வேண்டும் என்பது தாயின் கட்டளை. கபீர் இராம மந்திரத்தால் செயலை மறந்திருந்தாலும் மாலையில்நான்கு முழ வேட்டி தயாராகிவிடும். இது பெற்றோருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

**சோதனை :**

இரண்டு வேட்டிகளைக் கொடுத்துக் கடைத்தெருவில் விற்று வரச் சொன்னாள் தாய். கபீர் கடைவீதிக்குச் சென்றான். ஓரிடத்தில் அமர்ந்தான். இராம மந்திரத்தால் தன்னை மறந்தான். வேட்டிகள் விற்கவில்லை. பொழுது போயிற்று. அப்பொழுது வயதான ஒருவர் வந்து தனது கந்தலாடையைக் காட்டி நின்றார். கபீர் அவருக்கு ஒரு வேட்டியை வழங்கினார். செய்தி தாய்க்குச் சென்றது. தாய் கோபாவேசத்துடன் வந்தாள்.

" என்னுள்ளமெல்லாம் ராம் ராம்
என்னுயிரெல்லாம் ராம் ராம் "

என்று பாடிக் கொண்டிருந்தார். தாய் கழியால் அடித்தாள். முதலில் வலித்தது. பின்னர் பூச்செண்டால் அடிப்பது போன்றிருந்தது. அந்த அடி தாயின் உடம்பில் பட்டு வலித்தது. தாயின் கண்களுக்கு கபீர் இராமபிரானாகக் காட்சி அளித்தார். தாய் பயந்து பணிந்தாள். கபீரும் பணிந்து வணங்கினார். இருவரும் வீடு திரும்பினர். வீட்டில் செல்வம் நிறைந்திருந்தது.

**திருமணம் :**

கபீருக்குத் திருமணம் நடந்தது. ஆண் மகவு பிறந்தது. கமல் என்று பெயரிட்டனர்: கமல் தந்தையைப் போலவே தெய்வபக்தியுடன் விளங்கினான். கபீரின் பக்திப் பாடல்களைப் பாடினான். மக்கள் கவனத்தை ஈர்த்தான். ஒருநாள் அயலூர் சென்று ஒரு செல்வந்தர் வீட்டில் தங்கியிருக்கும்போது கபீரின் பாடல்களைப் பாடினான். பாடல்களில் மனதைப் பறிகொடுத்த செல்வந்தர் கமலுக்கு ஒளிமிக்க மணியைப் பரிசாக அளித்தார். கமல் வாங்க மறுத்துவிட்டான். இரவில் கமலுக்குத் தெரியாமல் அம்மணியைக் கமலின் ஆடையில் முடிந்துவிட்டார். மறுநாள் வீடு வந்த கமல் ஆடையிலுள்ள மணியைப் பார்த்துவிட்டுத் தந்தையிடம் நடந்ததைச்சொன்னான். தந்தை



மகனிடம் இந்த மணியைத் திரும்பக்கொடுத்து விட்டு வா என்று ஆணையிட்டார். கமல் மணியைக் கொடுத்துவிட்டு வந்தான்.

"பொன்மணிப் போகம் போயொழியும்
புவிதரும் இன்பம் தேயுமடா
இன்னமுதாகும் இராமநாமமே
இனமணித் திரளினும் இனியதடா"

என்று கபீர் பாடினார்.

**குரு உபதேசம்:**

இராமானந்தர் என்ற அருளாளர் இருந்தார். அவர் வேத விற்பன்னர். அவரிடம் கபீர் சென்று 'திருவடித் தீக்கையும், மந்திர உபதேசமும் தனக்குச்செய்துவைக்கவேண்டும்' என வேண்டி நின்றார் இராமானந்தர். 'போ! துருக்கா' என்று மறுத்துவிட்டார். மறுத்தாலும் கபீரின் உள்ளன்பைப் புரிந்து கொண்டார். மற்றொருநாள் இராமானந்தர் போலிக் கோபம் கொண்டு பாதக்குறடுகளைக் கபீர் மேல் வீசி எறிந்தார். கபீர் குருவைப் பார்த்து 'குறடுகளை எறிந்ததால் திருவடித் தீக்கையும், ராம்—ராம் என்ற உபதேசமும் எனக்குக் கிட்டிற்று என்று கூறி மகிழ்ந்தார். அன்று முதல் குருவின் உபதேசமும் தொடர்ந்தது.

'ஆசான் கொடுத்த அழியாவிளக்கொளியே
காசினிக்காகும் உளக்கண்"

என்று கபீர் பாடினார்.

**புல்லர்கள் சூழ்ச்சி :**

கபீருக்குக் குறைந்த வருமானம். யாரிடமும் கடன் வாங்கமாட்டார். 'இராம ஜெயந்தி விழா' நெருங்கிக்கொண்டிருந்தது. பொறாமைக்காரர்கள், சூழ்ச்சிக்காரர்கள் இறையடியார்களுக்குத் தொல்லை கொடுப்பது என்பது தொன்று தொட்ட வழக்கம். அந்த முறையில் சில சூழ்ச்சிக்காரர்கள் கபீர் மீது பொறாமைக் கொண்டு அவதூறு செய்ய விழைந்தனர். கபீர் எழுதுவது போன்று போலி வாசகத்தை எழுதி அச்சிட்டு அந்தப் பிரசுரங்களைக் காசி, மதுரா அரித்துவார், துவாரகை முதலிய இடங்களில் விநியோகம் செய்துவிட்டார்கள். வாசகம் பின்வருமாறு:"ஆன்மீகப்பெருமக்களே! எதிர்வரும் ஸ்ரீஇராமஜெயந்தி விழாவை நானே நடத்தி வைக்க முடிவு செய்துள்ளேன். அதனால் இராம பக்தர்கள் திரளாக வந்து விழாவில் பங்குக் கொண்டு இராமபிரானின் திருஅருளைப் பெற்றுச் செல்லவும். அன்பர்களுக்கு உணவு, உறையுள் இலவசமாக வசதி செய்து கொடுக்கப்படும்." —அடியேன், கபீர். காசி.

**புல்லர்கள் பணிந்தனர் :**

இதைக் கேள்விப்பட்ட அடியவர்கள் ஆயிரக்கணக்காகக் குழுமி விட்டனர். கபீர் இராமபிரானிடம் முறையிட்டார். அடியார் துன்பங்கண்டு ஆண்டவன் சகிப்பானா? பல செல்வந்தர்கள் உள்ளத்தில் கபீரின் ஆன்மீக ஒளி பாய்ந்தது. அவர்கள் முன் வந்து ஸ்ரீராம ஜெயந்திவிழாவைக்குறைவின்றி நடத்தி முடித்தார்கள். புல்லர்கள் வியந்தனர். புத்துணர்ச்சி பெற்றனர். கபீரின் தாசர்களானார்கள். கபீர் தாசர் இறைவனைப் பாடினார்.

'எல்லாம் உன் செயல் எல்லாம் உன்னருள்
ஏதும் அறியேன் எளியேனே!
எல்லாம் உன் விளையாடல் என்னுள்
இசைப்பதும் உயிர்ப்பதும் இறைவா நீ!
அல்லல்பெருகிய ஆணவக்காட்டில்
அடியார்துணை நீ அரி, அரி ஓம்
எல்லையில்லாத கருணை வள்ளல்
இச்சைப்படியே எனைநடத்தாய்".

என்பது பாடல். அப்பருக்கும் சம்பந்தருக்கும் படிக்காசளித்த பரமனே கபீரின் அன்பிற்குக் கட்டுப்பட்டு கபீர் தாசரின் மூலமாக ஆன்ம நேயத்தை, அருள் ஒளியை மக்கள் உள்ளத்திலே பாய்ச்சினான்.

வாழ்க இராம நாமம்! வாழ்க கபீர் தாசர்!!

— — — —

# தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள்

தமிழில் மொழியாக்கம் : கவிஞர் முருகுவண்ணன்

*[அறநிலையத்துறை 1980இல் தயாரித்து வெளியிட்ட திருக்கோயில்கள் பற்றிய ஆங்கில செய்திப் படத்தின் தமிழாக்கம் செய்யப்பட்ட வருணனை இது. திருக்கோயில் வாசகர்களுக்காக இது மகிழ்வுடன் வெளியிடப்படுகிறது.]*

## I. கட்டிடக் கலையும், சிற்பக் கலையும்

**சுருள் : 1**

இந்தியத் திருநாட்டில், நெடுங்காலத்துக்கு முற்பட்ட கடந்தகாலக் காட்சியினை, இன்றைய நிகழ் காலத்திலும் ஒளி-ஒலிக் காட்சியாகத் தோன்றுதலைக் காணலாம்.

தமிழ்நாட்டின் கண், சென்னைக்கு அருகில் உள்ள திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீசுவரர் கோயிலில் ஒவ்வொரு நாள் காலையும் மக்கள் திரளாகக் கூடுவதும், ஆண்டாண்டுக் காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வரும்நிகழ்ச்சியினைக் கண்டு களிப்பதும் வாடிக்கை. இரண்டு கழுகுகள், எங்கிருந்தோ வந்து, பூசாரியிடம் அமுது பெற்றுக் கொள்கின்றன. இந்த அரிய நிகழ்ச்சி, எத்தனை நூற்றாண்டுக் காலமாக நிகழ்ந்து வருகிறது என்பதனை யாரும் அறியார். மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டுக்கு வந்து சென்ற 'டச்சு நாட்டுப் பயணிகள் ''இந்தச் சடங்கியல்பான நிகழ்ச்சி, பன்னெடுங் காலத்துக்கு முன்னமே நிகழ்ந்து வந்த ஒன்றாகும்'' என்று விவரமாகக் குறித்திருக்கிறார்கள்.

இங்கே வந்து, இறைவனை வழிபட வேண்டும் என்பதற்காக பழங்காலத்தில், புனிதர் அல்லது வானகப் புங்கவர் இருவர், கழுகுகளாகப் பிறப்பெடுத்து வந்து போகின்றனர் என்பது கர்ண பரம்பரை அல்லது வழிவழிச் செய்தி யாகும். ஆகவே இந்தக் கழுகுகள் இரண்டும் இன்றும் நிலவி வரும் செவி வழிச் செய்தியின்படி, நம் முன்னோர் காலத்துக்கும் முற்பட்ட கடந்த காலத்திலிருந்து, நாம் வாழும் இன்றைய நிகழ்காலத்திலும் இரண்டறக் கலந்து, எதிர் காலத்துக்குச் சிறகு விரித்துப் பறந்து செல்லத்தக்க வாழும் சின்னங்களாகும்.

''தன்னேரில்லாத தனிப்பெரும் ஆற்றல் ஒன்று உள்ளது. அது 'பிரம்மம்' என்றும் அவ் ஆற்றலே அண்ட சராசரங்களுக்கும் அவற்றில் உள்ள உயிர் இனங்களுக்கும் அவை இயங்குவதற்கும் மூல முழுமுதற் காரணம்'' என்றும் இந்து மதத் தத்துவம் சாற்றுகிறது.

மாந்தர் வரலாற்றிலேயே மிகப் பழமையான மத ஆவணமும் நான்கு வேதங்களில் ஒன்றாவதும், முதலாவதும் ஆகிய 'ரிக்வேதம்' 'பஞ்சபூதம்' எனப்படும், வான், தீ, நீலம், நீர், காற்று ஆகிய இயற்கையின் ஐம்பெருங் கூறுகளையும், பற்பல தெய்வங்களையும், இயற்கையின் தெய்வீகக் கூறுகளாகக் கொண்டு அவற்றைக் கொண்டாடுமாறு வகுத்து அளித்துள்ளது.

இத்தகைய தெய்வீகப் பேராற்றலுடன் ஒன்று கலந்து இயைந்து விடுவதோன்றே, பிறவிப் பயனாகக் கொள்ளப் பெறுகிறது. இவ்வாறு இறைமையுடன் இரண்டறக் கலத்தல் என்பது, ' 'யோகியர்' என்பவரால் மட்டுமே இயலக் கூடிய ஒன்றாகும். இப்படிப் பட்ட கருத்து, பொதுவாக எல்லாருக்கும் புலனாகாத கருத்தே எனலாம். எனவே தான், கடந்த பல நூற்றாண்டுக் காலமாக, பல்வேறு வகையான தெய்வங்களை, இடைவிடாது எண்ணி வடிவமைத்துக் கொடுத்திடப் பெற்றுள்ளது. அதாவது இறைவனாக சிவன் முதல் விஷ்ணு ஈறாக அவரவர் விருப்பத்திற்கேற்ப, எண்ணி கண்டு வழிபட்டுப் பேரின்பம் கைவரப்பெறட்டும் என்பதற்காகவே அவ்வாறு ஆயிரம் தெய்வங்கள் உண்டு என்று சொல்லி வைக்கப் பெற்றது.

'வழிபாடு' எனப்படுவது, திருப்படையல் 'ஓமம்' அதாவது தீ வளர்தல் அல்லது பூசனை மற்றும் அபிஷேகம் செய்தல்; அணி மணி அணிவித்தல், பூ அலங்காரம் செய்தல், உணவுப் படையல் இடல் போன்ற இன்னோரன்ன இணக்க வணக்க வரிசை முறைகளேயாகும்'. சில பல மரங்களையும் அவற்றின் கீழே அமர்ந்துள்ள உருவச் சிலைகள் ஆகியவற்றையும் வழிபட்டு வருவது நெடுங்காலமாக இருந்து வரும் வழக்கமாகும். வழிபடும் மரங்கள், கடவுளுக்குரிய மரங்களாக அந்தந்த வட்டாரங்களுக்குரியனவாகவும் கருதப்பட்டு வருகிறது. இன்



னும் கூட இந்துப் பெண்மணிகள், துளசிச் செடியை வீட்டில் வைத்துப் போற்றிப் பூஜை செய்து வருகிறார்கள்.

குழைகாரை ( Stucco ) யினால் செய்யப் பெற்றுள்ள பெரிய திருவுருவச்சிலை களின் வடிவில் உள்ள தெய்வங்களைச் சிற் றூர்களில் மக்கள் வழிபட்டு வருவது பழக்க மாக இருந்து வருகிறது.

பின்னாளில், அத்தகைய குழைகாரை யினால், சிறிய வடிவில் செய்யப் பெற்ற தெய்வ உருவச் சிலைகளை, இயற்கையின் அழிவிளைவிலிருந்தும் காட்டு விலங்குகளி லிருந்தும் காப்பாற்றி வைப்பதற்காக, மரத் தினால் அல்லது செங்கற்களால் ஆன உறை விடங்கள் அமைத்திடப் பெற்றன. அதன் பின்னர், கூரையும் வேயப்பட்டன. இதுவே திருக்கோயில் கட்டிடக் கலைக்கான தொடக் கம் ஆகும்.

தென் மாவட்டமான கன்னியாகுமரியில் கூட, இன்றும் உள்ள கோயில்கள் பலவும், செங்கற்கள், மரம் ஆகியவற்றால் கட்டப் பெற்று உலோகத் தகடுகளால் ஆன கூரையும் கொண்டு விளங்குவதைக் காணலாம். ஆறாவது நூற்றாண்டுகளுக்கு முன்பு வரையில் இருந்து வந்த கோயில்கள் இந்த அளவில் மட்டுமே இருந்து வந்த தோரணி அல்லது எடுத்துக் காட்டமைப்பு இதுவேயாகும்.

சிதம்பரத்தில் விளங்கும் நடராசப் பெரு மான் திருக்கோயிலின் கர்ப்பக்கிரகம் கருவறை கூட மரத்தினால் ஆன கட்டமைப்பு மீதில் தங்கத் தகட்டினால் ஆன கூரை வேயப்பட்டி ருக்கிறது. மிகப் பழங்காலந்தொட்டே நுட்ப மான இலக்கண முறையுடனேதான் திருக் கோயில் அமைப்பும் கோயிலில் உள்ள தெய்வத் திருவுருவங்களும் தொடர்ந்து வந்துள்ளன. அதன்படி முற்காலங்களில் திருக்கோயில்கள் கட்டுவதற்கான சிற்பிகளுக்கு சமயக் கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டு வந்துள்ளது.

திருக்கோயில் உருவாவதற்கான தூய திருப்பணிப் பொறுப்பினை ஒரு சிற்பி ஏற்றுக் கொண்டவுடனே உருவாகப் போகும் திருக் கோயிலும் அதனுள் எழுந்தருள வேண்டிய மூலவர் திருவுருவத் திருமேனி பற்றித்தன் சிந்தனையை ஒரு முகப்படுத்தவும், குறிப்பிட்ட உணவு வகைகளையே உண்ணவும், திருக் கோயில் சார்ந்த தரையில் படுத்துறங்கவுமான விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். சிற்பி, தான் வடித்திட வேண்டிய தெய்வத் திருவுருவச்சிலை மாந்தர் எவரையும் முன் மாதிரியாகக் கொண்டதாக இருக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். காரணம், அதுதான் ஓர் உண்மையான சிற்பியின் சமய ஆசாரம் ஆகும்.

சுமார் கி. பி. 600 ஆம் ஆண்டில்தான் தென் இந்தியாவில், திருக்கோயில் கட்டிடக் கலை யில் ஒரு புதிய வழியே தொடங்கியதற்கு மண்டகப்பட்டு என்னும் ஊரில், திண்ணிய கருங்கல் பாறையில், குகைக்கோயில் ஒன்று, குடைந்தெடுக்கப்பட்டுள்ளது. அதில், தூண்கள் சில பொருண்மை செறிந்த மொத்தமாகவும், மற்றும் சில மிக சாதாரணமாகவும் உள்ளன. பிற சில தூண்கள், சிற்பங்களைக் கொண் டுள்ளன.

தளவனூருக்கு அருகே மற்றொரு குகைக் கோயில் ஒன்று உள்ளது. அதில் மிக நுட்பம் வாய்ந்த தூண்கள் உள்ளன.

சென்னை மாநகருக்கு அருகில் உள்ள 'மகாபலிபுரம்' என்று அழைக்கப் பெறும் மாமல்லபுரத்தில், வரிசையாகக் குகைக் கோயில்கள் உள்ளன. அவற்றில் பலப்பல, (பின்னணி அரை அகழ்வான) படைப்பு செதுக் கோவியங்கள் செதுக்கப் பெற்றுள்ளன. தீமை களை அழித்து வெற்றி பெற்றதைக் குறிப்ப தாகவுள்ள அரக்கனைக் கொன்றிடுவதாக உள்ள காட்சியுடன் இறைவி துர்க்கை விளங்கு கிறார்.

ஆதிசேஷன் என்னும் ஆயிரம் தலைகள் கொண்ட நாகப்பாம்பின் மீது மகா விஷ்ணு பள்ளி கொண்டிருக்க செல்வத் திருமகளாம் மகாலட்சுமி உடன் உறைவதாகக் காட்சி தரு கிறாள். உலகை மீட்புதவி செய்கின்ற வராக மாம் பன்றியும், வையகத்தையும் வானகத்தை யும் தமது திருவடிகளால் அளந்திட்ட திரி விக்ரமன்' ஆகிய சிலைகள் வடிக்கப் பெற்றுள் ளன. மற்றொரு பக்கம், குன்றின் ஒருபுறத்தில் பெருங்கல் ஒன்றில், மிகப் பெரிய காப்பியமே வடிக்கப் பெற்றுள்ளது எனலாம். அதாவது, எவராலும் வெற்றி கொள்ள முடியாத படைக் கலன்களைப் பெற்றிட, சிவபெருமானை நோக்கி, அருச்சுனன் தவம் புரியும் காட்சியை விளக்கும் வகையில் வடித்திடப் பெற்றுள்ளது. அது வடிக்கப் பெற்ற காலத்திலேயே தமிழகத் தின் தென் கோடியில், பாண்டிய மன்னர்களும் குகைக் கோயில்களைக் குடைந்து உருவாக்கி யுள்ளவை, காட்சிதருகின்றன. அவற்றுள் ஒன்று, திருப்பரங்குன்றத்தில், கண்ணையும் கருத்தையும் கவருகின்ற நடனமாடும் ஆடற் கலை சிவபெருமானும், அவருக்கு அருகில் பார்வதி அம்மையும் காட்சி தருகின்றார்கள்.

ஏறத்தாழ கி.பி. 700-ல் மாமல்லபுரத்தில் பல்லவ மன்னர்கள் மற்றொரு 'புதிது புனை தல்' என்னும் புதுமாறுதல் கொணர்ந்தனர். ஒரு முழுமையான கோயிலை ஒரே ஒரு பெருங் கல்லிலேயே வடித்தெடுத்தனர். உச்சியில் கவிகை மாடத்துடன் முடியும் பெரிய கூர்ங் கோபுரம் ஒன்று உருவாக்கப் பெற்றுள்ளது. தர்மராஜக் கோயிலில் நீள் சதுர வடிவில் வீமன் கோயில், நீண்ட இரண்டு அடுக்குகள் கொண்ட தாக முன்புறம் விதான மண்டபம் கொண்ட கோயில் கருவறையைச் சுற்றியுள்ள சுவரில் பற்பல சிற்பங்கள் உள்ளன. நான்காவதாக மிகச் சிறியதாகவும் குடிசை போன்றும் உள்ள கோயில் அம்பிகைக்கு ஒப்படைக்கப் பட்டுள் ளதைக் காட்டுகிறது. ஐந்தாவது, அந்தக் கோயிலின் ஒதுக்கிடமாக உள்ள இடத்தில் சகாதேவனுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் ஒற்றைக் கல்லால் ஆன ஐந்து கோயில்களும் 'இரதம்' என்னும் 'தேர்' என்றே அழைக்கப் பெறுகின்றன. அன்றைய வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட முறையில் பரவியுள்ளமை எண்ணத் தக்கது.



பின்னர் பாண்டியமன்னர்களாலும், இந்த முறை பின்பற்றப் பெற்றுள்ளது. கழுகுமலை யின் ஒரு பகுதியைத் தனியே பிரித்தெடுத்து அந்த ஒற்றைக் கல்லில் கோயிலை உருவாக்கி யுள்ளனர். ஆயினும் அது, நிறைவு பெறாத நிலையிலேயே உள்ளது. கலை நுட்பமும் வேலைப்பாடும் கொண்ட அக்கோயில், 'தென் இந்திய எல்லோரா' என்று உவமை கூறப்பெறு கின்றது.

மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயில்கள், பிறஅனைத்தையும் மீறிடும் வகையில்முத்திரை பொறிக்கிறது கருங்கற்பாளங்களைக் கொண்டு கட்டப் பெற்றுள்ள இந்தக் கடற் கரைக் கோயில், கடந்த ஆயிரத்து இருநூறு ஆண்டுக் காலமாக, அடுத்தடுத்து வந்தபோதும் கடல் அலைகளின் தாக்குதல்களையும் தாங்கிக் கொண்டு இன்னும் ஓங்கி விளங்கிக் கொண் டிருக்கிறது. கருவறைக்கு மேலேயுள்ள விமானம் எனப் பெறும் கோபுரம் அனைத்தை யும் மிஞ்சி மேம்பட்டு நின்று நிலவுகிறது. இதனைக் காணவரும் பக்தர் கூட்டம் கோபு ரத்தையே சுற்றி வரும் வகையில் ஒரு முன் னேற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோயில் வழி பாட்டில் இதுவொரு தனிச் சிறப்பு வாய்ந்த தாகும்.

காஞ்சி மாநகரில் உள்ள கைலாசநாதர் கோயில் நுழைவுவாயில் மீதில், தனித்தொரு கோபுரம் கட்டப் பெற்றுள்ளது. அதுதான் பின்னை நாட்களில் கட்டப்பெற்ற, திருக் கோயில்களுக்கு முன் மாதிரியாக அமைந்து விட்டது.



கருவறையைச் சுற்றியுள்ள 'பிரகாரம்' எனப்படும் சுற்றுகளில் பற்பல துணை தெய்வங்கள் கொண்டசிறுசிறு கோயில்கள் உள்ளன. இந்தக்கோயில், தென்இந்தியாவில் உள்ள மற்ற கோயில்கள்போல் வைரம் பாய்ந்த கருங்கற்களால் கட்டப் பெறாமல் மணற்பாறைகளால் கட்டப் பெற்றது. அதற்குக் காரணம், கருங்கல் பயன்படுத்தப்பட்ட பிறகு செங்கற்களால் கட்டப் பெறுவதற்கு முன்பும், இத்தகு மணற்பாறைகளே பயன்படுத்தப் பெற்றன.

சுவர்கள், சமமான கருங்கற்கள்கொண்டு எழுப்பிடப் பெற்ற பிறகே, அவற்றில் சிற்பங்கள் செதுக்கப் பெற்றன. அதுவும் குழைகாரையில் ( STUCCO ) சிற்பங்கள் செய்யப் பெறும் கலை நுணுக்கத்தைப் பின்பற்றியே செய்யப் பெற்றன. காஞ்சிபுரத்தில் விளங்கும் வைகுந்தப் பெருமாள் கோயிலிலும் பல்லவ மன்னர்களின் ஆர்வக்கலை வண்ணம் முழு நிறைவெய்திய பாங்கினைக் காட்டுகிறது.

சோழப் பெருமன்னர்கள், தஞ்சாவூரில் இருந்து ஆண்டு வந்த இரண்டு நூற்றாண்டுகளில் அதாவது கி.பி. 850 முதல்தான் திருக்கோயில்களின் பொற்காலம் தொடங்கியது.

கும்பகோணத்தில், நாகேஸ்வரர் திருக்கோயிலும், பழுவூரில் இலங்கும் இரட்டைக் கோயில்களும் சோழர் காலத்தில் தோன்றியவை. சோழப் பெருமன்னர்கள் ஆண்ட காலம் திருக்கோயில் வரலாற்றுத் திருப்புமுனை என்றால் மிகையல்ல. அளவில் மிகப் பெரியதாக இல்லாவிடினும், வேலைப்பாடுகளில் ஆரவாரமற்றும், மனத்தில் ஆழமாகப் பதியக்கூடிய கவர்ச்சியும் கொண்டதாகும்.

அதே போன்ற வடிவில் அமைந்தனதாம் கொடும்பாளூரில் உள்ள மூன்று கோயில்களும், அம்மூன்று கோயில்களில், இரண்டு மட்டுமே இன்று எஞ்சியுள்ளன. இம்மூன்று கோயில்களும், அடி முதற்கொண்டு கோபுரத்தின் உச்சி வரையிலும், கருங்கற்களால் கட்டப் பெற்றவையே.

இதே காலக் கட்டத்தில் கட்டப் பெற்ற நேர்த்தியான வீறார்ந்த நினைவுச் சின்னமாக விளங்கும் திருக்கோயில்தான், தஞ்சாவூரில் வானளாவ எழுந்து நிற்கும் பெரிய கோயில். சோழமன்னர்களில் மிகச் சிறந்தவரான இராஜராஜ சோழனால் 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அடித்தளம் முதல், கோபுரத்தின் உச்சியில் உள்ள தூங்கானை மாட விளக்கு தூபி மாடம் வரை முற்றிலும் கருங்கற்களாலேயே கட்டப் பெற்ற கோயில் இது. தரையிலிருந்து 70 மீட்டர் உயரம் கொண்டு விளங்குவது. இந்தக் கோயில் கட்டப் பெறுவதற்காக, குறிப்பிடத்தக்க தொலைவிலிருந்து தான் கருங்கற்கள் கொண்டு வரப்பட்டிருக்கும் என்று எண்ண வேண்டியுள்ளது. உச்சியில் உள்ள, திண்ணிய கட்டமைப்பு, இரண்டு பாறைச் சுவர்களால் தாங்கப் பெற்றுள்ளது. ஒவ்வொரு சுவரும் 5 மீட்டர் பருமன் உடையது. மேலே குறிப்பிட்ட அந்த மிகப் பெரிய தூபிமாடம் இரு சுவர்களில் ஏந்தலாக வைத்து இணைக்கப் பெற்றதாகும். நம்புதற்கரிய வியக்கதக்க இவ் அமைப்பு வரலாற்றின் இடைக் காலத்தில் வாழ்ந்த, தமிழ்ப் பொறியியல் அறிஞர்தம் அற்புதக் கட்டிடக் கலை நுட்பமாகும். இரண்டு அடுக்குகள் மீதில் 80 டன் எடையும் 8 சதுர மீட்டர் பருமனும்

கொண்ட மிகப் பெரிய கருங்கல் உச்சியில் மீதுதான் கவிகை மாடம் அமைந்துள்ளது.

கர்ப்பக்கிரகம் அல்லது கருவறையைச் சுற்றிலும் உள்ள பிரகாரத்தில் பண்டைய நாடகக்கலைக் கோட்பாடுகளின் தொகுதியில் கூறப்பட்டுள்ள ஆடற் கலை இயல் பற்றி விளக்கப்பட்டுள்ள 108 வகையான ஆடல் களையும் விளக்கும் வண்ணம் சிவபிரான் ஆடும் காட்சிகள், சிற்பமாக வடிக்கப் பெற் றுள்ளன.

இந்தப் பெரிய கோயில் முழுவதும், நம் அனைவரையும் வியப்பிலும் உயர்ச்சியிலும் ஆழ்த்தும் இறைவன் இறைவி உருவச் சிலை களால் அணி செய்யப் பெற்று விளங்குகிறது.

கோயிலின் அடித்தளத்தில், பழந்தமிழ் எழுத்துக்களால் பொறிக்கப் பெற்றுக் கல் வெட்டுகள் காணப் பெறுகின்றன. அவற்றில், இந்தப் பெரிய கோயிலுக்காக வழங்கப் பெற்ற பரிசுகள், அறக்கொடைகள் பற்றிய விவரம் எல்லாம் குறித்திடப் பெற்றுள்ளன. அத்தகு கல்வெட்டுகள் வரலாற்றுக்கு இன்றியமை யாதவை-முக்கியமானவை. கருவறை நோக்கி வெளியே பெரிய அளவிலான கல்லில் வடிக்கப் பெற்றுள்ள நந்தி சிவபெருமானின் வாகனம் மட்டுமல்லாது சின்னமும் ஆகும். அந்த நந்தி-6 மீட்டர் நீளமும் 3 மீட்டர் உயரமும் கொண் டது.

கங்கை கொண்ட சோழபுரத்தில் அமைந் துள்ள கோயில், இத்தனை உயரம் கொண்ட தல்ல வெனினும் சிற்பங்கள் எண்ணிக்கையில் மிகுந்ததாகவுள்ளது. சிவபிரான் சண்டீசர் தலையில் ஒரு மாலையைச் சூட்டும் காட்சியாக உள்ளார். ஆடல் இறைவனாம் நடராசப் பெருமான் பார்வதி பாதி, தான் பாதியு மாகக் காட்சி தருவது, படைப்பிறைவனில் பாதி பெண்ணும், பாதி ஆணுமாக உள்ளதனைக் சுட்டிக் காட்டுவதாம்.

தஞ்சையை அடுத்த 'தாராசுரம்' என்னும் ஊரில் 12-ஆம் நூற்றாண்டில், சோழமன்ன ரால் கட்டப் பெற்ற கோயில் ஒன்றுள்ளது. பல்வகை வேலைப்பாடுகளுடன் செதுக்கப் பெற்ற தூண்கள் உள்ளன. அத்தூண்கள் அந்த நூற்றாண்டுக்கே உரிய சிறப்பாகும். யானை உருவில் உள்ள பேயினை, சிவபிரான் கொன்றி டுவது போன்ற நிலையில் தோன்றுகிறார். மற்றும் ரிசிகளின் பத்தினிமார்கள் சிற்பங்கள் எல்லாம் சிவபிரானின் அழகொளியில் பள பளத்து நம்மை எல்லாம் திகைக்க வைக்கின் றன.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டு, கி.பி. 13-ஆம் நூற்றாண்டு ஆகிய இவ்விரு நூற்றாண்டு களில் உருவான திருக்கோயில் அமைப்பின் புதுப்போக்கினைச் சிதம்பரம் கோயில் வடிவ மைப்பு விளக்கிக் காட்டுகிறது.

அஃதாவது சிதம்பரம் கோயிலின் நான்கு திசையிலும் உள்ள நுழைவாயில் ஒவ்வொன் றின் மீதும்ஒரு கோபுரம் கட்டப் பெற்றுள்ளது, கோபுரத்தின் அடித்தளம் கருங்கல்லால் அமைந் தது. மேலே எழுப்பப் பெற்றுள்ள கட்ட மைப்பு, செங்கற்களாலும், குழைகாரையாலும் கட்டப் பெற்றது. அங்கே கோயில் கொண் டுள்ள இறைவன், நடராஜர் பெருமான் உறை விடம் வில்வளைவான கூரை, அஃது அண்ட சராசரத்தைப் பிரதிபலிப்பதாகும். ஏனெனில் ஆடல் இறைவன் பேரின்பத் திருநடம் புரியும் இடம் அண்ட சராசரமேயன்றோ; ஆடல் இறைவனின் மேல் வலது கரத்தில் உள்ள உடுக்கை, ஓங்கார ஒலி அலைகளின்மூலாதாரம், ஓங்கார ஒலி அலைகளே படைப்பின் அடை யாளம். மேல் இடக்கரத்தில் உள்ள வட்டில் அழித்தலினைக் காட்டும், கீழ் வலக்கரம், காத்த லினை உறுதிப்படுத்துவது, கீழ் இடதுக்கரம், தூக்கிய திருவடியைக் காட்டுவது பேரின்பப் பெரும் பதத்தை அருள்வோன் என்பது. வலது காலடியில் உள்ள முயலகன் மாந்தர் இனம் பாவம் செய்து பாழ்பட்டுள்ள நிலையினைக் காட்டுவது, நடராஜர் எனப்படும் ஆடல் இறை வன் கலை அறிவியல் சமயம் ஆகிய மூவொரு மைக்கு எடுத்துக் காட்டானவர்.

கோயிலின் நான்கு கோபுரங்களில் ஒவ் வொன்றும் 108 ஆடல்வகை முத்திரைகளை யும் விளக்கும் பட்டியலோடும் அவற்றிற்குத் தொடர்பான கல்வெட்டுகளும்கொண்டுள்ளன. இன்னும் சரியாகவும் விரிவாகவும் சொல்லப் போனால் சிதம்பரம் நடராஜப் பெருமான் கோயில் 'ஆடற் கலையின் களஞ்சியம்' என்றே சொல்ல வேண்டும்.

இந்தியாவின் ஆடற்கலை என்பது நீண்ட நெடுங்காலமாக, சமயத்தை விட்டுப் பிரிக்க முடியாத ஒன்றாக விளங்கி வருகிறது. ஏனெனில், 'ஆடற்கலை' என்பது இறைவனிட மிருந்து தோன்றியது என்று நம்பப்படுகிறது என்பதேயாம்.

**சுருள்: 3**

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர்கள், உயர்ந்த கோபுரங்கள் கொண்ட எண்ணற்ற கோயில்களைக் கட்டியுள்ளதற்குச் சரியான சான்றாக விளங்குவது திருவண்ணா மலையில் உள்ள கோயில் ஆகும். 70 அடி உயரம் கொண்டுள்ள இக்கோயிலின் கோபுரம், இந்திய நாட்டிலேயே உயரமானது என்று சொல்லலாம். கோயில்கள், நிரம்ப தூண்கள் கொண்டு பெரிதுபடுத்தப்பட்டவை. திருக் கோயிலின் நிலப்பரப்பின் ஒரு பகுதி, திருக் குளமாக இயங்குகிறது.

திருவரங்கத்தின் திருக்கோயிலே நகர மாக வளர்ந்துள்ளது. சாதாரணமாக கோயில் என்பது சிறு கருவறையைக் கொண்டதாகத் தான் இருக்கும். தலைமுறை தலைமுறை யாக வந்த ஆன்றோர்கள், பின்னைய நூற் றாண்டுகளில், தூண்கள் பல கொண்ட மண்ட பங்கள் கட்டிக் கோயிலுடன் சேர்த்தும் கோபு ரங்களும் கிளை தெய்வக்கோயில்களும் சேர்த் தும் வந்ததால் கோயிலின் பரப்பு, பரந்து

விரிந்தது. இந்தக் கோயிலில் 23 கோபுரங்கள் உள்ளன. உள் அரங்கங்கள் ஒரு சேரும் மையம் உள்ள இடத்தின் நடுவே அமைந்துள்ளது கருவறை. கருவறையில் எழுந்தருளியுள்ள இறைவனார் அரங்கநாதர்.

பீடத்தின்மீது, குதிரை உள்ளதாவது அந்தக் காலத்துக் கலைப்பண்புக் கூறாகும், இங்கே கல்மேல் காணும் கலைவண்ணம் அதன் உச்சக் கட்டத்தினை எய்தியுள்ளது.

கி.பி. 1600 தொடங்கி, பின்னால் வந்த நூறு ஆண்டுகளில் மதுரை ஆண்ட நாயக்க மன்னர்கள், திருக்கோயில்களுக்கு அதுகாறும் எழுப்பி வந்த கோபுரங்கள் மட்டும் கட்ட வில்லை; அந்தக்கோபுரங்களைக் குழைகாரையினால் கட்டப் பெற்று பல் வண்ணம் பூசப் பெற்ற பதுமைகளால் அலங்கரித்தார்கள்.

மதுரை மீனாட்சி கோயில், மிகப் பரந்த சிறந்த கட்டமைப்பு கொண்டதோடு, எண்ணற்ற சித்திரவேலைப்பாடுகளுடன் கூடிய நுழைவாயில்களோடும் ஒன்பது கோபுரங்களையும் கொண்டது. தெற்கு கோபுரம் 60 மீட்டர் உயரம் கொண்டது; கோபுரத்தின் அடிப்புறம் பரந்தும் மேற்பரப்பு, குவிந்தும் விளங்குவதால், கோபுரத்தின் உயரம் மேலும் கூடுதலாகவுள்ளது போன்ற தோற்றம் அளிக்கிறது. ஆயிரங்கால் மண்டபம் எண்ணற்ற சிற்பங்கள் செதுக்கப் பெற்றகல் தூண்களைக் கொண்டது.


விஜய நகர சாம்ராஜ்ய மன்னர்கள், மற்றும் நாயக்க மன்னர்கள் கட்டிடக் கலைக்கும் சிற்பக்கலைக்கும் ஆதரவு அளித்தார்கள்.

தூண்களில் ஆனைமுகம் கொண்ட வினாயகக்கடவுள்; அன்னத்தின் மீது அமர்ந்து செல்லும் காதல் தெய்வமாம் ரதி தேவி, அழகின் முழுவடிவமாக விளங்கும் மோகினி போன்ற சிற்பங்கள் செதுக்கப் பெற்றுள்ளன.

காஞ்சிமாநகரில் உள்ள வரதராஜப் பெருமாள் கோயிலில், ஒரே ஒரு கல்லில், தொங்கும் பாங்கில் சங்கிலி வடித்தெடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, தஞ்சையில் உள்ள சுப்பிரமணியர் திருக்கோயிலிலும் பாறாங்கல்லில் மெல்லிய பின்னல் இழை வடித்தெடுக்கப் பெற்றுள்ளது.

நீண்ட காலத்துக்குப் பிறகு, மரக்கட்டைகளுக்கு மாறாக, கருங்கல் பயன்படுத்தல் வழக்கத்திற்கு வந்தது. அதன் பின்னரே, மரக்கட்டைகளில் செய்யப்பட்டு வந்த சித்திரவேலைபாடுகள் அத்துணையும், கல்லின் மீதும் செய்யப் பெறுவதாயிற்று. அதோடு உத்திரங்களும் வளைச்சல்கள் போன்றவைகூட கல்லினாலேயே உருவாக்கப் பெற்றன. அது மட்டுமன்றி அந்தந்த நூற்றாண்டுகளில் வழங்கி வந்த வியப்பூட்டும் பழக்க வழக்கம், கலைத் திறன், நாகரீகப் பாங்கு முதலியவற்றினை எதிரொளி செய்யும் ஆடை அணிகலன்கள், நகைகள், தலை அலங்காரம் ஆகியவற்றுடன் காணப்படுகின்றன சிற்பங்கள்.



கல்லால் ஆன மேல் கூறை வேயப்பட்ட பிரகாரங்கள்,சுற்றுச் சுவர் மத்தியில் கருவறை அமையப் பெற்றுள்ள அமைப்பு, சுசீந்திரம் கோயிலில் உள்ளது போன்று, 17-ஆம் நூற்றாண்டில் அமைவதாயிற்று. அதன்படி அமைந்த ஒன்றுதான் 1200 மீட்டர் நீளமும் மிக உயர்ந்த சுவர்களும் திண்ணிய தூண்களும் கொண்ட பிரகாரமும் கொண்டதாக உள்ளது தான் இராமேசுவரம் திருக்கோயில். இப்படி கல்லிலே அமைந்திருக்கும் அற்புத வேலைப் பாடுகளின் மாட்சி, கடந்த காலத்தில் ஒன்று தான் எனக் கருதிடத் தேவையில்லை; இன்றும் நின்று நிலைத்தோங்கி வளர்ந்து வரும் வழிவழிக் கலையாக உள்ளது.

தமிழ்நாடு அரசினால், மாமல்லபுரத்தில் சிற்பக்கலைப்பள்ளி ஒன்று நடாத்தப் பெறுகிறது. அங்கே, கோயில் கட்டிடக் கலையும் சிற்பக்கலையும் பயின்றவண்ணம் உள்ளனர் இளந்தலைமுறையைச் சார்ந்த மாணவர்கள், தொன்று தொட்டு தொடர்ந்துவரும் கட்டிடச் சிற்பக்கலை ஒளிமயமாக விளங்கி வரும் வண்ணம், இந்நாட்களில் எங்கெங்கும் கோயில்கள் கட்டப் பெற்று வருகின்றன. காலம் கடந்து எஞ்சி நிற்கும் கோயில்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அவற்றினுடைய மூல அமைப்பு முறை விளங்கும் வகையில் நம் கண்முன் தோன்றும் சிறிய அளவில் திகழும் கோபுரத்தில் உச்சியில் உள்ள கலசங்கள், அளவில் பெரியன.

திருக்கோயில்கள் என்பவை, சமய வழிபாட்டுக்காக மட்டும் ஒருங்கே மக்கள் கூடும் ஓர் இடம் அல்ல.

மகத்தான படைப்புப் பணிக்காக மனிதன் தன்னை, முழுமையாக ஒப்படைத்துக்கொண்ட ஆக்கப் பெரும்பணியின் வெளிப்பாடாக அமையும் அறிவுபுகட்டும் மிகப் பெரிய கலைக்கூடம்.

கோயில் என்பது, காலப் பெருவெளியில் நிலை பேறுடைய நம்வாழ்க்கைப் பேற்றின் அடையாளச் சின்னமாக மட்டும் இருக்கவில்லை; இனியும் என்றும் நிலைத்து நிற்கக் கூடியது; கோயில் என்பது, 'பிரம்மம்' என்று அழைக்கப்பெறும். அந்த அனைத்தும் வல்ல ஆற்றலில் இருந்துதான் எல்லாம் தோன்றுகின்றன. ஒன்றுபடுகின்றன. நிலை திரியாத நிலையும் அள்ள அள்ளக் குறையாத 'அமுத சுரபியாக- இறவாமை என்னும் பெரும்பேற்றினை அருளும் இறைமையாக ஓங்கிடும் ஆற்றலின் உறைவிடம்.

'கோயில்' என்பது, பாலில் நெய் போல் எங்கும் எதிலும் ஊடுருவிப் பரவியுள்ள பரம் பொருளுமான எல்லாம் வல்ல ஆற்றலினைப் பொது மக்களும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் தத்துவமாக ஓங்கி விளங்கக்கூடியது; விளங்கும் அறிவெல்லைக்கும் அப்பாற்பட்டு இலங்கும் கடவுளின் பிரதிநிதித்துவமாக வழங்கும் தூய இடமே திருக்கோயில்.

**தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள்—திருவிழாக்களும் அவ்விழாக்களோடு தொடர்புள்ள கலைகளும்**

## பாகம் — 2

**சுருள் — 1.**

இந்தியாவில் உள்ள பற்பல நகரங்களில், விழாக் காலங்களில் இலட்சக்கணக்கான மக்கள் ஒருங்கே கூடுவர். எண்ணற்ற பெரு நகரங்களிலும் பட்டணங்களிலும் சிற்றூர்களிலும் எண்ணிலா திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பல்வேறு தெய்வங்களை வழிபடுவதன் மூலம், காலங்காலமாக தொடர்ந்துவரும் இந்தியாவின் மரபு வழிப் பண்பாட்டினை எதிரொலிக்கச் செய்கிறார்கள். எடுத்துக் காட்டாக, தென் இந்திய மாநிலமான தமிழ்நாட்டில் உள்ள மதுரைமாநகரில் ஆண்டுதோறும், ஏப்ரல் திங்களில் நடைபெற்று வரும் விழாவைச் சொல்லலாம். விழாவைக் காண-கண்டு மகிழ, மக்கள் நெடுந்தொலைவிலிருந்து மதுரைக்கு வருகிறார்கள். அதுவும் நடந்தும், மாட்டு வண்டிகளிலும், பஸ், கார் மற்றும் சைக்கிளிலுமாக எண்ணிட முடியாத இலட்சக்கணக்கான மக்கள் மதுரையில் நடைபெறும் விழாவிற்கு வந்து கூடுகின்றனர். சாலையோரங்களில் தங்குகின்றனர். மதுரைமாநகரில் மக்கள் நிரம்பி வழிவதால் சாலைகள் வழியே வந்து விழாவிற்காக தங்கிடும் அம்மக்கள், பல்வேறு பழக்க வழக்கங்களைக் கொண்டவர்கள். சில விழாக்கள் சிறிய அளவிலும் பலவிழாக்கள் பெரிய அளவிலும் நடைபெறுகின்றன. இந்த விழாக்களில் வந்து கூடும் மக்கள் கடலில், பச்சிளம் குழந்தைகளும் முதலாவதாக விழாவைக் காண கொணரப்படுகிறார்கள். அதே போன்று ஆண்களும், பெண்களும், முதன் முதலாக விழாவைக் காண வருகிறவர்கள் ஒரு



நூற்றாண்டுக்கு முன்னர் இருந்தனர். இன்றும் ஏராளமாக வந்து கூடுகிறவர்கள் உள்ளனர்.

திருவிழாக்கள், பல தரப்பட்டவர்களுக்கும் ஏற்புடையதாதலால் பள்ளி விடுமுறையை பயன்படுத்த வரும் மாணவர்கள், ரங்கராட்டினத்தில் அமர்ந்து சுற்றுவதற்காக வருபவர்கள், இன்ப விருந்தாகக் கொண்டு வருபவர்கள், மகிழ்ச்சியோடு பொழுது போக்கவென்று வருபவர்கள், வண்ண வண்ண உடையணிந்து நாட்டுப்புற நடனம் கண்டு களிக்க வருபவர்கள்; சமய சிறப்பு நிகழ்ச்சியில் பங்கு கொள்ளும் வகையில் வரும் சிலர், திருக்கோயில் விரிவாக்கப் பணிகளில் கலந்து கொள்ள வரும் மிகச் சிலர் ஆகிய அத்துணைப் பேருக்கும் திருவிழா, ஓர் அரிய வாய்ப்பாக அமைகிறது. நடைபெறும் ஒவ்வொரு விழாவும் அந்தந்தக் கோயில் செய்யும் ஏற்பாடு ஆகும். எந்தத் திருவிழா ஆனாலும், அந்தத் திருவிழாவைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் முதலில் அந்தத் திருவிழா நடைபெறும் திருக்கோயில் பற்றி நன்றாக அறிந்து கொள்ள வேண்டும்.

இந்துக்களுக்கு, 'சமயம்' அல்லது 'மதம்' என்பது வெறும் சமயக் கொள்கை மட்டும் அன்று; வாழ்க்கை நெறியும் ஆம். நல்லன வற்றையெல்லாம் தெய்வீகமாகக் கொண்டு ஒழுகுகின்றனர். இந்துக்களைப் பொறுத்த மட்டில் கலைகள் எல்லாம் கடவுளிடமிருந்து தோன்றியவை என்று நம்புவதோடு, இயல்பாகக் கலைகளைப் பயன்படுத்தவும், கலைகளை மதித்துப் போற்றிடவும் வேண்டும் என்பதே. கோயில் என்பது நமக்கெல்லாம் நம் அறிவினை வழங்கும் கல்வி-கலைக்கூடம் என்று இயல்பாக உன்னுறையும் தத்துவம். 'கோயில்'



என்பது கலை, கட்டிடக் கலை, சிற்பம், ஓவியம், இசை ஆடல் ஆகியவை உறையும் இடம். கோயில் அதில் உள்ள சிற்பங்கள் வாயிலாக, படைப்பில் அகல்பரப்புக் காட்சிகளை நினைவு படுத்துகிறது.

கோயிலில், கடவுள் உறைகிறார், அவரைக் கண்டு, உய்வு பெற மக்கள் வருகின்றனர். அம்மட்டோ! அந்தக் கோயிலில் விலங்குகளின் உலகமேயல்லவா அடங்கியிருக்கிறது.

கோயிலில் அன்பும் இரக்கமும் தவழ்கிறது. பக்திவழிபாடு நடைபெறுகிறது. மற்றும் இந்து புராண இலக்கியங்களில், பேசப்படும் போராட்டங்கள் அனைத்துங்கூட காணப்படு கிறது.

காஞ்சி மாநகரில் உள்ள, கைலாசநாதர் கோயிலில், 8-வது நூற்றாண்டின் சுவர்க்கோல ஓவிய எச்சமிச்சங்கள் உள்ளன. அவை, அஜந்தா ஓவியங்களை நினைவூட்டுகின்றன. செங்கல்லாலோ காரையாலோ அல்லது கருங் கல்லாலோ ஆக இவற்றில் யாதேனும் ஒன் றால் கட்டப்பட்டிருப்பினும் இக்கோயில்கள் முற்றுமாக வண்ணம் பூசப் பெற்றிருந்தன.

சித்தன்ன வாசல், குகை ஓவியங்கள்-9-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தது. தாமரைக் குளத்தில் அன்னங்கள் உள்ளன போன்றும்; ஆடல் அணங்கு ஆடுதல் போன்றும் உள்ள ஓவியங்கள்தாம் அவை.

தஞ்சாவூர் கோயில்களில் காணப்படும் சுவர் ஓவியங்கள் 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந் தவை. அரம்பை, மேனகை, ஊர்வசி, திலோத் தமை ஆகிய தேவருலக ஆடலணங்குகள்; நிலவுலக ஆடல் அணங்கு ஒருவள், அழித்தல் இறைவனாகிய சிவபெருமான் சினம் பொங் கும் நிலையிலும், அவளுக்கு அருகில் சோழ மாமன்னனும்-ஆகியனவே அவ்வோவியங்கள்.

திருவரங்கத்தில் 18-ஆம் நூற்றாண்டின் சுவரோவியங்கள் காணப்படுகின்றன.

மதுரை கோயிலிலும் அதே நூற்றாண்டில் வரையப்பட்ட ஓவியங்கள் உள்ளன. அவற் றினையொத்த ஓவியங்கள் சுசீந்திரத்திலும் உள்ளன.

அதே போல், இராமபிரான் முடிசூட்டு விழாவை விளக்கும் ஓவியமும், கும்பகோணத் தில் உள்ள கோயில் ஒன்றிலும் உள்ளது.


திருக்குற்றாலத்திலும் அதே போன்றுள்ள சுவரோவியங்கள் மிகப் பழமையாகக் காணப் பட்டதால் அவை மீண்டும் வண்ணம் பூசப் பெற்று புதுப்பிக்கப் பெற்றுள்ளன.

திருக்கோயில் சிறப்புக்கு மேலும் சீரும் சிறப்பும் செய்யும் கலை அம்சமாக விளங்குவது திருவிழாக் காலங்களில் வீதி உலா வருவதற் காக, அந்தந்தக் கோயில்களில் எழுந்தருளும் இறைவனின் திருமேனிகள், செம்பு-வெள்ளீயக் கலவை அல்லது ஐம்பொன்னால் செய்யப்பெறு வன. இத்தகுமரபு, கடந்த 2500 ஆண்டு களுக்கும் மேலாகத் தொடர்ந்து இருந்து வரு கிறது. அம்மை வடிவில் உள்ள பழமையான திருமேனி, 5 சென்டி மீட்டர் உயரம் கொண் டது கி.மு. ஏழாம் நூற்றாண்டினதாகும். 'போதி சத்துவமைத்ரேயா' என்னும் பேர் கொண்ட திருமேனி, தங்கமுலாம் பூசப் பெற் றது. இஃது எட்டாம் நூற்றாண்டினது. 9-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை சோழ மன்னர் காலத்தில் இந்த ஐம்பொன் திருமேனிகள் கோயில்களில் இடம் பெற்றன. அவை அனைத்தும் தூய இலக்கியக்கலை நயம் பொங்கி வழியும் மேன்மை வாய்ந்தவை என் றால் மிகையல்ல.

**சுருள் — 2.**

வெண்கலச் சிலைகள் செய்வது என்பது ஒரு வாழும் தனிக்கலை. இன்றுங்கூட உரு வாக்கப் பெற்று வருகிறது. எந்தச் சிலை செய்யப்படவேண்டுமோ, அது முதலில் அரக்கு கொண்டு உருவாக்கப்படுகிறது. அந்த அரக்கு உருவம் களிமண்ணில் வைத்து மூடப் பெறு கிறது. பின்பு, சூட்டினால் உருக்கப் பெறுகிறது. உள்ளே இருக்கும் அரக்கு உருகி வெளியேற் றப் பெறுகிறது. இப்போது களிமண்ணால் ஆன, அச்சு உருவாகிவிட்டது. இந்தக் களிமண் அச்சில் அல்லது வார்ப்படத்தில்தான் வெண் கலத்தோடு கலந்த ஐந்து உலோகங்கள் உருக்கி வார்க்கப் பெறுகிறது. நன்கு சூடு ஆறிய பிறகு களிமம் எல்லாம் செதுக்கி எடுக்கப் பெறு கிறது; உள்ளே உருவாக்கப் பெற்றுள்ள சிலை யினை எடுத்து மேற்பகுதி முழுவதும் சிற்றுளி யால் அழகு பெற செதுக்கப் பெற்று, நேர்த்தி செய்யப் பெறுகிறது.

இவ்வாறு உருவாக்கப் பெற்று அழகிய அணிகளாய்-நகைகளால் அலங்கரிக்கப் பெறு கிறது. இந்த அணிகளுக்குத் தேவையான விலையுயர்ந்த வைரம், வைடூரியம் 'இரத்தினம்



புஷ்பராகம், நீலம், மரகதம் கோமேதகம் போன்ற நவமணிகளோடு தங்கத்தையும் வழிபடும் பக்தர்களாலும், மன்னரிலிருந்து சாதாரண மக்களாலும் பற்பல நூற்றாண்டுகளாக, காணிக்கையாக வழங்கப் பெற்றவை. அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வெள்ளியாலான பொருள்களும் பல்வேறு கலங்களும், தூப, தீப-கலசங்களும், தீபாராதனை தட்டுகளும், உருவங்களும் செய்யப் பெற்று, கடவுள் வழிபாட்டுக்குப் பயன்படுத்தப் பெற்று வருகின்றன.

அடுத்து, மரங்களினால் ஆகிய படைப்புகளும், முன்னோர் கைத்திறனில் படைக்கப் பெற்றுள்ளன. கைவினைத் திறத்தால், மரத்தில் அமைந்த வேலைப்பாடுகள், கல்லிலே இடம் பெறுவதற்கு முன்னதாகவே வளர்ந்தோங்கிய கலை, மிகப் பெரிய அளவிலான கதவுகள் கொண்ட கோயில்கள் அதற்குச் சான்றுகள். எடுத்துக் காட்டாக காஞ்சிபுரத்தில் உள்ள கோயில் ஒன்றில் கதவு 15 மீட்டர் உயரத்தில் உள்ளதனை இன்றும் காணலாம். பொதுவாக முதல் முதலில் கோயில்கள், மரத்தினால் தான் கட்டப் பெற்று வந்தன. கோயில்களில் உள்ள பஞ்சலோகத் திருமேனி, அணி மணி மலர் அலங்காரத்துடன் வீதிகளில், உலா வரும் தேர்கள்கூட, மரத்தினால் செய்யப் பெற்றவையே.

கைவினைத் திறத்தால் மரத்திலேயே அனைத்தும் செய்யப் பெற்று வந்தன என்பதற்கு, கோயில் தேரும், பிறவும், எதிரொளி செய்வதைக் கண்டு கொள்ளலாம். இறைவன், இறைவி முதலான பல்வேறு திருமேனிகள் மட்டுமல்லாமல், புராண இதிகாசங்களில் வரும் நிகழ்ச்சிகளில் குறிப்பிடப்பெறும் ஆண், பெண், செடி, கொடி, மரம் முதலான தாவரங்கள், விலங்குகள் எல்லாம் மரத்தினால் செய்யப் பெற்றவை அளப்பரியன. தந்தத்தில் மிக மிக நுட்பம் வாய்ந்த கலைவேலைப்பாடுகளுடன் கூடிய அரும் பெறும் பொருட்களை உருவாக்கி வரும் அற்புதப் பணியும் திருக்கோயில்களினால் வளர்க்கப் பெற்றதே!

புதியதாக ஒரு கோயில் கட்டப் பெற்றாலும் அல்லது புதுப்பிக்கப் பெற்றாலும் விரிவான சமய வினை முறைகள் 'கொண்ட கும்பாபிஷேகம் நடாத்திடப் பெறும். கோயிலைத் தூய்மைப்படுத்திடும் முகத்தான் நடாத்தப் பெறுவதே ‘கும்பாபிஷேகம்’ எனப்படும் குடமுழுக்கு.

கோயிலைத் தூய்மைப்படுத்துதல் போலவே கோயிலுக்குச் சென்று வழிபடும் அடியவரும்கூட தங்கள் அகம்-புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். கோயில்களில் வெளிப்படும் கலைகள் முதல், கோயிலில் நாம் செய்யும் வழிபாடு வரையில் அகமும் புறமும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதும் கட்டாயம். அதன் அடையாளமே, இறைவனை வழிபடுவதற்காகக் கோயிலுக்குச் செல்வதற்கு முன்பே, குளிப்பதும் ஒரு கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. உடல் உள்ளம் இரண்டுமே தூய்மையாக இருப்பது மிகமிக முக்கியம் மட்டுமல்லாது, கட்டாயமும் கூட.

திருக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் மூலவர்கூட நாள்தோறும் வேளைதோறும் அபிஷேக நீராட்டப் பெறுகிறார். அதுபோது வேதமந்திரம் ஓதப்படுகிறது. அபிஷேகத்திற்கு நீர், பால், எண்ணெய், அரைத்த சந்தனம், பஞ்சாமிர்தம், பன்னீர், தேன் போன்றவை அர்ச்சகரால் பயன்படுத்திடப் பெறுகிறது. அதோடு திருநீற்று அபிஷேகம், சந்தனக்காப்பு போன்ற முறைகளும் தொன்றுதொட்டு இன்று வரையிலும் பின்பற்றப்பட்டு வருகிறது. இப்படி அபிஷேகம் நடந்து முடிந்த பின்பு, பஞ்சலோகங்கள் அல்லது வெள்ளியால் செய்யப்பெற்ற மயில், ஆடு, எருது, சிங்கம் போன்ற வடிவங்களில் நெய் தீபம் ஏற்றி மூலவருக்கு முன்பாகக் காட்டுவதும், குடையைக் காட்டியும், விசிறியால் விசிறியும் கொடியை அசைத்தும், கண்ணாடியைக் காட்டியும் தீபாராதனை செய்யப்படுகிறது. அதற்குப் பின்பே, ஐந்து ஆறு எட்டுக் கிளைக் கொடிகளோடு அமைந்த தீபக் கலசத்தில் கற்பூரம் ஏற்றி தீப ஆராதனை செய்யப் பெறுகிறது.

ஞானியரும், யோகியரும், தங்கள் சிந்தனையை ஒரு நிலையில் நிறுத்தி இறைவனை வழிபடல் அல்லது தியானம் செய்தல் என்பது இறைவனை உணர்வதற்கான சாதனங்களாகக் கருதப்படுகிறது. அதைப் போலவே இசையாய், இசையின் பயனாய் உள்ள இறைவனை உணரவும் இசை பயன்படுவதால், இசையோடு கூடிய தெய்வீகப் பாடல்களை நம் முன்னோர் பாடி வைத்திருப்பதனை, ஓதுவாமூர்த்திகளைக் கொண்டு, அன்றாடம், கோயிலில் மூலவருக்கு அபிஷேகம் அலங்காரம் முடிந்தவுடனே பாடிடப்பெறுகிறது. அதற்கென்றே, கோயில்கள் தோறும் அர்ச்சகர்களைப் போலவே, ஓதுவாமூர்த்திகளும் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

திருக்கோயிலுக்குச் சென்று வழிபடுவோர்க்கு மட்டுமே மூலவர் திருக்காட்சி கிடைக்கிறது. கோயிலுக்கு வரமுடியாதவர்களும் கோயில் கொண்ட இறைவனின் திருக்காட்சி காணப்பெறுதல் வேண்டும் என்பதற்

காகவே ஆண்டுதோறும் நடைபெறும் முக்கியமான திருவிழாக்களின்போது கோயில் மூல வரை ஒத்திருக்கும் பஞ்ச லோகத்தால் செய்யப் பெற்ற திருமேனி ஊர்வலமாகக் கொண்டு செல்லப் பெறுகிறது. இப்படி, ஊர்வலமாகக் கொண்டு செல்லப் பெறுவதற்காக அந்தந்த இறைவனுக்கு உரிய வாகனங்கள் பஞ்ச லோகத்தால் மரத்தால் செய்யப் பெற்றிருக்கும். அவற்றின் மேல், வெள்ளி, அல்லது தங்க தகடு மூடப்பட்டிருக்கும். அவை ஊர்திகள்-வாகனங்கள், பல்லக்கு, சப்பரம், தேர் போன்றவற்றின் மேல் வைத்து அவற்றின் மீது இறைவன் திருமேனி அலங்காரம் செய்யப்பெற்று வைத்து ஊர்வலமாகக் கொண்டு செல்லப் பெறும்.

இவ்வாறு முக்கிய வீதிகள் வழியே இறைவன் திருக்கோலத்துடன் உலா வருவது கோயிலுக்கு வந்து வழிபட முடியாத, நோயாளிகள், முதியோர்கள் ஆகியோர் அவரவர் இருக்கும் இடத்திலேயே இருந்து இறைவன்-இறைவி திருக்கோலத்தைக் கண்டு களிக்க வேண்டும் என்பதால்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊர்வலமாக இறைவன் இறைவி எழுந்தருளிச் செல்லும் போதும், அபிஷேகம், அலங்காரம், பூஜை நடத்திடும்போதும், மிகத் தொலைவிலும் கேட்கக்கூடிய இன்னிசைக் குழலான நாதசுரம், தவில் போன்ற வாத்தியங்களோடு இசைக்கப் பெறுகிறது.


இது போன்று, தவில் தாளத்துடன் இசைத்திடப் பெறும் நாதசுர இசைப் கோயிலில் பயன்படுத்தப்படுவது கட்டாயம். அதே போன்று மங்கல இசைக் கருவியான நாதசுரம் பல்வேறு மங்கல நிகழ்ச்சிகள், திருவிழாக்கள் ஆகிய அனைத்திலும் இசைத்திடச் செய்வது ஒரு கட்டாயமாகக் கொள்ளப்பட்டு வருகிறது.

**சுருள்-3 :**

சென்னை மாநகரில், ஆண்டு தோறும், சைவ நாயன்மார்கள் அறுபத்து மூவர் திருவிழா மிக முக்கியமாக நடைபெற்று வருகிறது. முதல் 9-ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் விளங்கியவர் ஆவர் அவ் அறுபத்து மூன்று நாயன்மார்களும்.

திருவிழா ஊர்வலத்தில், அவ் அறுபத்து மூன்று'நாயன்மார்கள்(பஞ்சலோகத்தினால்ஆன திருவுருவச் சிலைகள்)பல்லக்குகளில் எடுத்து செல்லப் பெறுவர்.அவ்அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கு முன்னே, சிவபிரான் உமையவள் திருமேனிகளும் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

இப்படி நடைபெறும் கோயில் திருவீதி உலாவில் யானை முன்னே நடந்து செல்லும். பல்லக்குகள் எல்லாம் மலர்களால் அழகுற




அலங்காரம் செய்யப் பெற்றிருக்கும். காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திட வல்ல திருவிழா இவ்அறுபத்து மூவர் திருவிழா.

அறுபடை வீடுகளில் ஒன்றான பழநியில், கோயில் கொண்டுள்ள சிவபிரானின் இளைய மகனான முருகப்பெருமானுக்கு, பக்தர்கள், மயில் இறகுகளால் அலங்கரிக்கப் பெற்ற காவடிகளில், பால்குடங்கள் வைத்துத் தோளில் சுமந்து கொண்டு சென்று அபிஷேகம் செய்திட காணிக்கையாகப் படைக்கிறார்கள்,

அது போலவே, அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணிகை முருகப்பெருமானுக்கு, ஆண்டுதோறும் ஆடிக்கிருத்திகை நன்னாளில் இலட்சக்கணக்கான பக்தர்கள், மலர்க்காவடி சுமந்துகொண்டு வந்து படைக்கிறார்கள். பூக்களை முருகன் திருவடியில் படைத்திட நடந்தே காவடிகளில் கொண்டு வரும்போது 'அரோகரா 'அரோகரா' என்று ஒரே குரலில் ஆயிரக்கணக்கானோர் திருத்தணி மலையில் எதிரொலிக்கும் வண்ணம் குரல் கொடுத்து, பாடியும் ஆடியும் வரும் காட்சி, புல்லரிக்க வைப்பதான காட்சியாகும்.

திருவாரூர் கோயிலுக்கு 32 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ள திருக்குளம் மிகப்பெரியது. கோயில் திருக்குளங்களிலேயே, அதுவொன்றே மிகப் பெரியதாகும். அந்தக் குளத்தில் நடைபெறும் தெப்பத் திருவிழா புகழ் பெற்ற ஒன்று. கோயில் மண்டபம் போன்றே வடிவமைக்கப் பெற்று அலங்கரிக்கவும் பெற்று அதில் தியாகேசர் திருமேனியும் அலங்கரிக்கப் பெற்று நீராழி மண்டபத்தைச் சுற்றி வலம் வரும் காட்சி கண்கொள்ளாக்காட்சி. தெப்பம் வலம் வரும்போது அதில் இசைவாணர்கள் பண்பாடி வருவர். அவர்கள் பாடுவது செவிக்கு விருந்தாகும்,



சில கோயில்களில் தங்கத் தகடு வேய்ந்த பல்லக்குகள் உள்ளன. அது போலவே, சில கோயில்களில் வெள்ளி அல்லது தங்கத் தகடு வேய்ந்த தேர்களும் உள்ளன.

திருவாரூர் தேர்த்திருவிழா என்பதுஆண்டு தோறும் நடைபெறும் வியப்பூட்டும் விழா. கோயில் தேர்கள், ஒன்றுக்கு மற்றொன்று அளவில் வேறுபட்டவை. தேர்த்திருவிழாவின் சிறப்பெல்லாம், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள், தங்கள் மதம், சாதி, பதவி, பணம், தகுதி அனைத்தையும் மறந்து, அவ்விழாக் களில் கலந்துகொள்வதுதான். தேர்களிலேயே மிகப் பெரியதான திருவாரூர் தேரினை வடம் பிடித்து இழுப்பதுதான். அப்படி வடம் பிடித்து தேரினை இழுப்பது என்பது ஒரு மிகப் பெரிய புண்ணிய திருப்பணி என்று பக்தர்கள் நம்பு கிறார்கள்.


மதுரை திருக்கோயிலில், இறைவி மீனாட்சி இறைவனார் சிவபிரானை மணந்து கொண்ட செய்தி கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. அழகிய மணமகளாக அளப்பரும் மகிழ்ச்சியில் நாணத் தால் முகம் சிவக்க, விளங்கும் மீனாட்சி. மணமாகாத இலட்சிய மங்கைக்குரியவளாகக் காட்சி அளிக்கிறாள்.

ஆண்டுதோறும் நடைபெறும் மீனாட்சி சுந்தரேசுவரர் திருமணம், இந்து சமயத் திரு மணங்களுக்கேற்ப நடைபெற்று வருகிறது. அவ் விழாவின் போது, நேர்த்தியான ஆடைகள் அணி விக்கப் பெற்றும், பொன்னும்மணியும் மின்னும் நகைகள் பூட்டப் பெற்றும், மலர்களால் அலங் காரம் செய்யப் பெற்றும் ஊஞ்சலில் மீனாட்சி அம்மை அமர்தல் ஓர் எழில்மிகும் காட்சி. இரண்டு, புரோகிதர்கள் திருமண வினை களை நடத்தி வைக்கிறார்கள். திருமாங்கல்யம் மீனாட்சியின் கழுத்தில் அணிவிக்கப் பெறுகிறது. வேதமந்திரங்கள் முழங்கிட, நாதசுர மேள தாளங்களும் முழங்கிட நடைபெறும் அந்தத் திருமணக்கோலம் என்றும் நினைவில் பசுமை யாகக் காட்சி தருவதாம்.

உயர்ந்த தூண்கள் கொண்ட மண்டபங் களும் உயர்ந்த கோபுரங்களும் திருக்குளமும் கொண்ட இந்து சமய கோயில்கள் எல்லாம் ஒரு சமுதாயக் கூடமாகவே விளங்கி வந்திருக்கிறது. எப்படியெனில், சமுதாய மக்களுக்குரிய வழி படும் திருவிடமாகவும் சாதி வேறுபாடின்றி ஒன்று கூடும் ஒருமைப்பாட்டு இடமாகவும் இறைவனை வழிபடும் தூய்மை இடமாகவும் இருப்பதால் 'கோயில்' என்பது ஒரு தலை சிறந்த சமுதாய மையமாக கருதிப் போற்றப் படுகிறது. அதோடு, கோயில்களில்தான், பெரும்பாலும் முன்னையோர் காலத்து நிலை மையை-வளமையை- பணியை நிலைநாட்டும் கல்வெட்டுக்கள் உள்ளன. உலகிலேயே முதல் முதல், மக்களால், ஆட்சிக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வாக்குகள் தந்த வியப் பான செய்தி உத்திரமேரூர் கோயில் கல் வெட்டில் கண்டறிய முடிகிறது. மேலும், மக் களுக்குத் தேவையானபோது உணவு தானியங் களும், கடனாகப் பண உதவிகூட, கோயில் களினால் செய்யப்பட்டு வந்த செய்திகள் அடங்கிய கல்வெட்டுக்களும் உள்ளன. கண் பார்வையற்றவர்களுக்கும் ஊனமுற்றவர் களுக்கும் உணவு முதலான உதவிகள் செய் வதற்கான மானியங்கள் கோயில் நிதியிலிருந்து வழங்கப்பட்ட செய்தியும் கல்வெட்டுக்கள் மூலம் அறியக்கிடக்கின்றன.



கைவினஞர், சிற்பிகள், அறிஞர் பெரு மக்கள், அர்ச்சகர்கள், குருக்கள், இசை வாணர்கள், ஆடற்கலைவல்லவர்கள் இன்





னோரன்னவர்கள் நூற்றுக்கணக்கானவர்களை கோயிலில் பணிக்கமர்த்தியுள்ள வரலாறும், செப்பிடும் செப்பேடுகளும் கோயில்களில் தான் கிடைக்கப் பெறுகின்றன.

அண்மைக் காலமாக வழிபாட்டு முறை மற்றும் வேத ஆகமப்பாடல் சொல்லித்தரும் பள்ளிகள், திருக்கோயில்கள் சிலவற்றால் நடத்தப்பட்டு வருகின்றன. வேதங்கள் மற்றும் தேவாரம், திவ்வியப் பிரபந்தம் ஆகிய தமிழ்ப் பண்-பாடல்களும் சொல்லித் தரப் பெறுகின்றன. நாதசுர இசைக்கலைகூட, பயிற்றுவிக்கப் படுகிறது. அது மட்டுமா! ஆதரவற்ற சின்னஞ் சிறார்களுக்கு கல்வி பயின்றிடப் பள்ளிகளும், செவிடு-ஊமைச் சிறார்களுக்கும் பள்ளிகள் முதியோருக்கான அன்பு இல்லங்கள்கூட நடத்தப் பெறுகின்றன. இன்னும் சொல்லப் போனால் ஏழைகளுக்கு இலவச மருத்துவம் அளித்திடும் மருத்துவமனைகள்கூட நடத்தப் பெற்று வருகின்றன.

கோயில்கள், அவற்றில் உள்ள சிற்பங்கள் ஓவியங்கள் உருவச் சிலைகள் மற்றும் கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் ஆகியவை, பற்பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வரும் பண்பாட்டினை எதிரொலி செய்து வருகின்றன. இத்தகைய சிறப்பெல்லாம் கொண்ட இந்து மதப்பண்பாடு அயல்மதங்களின் தாக்குதல்களை யெல்லாம் தாங்கியும் ஓங்கியும் விளங்குவதன்றி, அவ் அயல்மதங்களில் உள்ள மரபுக்கும் கருத்துக்கும் ஒத்த நல்லனவற்றை எல்லாம் ஏற்று, தன்னுடன் இணைத்துக் கொண்டு இயங்குகிறது—இயங்கி வருகிறது என்பது உண்மை.

என்றென்றும் இயங்கும் ஆற்றல் வாய்ந்த கோட்பாடும் பண்பாடும் வாழும் வழி வழி நிதியம்—இந்து மதம்.



அது நீண்ட நெடுங்பழங்காலத்திலிருந்து பிறகு விரிந்து பறந்து வந்து நம் நிகழ்காலத்தில் நம்மோடு நின்று இயைந்து, நிலைத்து, வரும் எதிர்காலத்துக்கும் பறந்து சென்று, எண்ணற்ற நூற்றாண்டுகளைக் கடந்து சென்று ஓங்கி வளர்ந்து வயங்கி மன்னுயிர்கள் உய்ய விளங்கும் சமயம்—நம் இந்து சமயமே.

— — —

# நின்றவூர்ப் பூசல்அன்பன்

திருமதி உமா ராஜன்

## முன்னுரை

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே''-
திருமந்திரம்.

திருமூலர் மட்டுமல்ல ஆழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வாரும்,

''அன்பே தகழியா யார்வமே நெய்யாக
இன்புருகுஞ் சிந்தை யிடுதிரியாய்—நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்''

—என்று இந்த உடலுக்குள் பாய்ந்து கிடக்கின்ற உணர்ச்சிகளையே இறைவனுக்குரிய பூசைப் பொருளாக அர்ப்பணம் செய்ததை நாம் அறிவோம்.

அதுமட்டுமல்ல; 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமான சுவாமிகள்கூட

'நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்
அன்பே
மஞ்சனநீர் பூசை கொள்ள வாராய் பராபரமே'' என்று எம்பெருமானைத் தன் மனக்கோயிலில் குடியிருக்கச் சொன்னார்.

இப்படி இறைவன் மீது பற்றுக் கொண்ட அடியார்கள் எல்லாம் இறைவனை மனக்கோயிலில் ஏற்றி வழிபட்டு வந்ததொன்றும் புதிதல்லதான். ஆனால் இவர்களினின்றும் மாறுபட்டு மனக்கோயில் அமைத்து இறைவனைப் பிரதிஷ்டை செய்து இறைவன் பொன்னடி சேர்ந்தவர் 63 அடியார்களில் ஒருவரான பூசலார் நாயனார் ஆவார்.

## நூல் சிறப்பு

பன்னிரு திருமுறைகளில் பன்னிரெண்டாம் திருமுறையாகிய பெரிய புராணத்தைப் பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவளவர் சேக்கிழார் பெருமான் அவர்கள். பெரியபுராணத்தைத் தனித்தனி பற்பல சரிதங்கள் கோத்த கோவை என்று கூறுவதைவிட பெரிய புராணமானது தொடர்நிலைச் செய்யுளாய், ஒரு பழஞ் சரிதத்தைச் சொல்வதாய், ஒரு பெரிய உள்ளீட்டை எடுத்துக் காட்டுவதாய் உள்ள ஒரு பெருங்காவியமே.

## பூசலார் தோற்றமும், வாழ்வும்

தன்னிலை அழிந்து இறைவன் அருளுக்கே அடிமைத் தன்மை பூண்ட-இறைவன் அருளால் ஆட்கொள்ளப்பட்ட பெரியோர்களின் வரலாற்றிலே பூசலார் நாயனார் வரலாறும் அடங்கும்.

''அன்பினால் புரம் எரித்தார்க்கு
ஆலயம் எடுக்க எண்ணி
ஒன்றும் அங்கு உதவாதாக
உணர்வினால் எடுக்கும் தன்மை
நன்று என மனத்தினாலே
நல்ல ஆலயம்தான் செய்த
நின்ற ஊர்ப்பூசலார் தம்
நினைவினை உரைக்கல் உற்றாம்''

என்று சேக்கிழார் பெருமான் பூசலார் நாயனார்க்கு முன்னுரை கூறி அவர் தம் வரலாறு கூறத் தொடங்குவார்.

உலகிலேயே ஒழுக்கம் நிறைந்து விளங்குகின்ற உயர் பெருந் தொண்டை நாட்டிலே எல்லாச் சிறப்புகளால் சிறந்து விளங்குகின்ற, அதிலும் முக்கியமாக நான்கு வேதங்களும் முறையோடு சப்திக்கின்ற மூதூராகிய திருநின்றவூரிலே மறையோர் குலத்திலே வந்துதித்தார் பூசலார். இளம் வயதிலிருந்தே இறைவன் மீது மாறாப் பற்றுடையவராக உண்மை நெறியான வேதநெறி உணர்ந்து, அதன் வழி நின்று வரலானார். இறைவன் மீது அளப்பரிய பற்றுக் கொண்ட அடியார்கள் அனைவருமே சிவனடியார்களுக்குத் தொண்டு செய்வதை ஈசனுக்குச் செய்யும் சேவை என்றே கருதுபவர்கள் - அவர்களில் ஒருவரேநம் பூசலாரும்.

## பூசலார் இறைவனுக்குக் கோயில் எடுப்பிக்க நினைத்தல்

''அடுப்பது சிவன்பால் அன்பர்க்கு
ஆம்பணி செய்தல்''—என்ற கொள்கையோடு வாழ்ந்து வருகின்ற நாளிலே இறைவன் மீது கொண்ட அளப்பரிய காதலால் எப்பாடுபட்டாவது எம்பெருமானுக்குக் கங்கையை முடிமேல் சூட்டிக் கொண்ட இறைவனுக்கு ஒரு கோயில் கட்ட வேண்டும் என்று பேரவா கொண்டார். இறைவனுக்குக் கோயில் கட்ட வேண்டும் என்று நினைத்தவுடன் அதற்கான பொருள் தேடத் தொடங்கினார். கோயில் கட்டுவது என்பது சாதாரணச் செயலா? அதற்கு எத்துணைப் பொருள் வேண்டும். தம்மால் எம்பெருமானார்க்கு ஒரு கோயில் கூட கட்ட இயல வில்லையே என ஏங்கினார்.

## பூசலார் கட்டிய மனக்கோயில்

அந்த ஏக்கம் தீர மனதால் கோயில் அமைக்க உறுதி பூண்டார் :

''நினைப்பினால் எடுக்கநேர்ந்து
நிகழ்வுஉறு நிதியம் எல்லாம்
தினைத்துணைமுதலாத் தேடிச்
சிந்தையால் திரட்டிக் கொண்டார்.''

கோயில் அமைக்கத் தேவையான செங்கல், கருங்கல், மணல், சுண்ணாம்பு முதலியவற்றை சிந்தையில் சிறுக, சிறுகச் சேர்த்துக் கொண்டார்.

பூசலார் நினைத்திருந்தால் ஒரு நிமிடத்தில் உள்ளத்தில் எத்துணைப் பெரிய கோயிலையும் கட்டியிருக்கலாம். ஆனால் அதை அவர் விரும்பவில்லை. புறத்தே ஒரு கோயில் அமைக்க எத்துணைச் செயல் செய்ய வேண்டுமோ' எத்துணை நாட்கள் சிரமப்பட

வேண்டுமோ, அத்துணையையும் அவர் அனுபவித்து கோயில் எழுப்ப உத்தேசித்தார். அதனால் அல்லவா அவர் திருத்தொண்டரின் வரலாற்றிலே இடம் பெற்றுச் சிறப்புறுகின்றார்.

பொருட்களோடு கோயில் கட்டும் பணியைத் திறம்பட செய்யும் தச்சர் முதலான தொழிலாளிகளையும் மனதால் தேடி வைத்துக் கொண்டு நாதனுக்கு ஆலயம் எடுக்கக்காதலால் கண் துஞ்சாது, ஆகம முறைபடி கால்கோளிற்கு நாள் குறித்துச் சிறப்புடன் அடிக்கல் நாட்டினார். பல அடுக்குகள், பல சித்திர வேலைப்பாடுகளுடன் கோபுரம் கட்டி முடித்தார்.

''தூபியும் நட்டுமிக்கச்
சுதையும் நல்வினையும் செய்து
கூவலும் அமைத்து மாடு
கோயில் சூழ் மதிலும் போக்கி
வாவியும்தொட்டு மற்றும்
வேண்டுவ வகுத்து மன்னும்
தாபரம் சிவனுக்கு ஏற்க
விதித்த நாள் சாரும் நாளில்''

கோபுரத்தோடு கோயில் கட்டிமுடித்த பிறகு, கோயிலின் முன் தூபி நட்டு, கிணறு எடுத்து, குளம் வெட்டி, கோயிலைச் சுற்றி மதில் சுவரும் அமைத்தார். அதன் பிறகு இறைவனை அக்கோயிலில் பிரதிஷ்டை செய்யும் நாளையும் நிச்சயித்து அந்நாளின் வரவிற்காக, ஆவலுடன் காத்துக் கிடந்தார்.

## மன்னன் கட்டிய கோயிலும் கனவும்

இது இவ்வாறு இருக்க காஞ்சியிலே பல்லவ மன்னன் எம்பெருமான் சிவனுக்கு ஒரு பெரும் கோயில் கட்டி அதைச் சுற்றி உள்ள நிலமெல்லாவற்றையும் கோயிலுக்கு நிவந்தமாக சாசனம் செய்து வைத்து, பூசலார் நாயனார் தம் மனக்கோயிலில் எம்பெருமானை எழுந்தருளச் செய்யக் குறித்த அதே நன்னாளில் பல்லவ மன்னனும் எம்பெருமானைச் கோயிலில் பிரதிஷ்டைச் செய்ய நாள் குறித்தான்.

அடியார்களுக்குச் சோதனைத் தந்து, அதன்பின் அவர்தம் பெருமையை உலகுக்குத் தெரிவித்துப் பெருமைப்படுத்துவது இறைவர் தம் திருவிளையாடல்களில் ஒன்றல்லவா! அதேபோன்று பூசலாரின் பெருமையை உலகிற்குக் காட்டும் பொருட்டு கொன்றை அணிந்த எம்பெருமான் பல்லவ மன்னன் கனவில் தோன்றி 'திருநின்றவூரிலே பூசலார் என்போன் நெடுநாள் நினைந்து கட்டிய ஆலயத்தில் நாளை நாம் செல்லப் போகிறோம். நீ உன்னுடைய பிரதிஷ்டை நாளைப் பிறிதோர் நாளைக்கு வைத்துக் கொள்'' என்று கூறி அருளினார்.



''நின்ற ஊர்ப் பூசல் அன்பன்
நெடிது நாள் நினைந்து செய்த
நன்று நீடு ஆலயத்துப் நாளை
நாம் புகுவோம் நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை
ஒழித்துப் பின் கொள்வாய்''

என்று கொன்றைவார் சடையர் தொண்டர் கோயில் கொண்டருளப் போந்தார்.

கனவில் இறைவன் அருள்மொழிக் கேட்ட மன்னன் திடுக்கிட்டு விழித்து 'ஆகா, எம்பெருமானின் அருளுக்குப் பாத்திரமான அப்பெரும் அருளுடையார் யார், அவரை நாம் உடனே காண வேண்டும். கண்டு அவர் அடிதொழ வேண்டும் என்ற பேரவாவில் தன் பரிவாரம் புடை சூழ திருநின்றவூர் வந்தடைந்தார்.

## மன்னன் பூசலாரைக் கண்டு தொழுதல்

திருநின்றவூர் வந்தடைந்த மன்னன் அங்கிருந்த மறையோர்களை அழைத்து பூசலார் கட்டிய கோயில் எங்குள்ளது என்று வினவ, மறையோர்கள், அப்படியொரு கோயிலைப் பூசலார் கட்டவில்லை என்று கூறத், திகைத்த மன்னன் 'சரி அப்பூசலார் யார்? அவர் இல்லம் எங்குள்ளது?' என வினவினார். வேதியர்கள் தூயவேதியன் பூசலார் இல்லத்தைக் காட்ட மன்னன் பூசலாரைத் தம்மிடம் அழைக்காமல் தாமே அவர் இருப்பிடம் நோக்கித் தம் பரிவாரங்களுடன் சென்றார்.

இறைவன் மீது அளப்பரிய காதல் கொண்ட தொண்டர் பூசலாரைக் கண்டு, மன்னன் தொழுது, 'நீர் இங்கு எண்திசையோடும் ஏத்த எடுத்த ஆலயம்தான் யாது? இங்கு அண்டர் நாயகரைத் தாபித்து அருளும் நாள் இன்று என்று உம்மைக் கண்டு, அடி, பணிய வந்தேன், கண்ணுதல் பெருமான் அருள்பெற்று'' என்று கூறினான்.

மன்னவனின் உரைகேட்ட பூசலார் மருண்டு 'ஆகா! என்னையும் ஒரு பொருட்டாகக் கொண்ட இறைவனின் திருவருளை நினைத்து, 'நிதியில்லாமையால் மனதிலே கோயில் கட்டியதை மன்னவனுக்கு எடுத்துக் கூறினார். அதைக் கேட்ட மன்னன் அதிசயித்தான். 'என்னே அடியார் தம் பெருமை', எனப் பூசலாரைப் பலவாறுப் போற்றி, தன் மாலை நிலத்தில் புரள, நிலமிசை வீழ்ந்து பூசலாரை வணங்கி, தன் முரசு முழங்கும் சேனைகளுடன் தன் இருப்பிடம் அடைந்தான்.

இறைவன் தம் பெருமையை பலவாறு நினைத்து பெருமகிழ்வுற்ற பூசலார், தாம் நினைத்தபடி நல்ல நேரத்தில் இறைவனை மனக்கோயிலில் பிரதிஷ்டை செய்து பூசனைகள் பலவாறு செய்து இன்புற்றார். மனக்கோயிலில் எழுந்தருளச் செய்த இறைவனுக்கு தினப்படி பூசனைகளை ஒருகுறைவும் இன்றி தம் வாழ்நாள் முழுவதும் செய்த பூசலார் பூதவுடல் நீத்து இறைவன் பொற்றாள் சேர்ந்தார் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

# இறைவன் திருவடிப் பற்று

மயிலை சிவஞான ஜோதி சிவசக்தி அம்மையார்



ராகம் : அடாணா     தாளம்: ஆதி

**பல்லவி**

இறைவனின் நாமத்தைப் பற்றிக் கொண்டு
பற்றற்று இல்லறம் பற்று
(இறை)

**அனுபல்லவி**

இல்லறம் பற்றியும் மனதில் பற்றில்லாமல்
இறைவனின் திருவடிப் பற்று (இறை)

**சரணம்—1**

மனதில் நாமத்தைப் பற்றிக் கொண்டு
உடலால் செயல்களைப் பற்று
தாமரை இலைத் தண்ணீர்ப் போலே
பற்றாது இல்லறம் பற்று (இறை)

**சரணம்—2**

பூரண பக்தி பூரணப் பண்பு
பூரணத் தியாகம் பூரண சங்கமம்
பூரண அன்பாம் சரணாகதியாய்
பூரணன் திருவடிப் பற்று (இறை)

**சரணம்—3**

ஆன்ம உணர்வுடன் இல்லறம் பற்று
ஆன்மீக உணர்வுடன் இறைவனைப் பற்று
பற்றற்றான் பற்றினைப் பற்றியே—உடலில்
பற்றியும் பற்றாது பற்று. (இறை)

**சரணம்—4**

உலகோடு பற்றியும் உலகில் பற்று இன்றி
உடலோடு பற்றியும் உடலில் பற்று இன்றி
உடலில் உள்ளத்தில் இறைவனைப் பற்றியே
இறைவனின் திருவடிப் பற்று. (இறை)

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை. சென்னை-600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் ந. அமிர்தலிங்கம், எம்.ஏ. பிஎச்.டி.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம். அரசினர் தோட்டம். சென்னை-600002.



புரசைவாக்கம் அருள்மிகு சீனிவாசப் பெருமாள் ஆலயத்தில் நடைபெற்ற மகாசம்ப்ரோட்சண விழாவில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திருமிகு கா.ப. பட்டாபிராமன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அறநிலையத்துறை துணை ஆணையாளர் திரு ப. ராஜா பி.ஏ.பி.எல்., உதவி ஆணையாளர் திரு வேதமணி, அறங்காவலர் குழுத்தலைவர் திரு. எம். நடராசன் ஆகியோர் உள்ளனர்.



***14-10-1995*-ல்** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் டாக்டர் அம்மமுத்துப்பிள்ளை, எம்.பி.பி.எஸ்., எம்.எஸ்., அவர்கள் திருப்பதி சென்று அங்கு உள்ள வேதபாடசாலை செயல்பாடு குறித்து அந்த முதல்வருடன் ஆலோசனை நடத்தினார். அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு ஆர். சந்தானம், இ.ஆ.ப., ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., மற்றும் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. தர்மலிங்கம் ஆகியோர் உடன் இருக்கிறார்கள்.

